
மற்றெனைத்தவிரவோர்வத்துவந்தரமிலைப்
பற்றெனும்பாசசம்பந்தமற்றார்க்குமேல்
முற்றுபாசனையலான்முத்தியின்மார்க்கமும்
நற்றவேறிலையெனநம்புமாறுரைசெய்தான். (அ)

எண்ணுமிப்பொருளெலாமிலகுகூருமமெனு
நண்ணுபேர்பெறுபுராணத்திலீரொட்டதாம்
திண்ணமாமத்தியாயத்தினிற்றெளியவே
வண்ணவாராழிசூழ்வையகத்தோதுமே. (கூ)

அ - வது, திரிபுரசங்காரப்பரிச்சேதம்.

(வேறு)

என்றாரணவல்லியிதித்தனையும்
குன்றாமல்வியப்பொடுகூறுதலும
நன்றாகுகவென்றுநகைத்தனளாய்
ஒன்றாகமவல்லியுரைத்திடுவாள். (க)

சார்ஙகச்சிலைமாதவனப்படியே
பாங்குற்றபராபரனேயெனிலத்
தீங்குற்றசிவன்றனையோர்விடையாய்த்
தாங்கப்பணியேதுதலத்தெனலும். (உ)

இவ்வாறுபகர்ந்திடுமிந்துநுதல்
சைவாகமவல்லிதனக்கெதிரோ
அவ்வாரணவல்லியருத்தியினல்
மெய்வாய்மைவிரித்துவிளம்பிடுவாள். (௩)

பூதாதிபன்முப்புரிதீயிடுநாள்
மாதாரணிமாமறைமாவிரதம்
பாதாளமுறப்படியச்சுரரங
காதாரமிலாதபயக்குரலாய். (௪)

வானிற்குலையும்பொழுதின்வளமால்
மேனிப்பிரிவாகிவிளங்கியிடும்
ஞானக்கபிலப்பெலநன்முனிவன்
தானுறறவனோர்தறுகண்விடையாய். (௫)

சோரும்புவியைச்சுளியாதுசுமந்
தேரொன்றியலீலையிழைத்திலனேல்
போரும்பொருதப்புரவைரியெனும்
பேரும்பெறுமோபிறைசேர்சடையான். (௬)

என்றுவிதுரைத்திடமற்றவளும்
சொன்னேர்புவிமீதுசுமப்பதுவோ
அன்னீள்பரனுக்கடையாளமதாம்
என்னேயிதுநன்றிதுநன்றெனலும. (௭)

இலையானமருங்கினேயின்னல்செயும்
முலையாரணவல்லிமொழிந்திடுவாள்
சிலையார்புருவத்திருவேயவனே
பலவாமுலகின்பதியாகையினல். (௮)

ஆமைப்பெயராயரவாயிலகும்
தாமப்புயமீதுதரித்திடுமிப்
பூமிக்குளலாதுபுறதுளனோ
ஏமக்கிரிவில்லையெடுத்தபிரான். (௯)

தானேயுலகிற்றனிநாயகனே
ஆனல்விளைவுற்றரவாபரணன்
மேனுளின்மறிந்துவிழும்புவியைப்
பானேர்மொழியாய்பரியாதிடுமோ. (௰)

என்னப்பகர்கின்றவளோடிவளொன்
றுன்னிப்பதினுலுலகுக்கொருவன்
சென்னிப்பிறைசேர்சிவனன்றெனின்மால்
வன்னச்சரமாய்வருமோவெனவே. (கக)

கூ - வது, திரிபுரதகன முயற்சிப்பரிச்சேதம்.

வாளொன்றுகண்ணாரணவல்லியுமுந்
தூளஞ்செறிமேனியர்துட்டபுரம்
மூ.ஞந்தழலிட்டமுயற்சியைநீ
கேளென்றவளோடுகிளத்திடுவாள். (க)

வரத்தான்மிகமிஞ்சியவஞ்சகர்முப்
புரத்தாலிடையூறுபுகுந்திடவச்
சிரத்தான்முதலாகியதேவர்திகம்
பரத்தானுவைவந்துபணிந்தனரால். (உ)

பணிந்தார்மனதிற்படர்துன்பமெலாம்
தணிந்தேநெடிதன்புதழைக்கவரா
அணிந்தாரவர்தங்களையஞ்சலெனுத்
துணிந்தோர்பெருவேள்விதொடங்குதலும். (ந)

உமைதேவியிடத்தவனெண்சடையைச்
சமித்தாகவரிந்துதழற்கிடையிட்
டமைத்தானுயாவேள்வியதிர்ந்திடுதுந்
துமித்தானவமந்திரிசுக்கிரனே. (ச)

திட்டிக்கனல்சேர்சிவனப்பொழுதில்
கிட்டைப்பெருவேள்வியினின்றுமெழும்
துட்டப்புயகங்கடுவன்றிறுகக்
கட்டிக்கறையேறியகண்டனுமாய. (ரு)

வம்மின்சுரரோமருவாரைவெலற்
கும்மொய்ம்பினிலேயொருபாதியுமப்
பம்மின்பசுவின்பதியாம்வரமும்
தம்மென்றுபிராத்தனைசெய்திடலும். (சா)

வரம்வானவர்நல்கினர்வன்பகைமேல்
விரவாயெனில்விண்ணவரோயெனிலும்
பெரியானொருசாரதியைப்பெறின்முப்
புரநூறுவனிப்பொழுதேயெனலும். (எ)

திடம்பற்றிமொழிந்திடுதேவர்களால்
உடன்பட்டொளிரொண்மலர்மேலுறைவான்
விடமபற்றியகந்தரன்மேவியதோர்
தடம்பொற்புளதோதனையுந்தினனால். (அ)

தளத்தாமனையான்றடந்தேர்விடமைக்
களத்தானெடிதாகியகாலமெலாம்
விளைத்தான்மிகுபோர்விளைத்தாலுமெவீந்
திளைத்தாரிலைமூவெயில்வாழ்பவரோ. (கூ)

அவ்வேலையினெஞ்சழிவுற்றுநெடும்
செவ்வார்சடிலச்சிவனின்றமைகண்
டெவ்வானவருந்தொழுவேமகிறப்
பைவாளரவிற்றுயிலும்பரமன். (ம)

ஒப்பற்றபவுத்தவுருக்கொடுபோய்
முப்பொற்புரர்தம்மொடுமோகனமே
செப்பித்தவமேன்மைசினைதத்துமனம் .
ஐப்பற்றுதல்செய்துமயக்கியபின் (மக)

குன்றாதசிறக்குணநற்பசுவாய்
நின்றானதுகண்டுநெடும்புவியில்
துன்றாதரவோடுதொடர்ந்துசெலும்
கன்றாயினனக்கமலத்தவனே. (கஉ)

ஆவுஞ்சிறுகன்றுமடைந்தடையார்
மேவுமபுரிபுக்கபின்வெவ்வினையோர்
சீவன்சமமாகியதெள்ளமுதின்
கூவந்தனைநண்ணியகொள்கையினால். (கங)

அச்சேடமதாமமுதத்தையெலாம்
நிச்சேடமதாகநினைந்துநுகர்ந்
துச்சாகமதாகியவொண்பசுவும்
பொய்ச்சார்வுளகன்றொடுபோகியதால். (கச)

அதுபோதிலனைத்தறிவுள்ளசிவன்
சதிராலரிபஞ்சரமந்திரமுன்
விதியாருபதேசவிதிப்படியே
மதியான்மகிழ்வுற்றுவளைந்தனனால். (கரு)

அரிபஞ்சரமிட்டரிசதநிகொடே
கிரியென்றுளசொற்கிளாவில்லுமெடுத்
தெரியுங்கணைதொட்டிகலானவர்மூப்
புரிவென்றனனின்புகழ்சூடியநாள். (கசு)

ம-வது விஷ்ணுசிவன்முன்னிலையில்திரிபுரத்தையெரித்தப்பரிச்சேதம்

சரமாய்மிகுபஞ்சரமாயுலகின்
பரமாமெருதும்பசுவென்பதுமாய்
உரமாயரணுக்குயிராயமூப்
புரமாகியநூல்புகழ்புத்தனுமாய். (க)
நின்றானெடுமாலெனுநிச்சயநூல்
ஒன்றலலவேயுரைசெய்வதுநான்
மின்றானெனவேமிளிர்பூணணிபொற்
குன்றுமுலையாய்குறிகொள்ளுதியால். (உ)
சோதிப்புகழ்சோசுரர்பாலவாதம்
பாதிப்பெலமும்பசுவின்பதியாய்
ஓதப்புவிமேலுயரும்வரமும்
தீதற்றிடுமச்சிவன்பெற்றமைதான். (ங)
ஈறேதுமிலாவெசுமாமறையூ
டாறாகியகாண்டமதிற்பொருளாய்
வீறுமிரண்டாம்பருச்சம்மிகவே
தேறாதவருந்தெளியப்பகரும். (ச)
அரிபஞ்சரமென்றகிலம்புகழத்
திருமந்திரமச்சிவனுக்கயனுர்
உருகும்பரிவானுபதேசமளித்
தருளுங்கதைநாரதியந்தனிலும். (ரு)
ஓரொன்றியமந்திரசாலமெனும்
பேரெண்ணரிதாம்பிரபஞ்சமெலாம்
சாரஞ்செய்தநூறனினுந்தெளியப்
பாரிங்கறியும்படியேபகரும். (சு)
உருகிச்சடைகொண்டியரோமமுகம்
புரிவுற்றதுமுப்புரிபுக்கமுதம்
பருகப்பசுவானபழம்பொருளும்
கருதிற்றிகழ்பாகவதத்துளதே. (எ)

வாரித்துயில்வார்மதிமேவுசடா
தாரற்கொளிரந்தரியாமியுமாய்
மேருச்சிலைகொள்ளமிடுக்குமளித்
தாரொன்றுசொலுந்தகுவான்மிகமே. (அ)
எருதேறிறைமுன்பெனிலும்பெரியான்
ஒருசாரதிதமமெனவும்பொலாம்
பிரமாவையமர்த்தியபீடுறுசொல்
பரிவான்மொழிகின்றதுபாரதமே. (கூ)
அரிபுத்தவுருக்கொடகன்புரியார்
விரதத்தையழித்தவியன்கதையைப்
பரவப்புவியிற்பதுமத்துடனே
உரைபெற்றறிவமுசமுரைத்திடுமே. (ம)
மக - வது, விருத்திரன்கதையை-திரிபுரதகனததுக்கு வுதாரணப்பரிச் [சேதம்.

(வேறு.)

அன்னநடையாய்மாமுனேயடையார்புரிசெற்றனனுலை [கதைகேள்.
பொன்னின்சடையான்முன்னிலையாய்ப்பொர வென்னென்னிலொரு
துன்னுந்திறல்சோசிரமுனரும்த்துலங்குபுகழ்விச்சுவரூபன்
பின்னருதித்ததோன்றல்விருத்திரனென்றுளனோபேரவுணன். (க)
தந்தைவரத்தாற்றினமோரோர்சரபாதங்கடடித்துயர்ந்து
முந்துமுலகஙகளுமண்டமுகடுமெட்டவளர்தலுமே
சிந்தைதிகைத்துவானவர்கோன்றிருமாறன்னைத்தியானிக்க
வந்துவிழிகருமுன்னின்றுன்மலரின்மடந்தைமணவாளன். (உ)
நின்றநெடுமாலடிபணிந்துநேமிப்புயலேயென்பகையாம்
வென்றிபுனைவேல்விருத்திரனும்வெய்யோனொருவனுளொன்றுக்
கொன்றிங்கோரோர்சரபாதமுயராநின்றுனவன்றன்னை
இன்றுவதைப்பதொழிந்திடிவ்வுலகம்போதாதிடமென்றுன். (ங)
அன்னான்வளர்ச்சியுலகுக்குமனைத்தாமுயிர்க்குமமரர்க்கும்
இன்னுதென்பதறிந்தருளியெழில்சேர்மாலுமிமையோர்க்கு
மன்னுவந்தவக்கிரமவடிவேலவுணன்வானானை
உன்னுலின்னுண்முடிக்கின்றேனெருமித்ததனுக்குபாயங்கேள். (ச)

இந்திரன்முன்னிலையில்ஸ்ரீஹறப்பதியானஈஸ்வரன்
விருத்திரனைவென்றகதை.

ஓங்கித்தறித்தால்வாய்மடியுமுயர்வச்சிரத்திலொருகூறும்
பூங்கற்பகத்தார்பொருந்தியநின்புயபூதரத்திலொருகூறும்

வீங்கற்புதமேருவைநிகர்க்கும்விருத்திரன்மெய்விழும்பொழுது
தாங்கப்புவியிலொருகூறுமாகாமனேதரிக்கின்றேன். (ரு)
வெல்வாயவனைவினாந்தென்றுன்வெண்கோட்டயிராபதத்தானும்
நல்வாரிதியிற்றுயின்மேவுநாராயணனைவிடைகொடுபோய்ப்
புல்வாய்கண்டவரிவேங்கைப்புலிபோனிருகண்பொறிசிதற
வல்வாய்வயிரப்படைதன்னுல்வதைத்தான்மாண்டான்வல்லவுணன். கூ
அன்னபடியேபோன்மன்றலனிசேரோதியாரணங்கே
பொன்னின்வரையேசிலையாகப்புரமூன்றெரியப்பொருதாற்கு
மன்னுநெடுமால்வெகுவிதமாம்வடிவாய்நின்றங்கருள்செய்தான்
உன்னுமூலகிலிவைதமையுத்தரவான்மீகமுறைத்திடுமால். (எ)

மஉ - வது, உருத்திரனுனபாத்திரத்தில் பெருமாள்
காளகூடவிஷபாரணப் பரிச்சேதம்.

(வேறு.)

என்னவாரணவிளங்கொடியிவையெலாமிசைப்பப்
புன்னைவார்குழலாகமவல்லியும்புகல்வாள்
அன்னமேயரியத்தனைசத்திமாறுனல்
மன்னுபாற்கடன்மந்தரத்தாற்கடைந்திடுநாள். (க)
செங்கரங்குலைந்திமையவர்திசைதொறுமோடப்
பொங்கிமேல்வருங்காளகூடத்தினைப்பொருநீர்க்
கங்கைவேணியன்கந்தரத்தடக்கியகாலத்
தெங்கிருந்தனன்றெளியநீயியம்புதியென்றாள். (உ)
மறுவிலாகமவல்லியிவ்வாசகமுரைப்ப
நிறைகொளாரணப்பாவையும்வேலைசூழ்நிலமேல்
இறைவனுலகாலத்தினைநுகர்ந்தமையெல்லாம்
உறுதியாகநீகேளெனவுரைசெயலுற்றாள். (ஙு)
முத்தைவென்றிடுமுகிணகைக்கன்னன்மாமொழியாய்
இத்தலம்புகழ்ந்திடவிளங்கிருக்குவேதத்தில்
அத்தியாயமெட்டாவதிலடைவுகுன்றுமல்
வைத்தசீரிருபத்தின்மூன்றுனவர்க்கத்தில். (ச)
தேங்குசீர்புனையுருத்திரனுனபாத்திரத்தால்
ஓங்குநாரணனுகர்ந்தனன்விடத்தையென்றேதும்
ஈங்கிவ்வாறுரைத்திட்டவேதப்பொருட்கிசையப்
பாங்குசேர்புராணங்களும்பகர்ந்திடும்படிகேள். (ரு)

பகவத்ஸ்ருபானுபவத்திலரனுக்குக்கிடைத்த
விஷசமர்ப்பணமென்றறிக.

நத்துவேலைவாய்விடமெழக்கலங்கிவிண்ணவர்கள்
உத்தமாசலமொன்றினில்யோகசிந்தையனாய்
முத்தியாசையாற்றவஞ்செயுமுக்கண்வானவனைப்
பத்தியாலடிபணிந்தனர்தங்குறைபகர்வார். (௬)

தேவர்தோத்திரஞ்செய்யலுஞ்சிகரமாவிமயப்
பாவைவாண்முகப்பங்கயந்தனையரன்பார்த்துக்
காவியங்கணாய்கலங்கியவிவர்க்குபகாரம்
மேவுமன்பினால்யாமினிச்செய்தலேவேண்டும். (௭)

உலகின்மேலுபகாரங்களொருவருக்கொருவா
இலகுமன்பினாற்செய்வனசெய்வனவெல்லாம்
சொலினவர்க்கவர்க்கேயலவொன்றுபல்லுயிர்க்கும்
அலகிலந்தரியாமியாமாலுகந்தருளும். (௮)

ஆதலாலறவாழியானுக்குகப்பாகத்
தீதிலாதவித்தேவருக்கின்னலைத்தீர்த்துப்
பேர்தவெம்மையாய்ப்புகைபரந்தங்கியிற்பொங்கும்
ஓதைவேலைநஞ்சுண்பனென்றுகணத்தென்றான். (௯)

இந்துநேர்நுதல்வல்லியேயிந்தவாறெல்லாம்
உந்துதெண்டிரைவேலைசூழுலகுளோருவப்ப
முந்துபாகவதத்தினிலஞ்சுடன்மூன்றும்
கந்தமேழதாமத்தியாயத்தினிற்கழறும். (௰)

பட்டவானுதல்வல்லிகேளின்னமும்பயிலும்
திட்டிமூன்றினன்கருடவாகனத்தியானத்தால்
வட்டவாரிதிநஞ்சையுண்டேனென்றுமகிழ்வால்
கட்டுரைத்தவாறுரைசெயுங்காருடகவசம். (௰௧)

அன்னமென்னடையாயிழையேயிவையன்றித்
தன்னைநேரிலாநாமமூன்றினையுமுச்சரித்து
நன்னிலம்புகழ்கருடவாகனத்தியானத்தால்
கன்னிமேவியபங்கினன்காளகூடத்தை. (௰௨)

பரிகினேனெனப்பகர்ந்தமைபதுமமாபுராணத்
துரைசெயுத்தரகாண்டத்திலோங்கத்தியாயம்
நிரைகொண்மூப்பதோடேழதாய்நிகழ்வதுநெடுநீர்த்
தரையின்மாந்தர்களுக்கெலாம்வெளிபெறச்சாற்றும். (௰௩)

அடருமாமலர்க்குழலினுயாதலினலே
கடிதுநெற்றியங்கண்ணினிற்காமனைக்காய்ந்த
இடபவாகனற்கந்தரியாமியாயிருந்து
விடநுகர்ந்தருள்பரம்பரன்விண்டுவேயென்றாள். (௰ச)

ரு-வது, சர்வசங்காரவத்து நிருணயப்படல முற்றும்.

ஆ படலம் உஅ-இ - திருவிருத்தம்-ருஎஅ.

அரிதாசர்திருவடிகளேசரணம்.

சு-வது, வரபாலனப்படலம்.

க-வது, கைலாயயாத்திரைப் பரிச்சேதம்.

(வேறு.)

என்னமறைவல்லியிதுகூறவுயராகமவிளங்கொடிசொல்வாய்
அன்னநடையாயரவணைத்துயிலுமாதிபரனுகிலவன்முன்
மன்னன்வசுதேவன்மகனுனவவதாரமதின்மைந்தனருளென்
றின்னருளரன்றனையிரந்ததரிவமுசமியல்பாய்மொழியுமே. (க)

என்றலுமியற்சுருதிவல்லிநகைசெய்தொளிருமிந்துநுதலாய்
மன்றல்புனைநெஞ்சடிலமௌலிமகதேவனைமகற்றருதியென்
றன்னுமலர்மங்கைபதிசென்றதுவுமுள்ளததனுக்கவனிடம்
மின்றவழ்மணிச்சிகரவெள்ளிமலைநாதனும்வியந்தருளியே. (உ)

பேசுமலராசனனுநானுமுதலுன்னிடைபிறந்ததுகொடே
கேசவனெனும்பெயர்கிளைத்தனைசெகத்ததுகிடக்கமறைநூல்
சாசுவதமாகவளர்நீமருவுமிந்தவவதாரமதிலும்
ஓசைபெறுநாரணகுமாராகளனேகமையுகந்துதவினய். (௩)

அப்படியிருக்கவுமகன்றபுவியிற்புதல்வரற்றவர்கள்போல்
இப்பொழுதுநாடகநடித்தபடிநன்றெனவிசைத்தருளியே
செப்பமிகுகைம்மணிமுழக்கிநிறைதூபமொடுதீபமுமளித்
தொப்பரியமாயனைமகிழ்ந்துபசரித்தகதையோடைநுதலாய். (ச)

அற்பவிடையாகமமடந்தையும்வியப்புடனதற்குரைசெய்வாள்
சற்பவணையானுமைபதிக்கதிபனும்பரவுதந்தையுமெனில்
சொற்பெறுபசுந்துளவமாலையணியந்தமதுசூதனன்முன்னன்
நற்பரசுபாணிவரராமவவதாரமதினுடறியவே. (ரு)

எங்கள்சிவன்மெய்ப்பிரிவதானசமதக்கினியிடத்தவதரித்
தங்கயிலைவெற்பணுகியந்தவரனைகுருவுமாகநெடுநாள்
இங்கிதமுணர்ந்தனுசரித்துவரிவிற்றொழிலியற்றியிடுமோ
மங்கலமிகும்புவனமீதெனலுமச்சுருதிவல்லிமொழிவாள். (சா)

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

மெய்த்தயதரற்கவதரித்துமிகுகோசிகவிருத்தமுனிபால்
எத்தகையவித்தையுமியற்றிமகிழ்வுற்றனனிராகவபிரான்
அத்தயரதப்பதியுமப்பெரியகோசிகவருந்தவனுமே
உத்தமவிராகவனின்மேலவர்களோவெனவுரைத்திடலுமே. (எ)

வாசிபெறுமாகமமடந்தைபகர்வாளரிமகத்துவமெலாம்
பாசுபதமாகணைதனஞ்சயர்பெறும்படிபணிக்கயிலைவாழ்
ஈசனையிரந்ததுகொடேயறியலானதெனவின்னளிகளின்
பூசலொழியாவளகவாரணமடந்தைகிளிபோன்மொழிகுவாள். (அ)

சீர்முழுப்பெரும்புவனநாயகனசோதைதருமெங்கள்பெருமான்
தாரணியிழந்தநருமற்கரசளிப்பதுதமக்கருமைபோல்
வீரவரவத்துவசனுக்கிதமுரைத்தவன்வெறுத்திடவுமஞ்
ஞூரருளுகென்றனனவன்கபடநாடகமுரைக்கவெளிதோ. (௯)

உ-வது, அரன் அறவாழியை ஆராதித்தபரிச்சேதம்.

என்னவியலாரணமடந்தையிதெலாமினிதியம்பியிடலும்
புன்னைமலரோதிமயிலாகமமடந்தைபொருள்கொண்டுமொழிவாள
கன்னன்மொழியாயரியையித்தனைமதிப்பிறைடுகெட்டுரைசெய்தாய
அந்நயனபுண்டரிகனாகியமுகுந்தனரவாபரணனை. (௧)

பத்துநூறெனதிருநாமமிகுமன்பொடுபடித்தருளிநீள்
புத்தியாலேதனதுகண்மலரிடந்துமகபூசனைசெய்தே
நெய்த்தசீராழியையிரந்தபடிதிண்ணமிதுநிற்குமிருநால்
அத்தியாயத்திலுயர்கூருமபுராணமடைவாகியிடவே. (௨)

ஏருலவுபாரபரதனுளவனமேவியவிராகவபிரான்
வீரவரராவணனைவென்றபின்மகோததிவிளங்குதரையில்
தாரணியும்வேணியனையன்பொடுபதிட்டைசெய்ததன்மைதனையும்
பாருலகிலக்கமடநூல்பலதிருத்தமொடுபண்ணியிடுமால். (௩)

மறறிதுவுமன்றிமயிலேபுவிமதித்தவுபமன்னியுவெனும்
சீறறவனிடத்திலுபதேசமதுபெற்றருளிநந்தகுமரன்
நெற்றிவிழிஈனையுபாசனைசெய்தானதுவுநீடுகடல்சூழ்
உற்றபுவிமீதுபிரசித்தியெனமேன்மைபெறவோதியிடவே (௪)

ஆரநகையாரணமடந்தையும்வியப்புடனதற்குரைசெய்வாள
நாரணனுமாபதியையர்ச்சனைசெய்தங்கவனயங்கவருளால்
ஏரமர்சுடர்த்திகிரிபெற்றனனிலத்தெனவெடுத்துரைசெய்தாய்
சிரணியுமந்தவணியாழியினியறகையுரைசெயவனதுகேள். (௫)

எய்த்திடாவாசகமிருக்கிலுயரட்டகமதேழிலொருநால்
அத்தியாயத்திலுமிதன்றியெசுமாமறையிலாரணமதின்
மொய்த்தசீர்மூந்தியபரிச்சமதிலெட்டிஞெடுமூன்றடைவிலே
வைத்தஞாலத்தவர்வடித்தநலமேவுமனுவாகமதிலும். (௬)

உத்திகூர்சாமமதிலுத்தரவிருக்கினிடைவொன்பதெனநீ
டத்தியாயத்தினும்விளங்கநருவத்துமிவையன்றிநிலமேல்
வத்துவாகும்பிருகதாரணிபம்விஞ்சுகடவல்லிதனினும்
சுத்திகூராழிதனைவேறுமறைசொல்லியதுறைத்துறைதொறும். (௭)

அந்தவறவாழியரவிந்தவிழிமாலெனவனுதியெனவும்
சந்ததமவன்றனதுமூந்துடமையாயனுசரிக்குமெனவும்
எந்தவுலகத்தினும்வியாபகமதாகியவனேவல்வழியே
நிந்தைபுனேதுட்டர்களைநீறுசெயுமென்னவுநிகழ்த்தியிடுமால். (௮)

வைத்தசீர்மாமறையுரைத்தவதனுக்கிசையவஞ்சியிடையாய்
பத்திசேர்விண்டுவின்புராணமுதலங்கிசமிருபத்திருதிறத்
தத்தியாயத்திஞெடுபாகவநநூலிருபதஞ்சினுடனே
சித்திகூரும்பகுதிதத்துவவிதத்தினதிதேவதையதாய. (௯)

திருந்தியபிராகிருதமன்றியொளிதுன்றிமிகுதிவ்வியமுமாய்
வருந்திகரியாதிகளைநீடுலகழிந்திடுமகப்பிரளயம்
பொருந்தியிடுமூழிகளினுங்கிளர்சுரும்பினணிபொங்கியமணம்
தருந்துளபமாலையரிதஞ்சமுறவன்பொடுதரிக்குமெனவும். (௰)

அந்தவொளிசேருமணியாழியவனுணையிலனைத்துலகமும்
சிந்தியிடுமூழிதொறுமென்னவும்விளங்கும்வகைசெப்பியிடுமால்
உந்திடபவாகனனுமந்தவறவாழியையுபாசனைசெய்தே
முந்துதிரிசூலவயில்பெற்றிலகினேனெனமொழிந்தருளினான். (௰௧)

இன்னபயனச்சுருதிநாலினுடனஞ்செனவிசைத்துரைசெயும்
பன்னரியபாரதகதைக்குளியல்கண்ணனுயர்பருவமொழியும்
அன்னநடையாய்பொருளிதாதலினரன்றனதிதேவதையதாம்
மின்னிலகுமாழிதனைமால்பெறவழங்கியதுமெய்ம்மையலவே. (௰௨)

௩-வது, மோகனநூலுற்பத்திப் பரிச்சேதம்.

என்றுசுருதிக்கொடியிசைப்பவியலாகமமெனுந்தெரிவையும்
நன்றுரைசெய்தாயிமயநங்கையொருபங்கனிடைநாகவணையான்
வென்றிகொள்சுடர்த்திகிரிபெற்றதிலையாகிலவன்மெய்ம்மைபெறவே
சென்றுமகபூசைதனையேன்மகிதலத்திடைசெயக்கருமமே. (௧)

வேறு.

என்றுகமப்பாவையிவைகூறவெழிலாரணக்கோதையும்
மன்றார்குழற்றோகையேயீதோர்பொருளாய்வகுத்தோதினாய்
குன்றாதகுணமேருநிகரற்றகோதண்டகுருராகவன்
தன்றாதைதாய்சொன்னமொழிபாலனஞ்செய்ததலைநாளிலே. (௨)
வரமந்திரத்தெய்வமுனிவோர்கடாம்வைகிவாழ்கின்றவாச்
சிரமந்தொறும்புக்கருச்சித்துமம்போதிதீரத்திலே
உரமுந்துவருணன்றனைச்சென்றுபாசித்துமொன்றேசெய்தான்
அரமன்னுகண்ணைப்சொல்லவரும்பரந்தாமமாவார்களோ. (௩)
இதுசிறகவாராகமென்னும்புராணத்திலெழுபானுடைஞ்
சுதவத்தியாயத்துருத்திரப்பெருங்கீதையுள்ளாகவே .
மதுவுற்றபொற்கொன்றைமாலைச்சடாதாரமகதேவனிப் [டுகேள்.
பொதியத்துமுனியோடுமுன்சொன்னகதையொன்றுபொருள்கொண்
மருவுள்ளகமலாசனன்றனைப்பெற்றுமகிழ்நாளிலே
பெருவெள்ளமேயன்றிவேறொன்றுகாணப்பெறாதுற்றநான்
விரிவுள்ளவெள்ளத்தினிற்கண்டுகொண்டேன்வியப்பாகவே
உருவுள்ளநீலத்தடங்கொண்டலொப்பானவொருவத்துவை. (௫)
பேரின்னதிவனுக்கெனுந்தன்மையறிகின்றபேராசையால்
ஆரிங்குநீயென்றுவினவப்பரந்தாமமாய்நின்றவன்
ஈரொன்றுபுவனங்களீரேழினுக்குஞ்செழுஞ்சோதிநான்
ஏரொன்றுதிருநாமநாராயணன்காணெனக்கென்னவே. (௬)

ஆதிவராகபுராணத்தில் ஆதிநாராயணர் அம்பிகாபதிக்கு விஸ்வரூபதரிசனம்கொடுத்து தனது ஈஸ்வரத்வமும் சங்காரதவமும் வரம் அனுக்கிரகித்தகதை.

அந்நாமதேயத்தைநெடுநாளுகந்தோதியறிவுற்றபின்
நன்னாகசயனப்பரந்தாமனேயிங்குநன்றாகநின்
பொன்னானதிருமேனிதெரிகின்றதிலையென்றோர் பொருள்செல்வம்
மின்னாயமணியாழிமாலீய்ந்தனன்ஞானவிழிதன்னையே. (௭)
மாசற்றஞானத்தடங்கண்களாலந்தமணிவண்ணனார்
தேசுற்றவுருவத்தில்வெகுகோடியண்டங்கடிகழ்கின்றதும்
ஆசற்றமலருந்திதனினான்முகத்தேவனவதாரமும்
ஏசற்றவந்நான்முகத்தேவனிடைநானிருக்கின்றதும். (௮)
பேராதரங்கூர்தரக்கண்டுதுதிசெய்தபின்னாகவே
கூராழிநெடுமாயனருள்பொங்கிவரமின்றுகொள்கென்றலும்

சீரானவீசத்துவத்தோடுசர்வஞ்ஞசீலத்துவமும்
ஏராருமூவர்க்குளொருமூர்த்தியாமாறுமீகென்னவே. (௯)
அருள்செய்துமகிழ்கின்றவயன்மேவுதிருவுந்தியரவிந்தன்முன்
மருள்செய்குணத்தோடெண்வடிவத்தையுங்கண்டுமேற்றொலாம்
பொருள்செய்துதுதியார்களேயென்றுநானும்புகழ்நதோதவத்
தெருள்செய்தஞானத்தர்சிந்தைக்குளுறையுஞ்செழுஞ்சோதியும். (௰)
நின்னைப்புகழ்ந்தண்டரண்டந்தருந்தெய்வநீயென்றுகொண்
டென்னைப்பரந்தாமமென்னுமன்முனிவோரிடத்துஞ்சொல்வித்
தநுட்டமதிநீயுமடர்பொய்யைமெய்யோடடுத்துண்மைபோல்
பன்னிப்பரப்பானமாமோகநெடுநூல்கள்பண்ணென்னவே. (௰௧)
மிக்குற்றமகிழ்வோடுநான்மோகவெகுநூல்விரித்துச்சொல்கேன்
அக்கற்பிதத்தாமதச்சிற்பநூறன்னிலமரும்பொருட்
கொக்கத்தலத்தென்னைவெகுமானநீசெய்துகப்பாயெனச்
சக்கரப்படைச்செங்கைமணிவண்ணனிமையோர்கடந்தம்பிரான். ௰௨
நந்துங்கடற்பாரிலுளகண்டகப்பேர்கணல்லாவிவான்
உந்தும்படிக்கங்குவருகின்றவவதாரவுருவத்தினும்
வந்துன்னையர்ச்சித்துவரமுங்கொள்வோமென்றுவரநல்கினேன்
பைந்தென்றறருவெற்பினுயநாளும்வெகுமானபதியாயினேன். (௰௩)
என்றின்னசொல்லைத்தனிததோதினென்செய்கையீதாதலால்
பொன்றுன்றுகொன்றைச்சடைச்சங்கரனைநீடுபுவனத்திலே
மின்றன்னைநகுமாழிமாமாயன்மகபூசைவிநயஞ்செய்தான்
அன்றன்னவன்கொண்டவரபாலனஞ்செய்வதற்காகவே. (௰௪)

௪-வது, வரபாலனத்துக் குதாரணப்பரிச்சேதம்.

மருவுற்றகுழல்வல்லியேயிங்கிதற்கொக்கமகபாரதத்
துறைபெற்றநாராயணீயத்தினிறசொல்லியுளவாய்மைகேள்
முரசகொடித்தன்மபூபாலனஞ்செய்யமுளரிக்கணால்
அருள்மிக்கவசுதேவன்மைந்தன்றனைச்செம்பொனடிபோற்றியே. (௧)

உலகைப்படைத்தற்களித்தற்கழித்தற்குகப்பாகியே
அலகற்றவிளையாடல்புரிகின்றவொருமூர்த்தியாய்நின்றநீ
சலிலச்சடைத்தேவர்முதலோனையபிவாதனம்பண்ணியே
பலவர்க்கமகபூசையுஞ்செய்ததற்கேதுபணியென்னவே. (௨)

ஆவின்குலம்வாழமழைகாக்கமலையொன்றையன்றேந்திடும்
கோவுஞ்சொல்வானீடுமுலகத்திலுளசீவகோடிக்கெலாம்
மேவந்தரான்மாவும்யானாகையாலங்கிவிழிநெற்றியந்
தேவன்றனிதயத்துநானேயிருக்கின்றசெயறிண்ணமால். (௩)

அதனுலியானேயெனேப்போற்றியாராதனம்பண்ணினேன்
இதுநான்செயாதேயிருந்தால்மகிபாலவென்மேனியாம்
மதிவேணியன்றன்னைமற்றோாகளர்ச்சிக்கமதிசெய்வரோ
கதிர்சூழுமூலகுக்கியான்செய்ததேசெய்கைகண்டல்லவோ. (ச)

உரந்தாவுபுயவீரவிதுவன்றியெனின்மிக்கவொருதெய்வமும்
வரந்தாவெனக்கென்னவென்பாலிலாவைபவமுமில்லையால்
பொருந்தாதரத்தாலுனக்கிந்தவுண்மைப்பொருள்கூறினேன்
தெரிந்தேகொளென்றுனிதன்றேவவன்மாயைசெயும்வண்ணமே. (ரு)

எனவிச்செளன்மறைவல்லிசொலவாகமப்பாவையிறையோனேமால்
மனமுறறவரபாலனப்பூசைசெயவங்குவந்தானெனில்
கனமிக்கபிரமத்தியார்சன்னிதிக்கேகழித்தானெனத்
தனுவொத்தநுதலந்தமறைவல்லியொருவாசகங்கூறுவாள். (சா)

பிரமததியாகின்றபிரசங்கமந்தப்பெருங்கூர்மமாம்
வரமாபுராணததுமிலைவான்மிகத்தும்வழங்காததாற்
றிரமற்றவண்மைப்புராணத்தின்மன்னுந்திறஞ்செப்பவந்
துமைமாட்சியர்னீயியற்கைசசொல்சொன்னலதொப்பாகுமோ. (எ)

அல்லாமலதுவேசுபாவச்சொல்லன்றென்னிலருமாமறைக்
கெல்லாம்விருத்தந்தருஞ்சுத்தசாத்திகமென்றேதிடுமெ
சொல்லார்விசாலப்புராணப்பொருட்குந்துவக்கில்லையால்
வில்லார்நுதற்கோதையேயுண்டதற்கின்னம்விபரங்களே. (அ)

வடவைப்பெருந்தீயின்மேல்வந்தோர்பனிவந்துவலிசெய்யினும்
சுடாமிக்கநேமிக்கைநெடுமாலையத்தீமைதொடவல்லதோ
மடலுற்றமலரோதியாயாகமச்சீாமடந்தாயதற்
கடைவொத்தபிரமாணமுளவோதுகின்றேனதன்போடுகேள். (கூ)

ரு-வது, கண்டாகன்றன் பரிச்சேதம்.

வேறு.

வண்டார்செம்பொன்மயம்பெறுகொன்றைத்
தண்டாமம்புனேசங்கரனுர்மேல்
உண்டாகும்பரிவாலுயர்ஞானக்
கண்டாகன்றனெனுங்கதிர்வேலான், (க)

புவியிற்பாசமெனும்பொறிசேரும்
நவையற்றோர்புகழ்நாரணநாமம்
எவிதத்தாலுறுமோவெனவெண்ணிச்
செவியிற்கண்டைசெழிப்பநடப்பான். (உ)

அருந்திவசங்களநேகமுடம்பு
வருந்திநிரந்தரமாண்மழுவெய்தி
இருந்தகரத்தனிரங்கிடுமாறு
திருந்துதவங்கள்சிறப்பொடுசெய்தான் (௩)
ஒழிவிறவத்தையுகந்துகரத்தோர்
மழுவமரீசன்வரங்கொளனத்தோள்
எழுவைநிகர்க்குமியக்கர்கள்கோமான்
அழிவறுமுத்தியையருளுதியென்றான். (௪)
முத்தியையருளுதியென்னலுமுன்னோர்
அத்தியுரித்தவனப்பொருளேநின்
புத்தியிலிட்டமெனிற்புகழ்மாலைப்
பத்திசெய்வந்துபலித்திடுமென்றான். (௫)
ஈதுனைசெய்யவியக்கனதிங்கே
நீதரிலென்னெனநின்றுபிணங்கக்
கோதறுமுத்திகொடுப்பவன்மால்வே
றேதுபதங்களிலுய்த்திடுவோம்நாம். (௬)
என்றலுமாலையிகழ்ந்திதுகாறும்
புன்றொழில்செய்தனமென்றுபுலம்பா
வன்றிறலங்கவன்வன்செவியிற்சேர்
மின்றிகழ்கண்டையைவீசியெறிந்தே. (௭)
அப்பெருமுத்தியளித்தருள் கூரும்
மைப்புயல்மேனிவலம்புரிமாயன்
எப்பொழுதென்கணெதிர்ப்படுமென்றே
ஒப்பறுகாசிலுறைந்திடுநாளில். (௮)
அந்தவனந்தனிலங்கொருநாண்மைக்
கந்தரன்வாழ்கயிலைக்குநடப்பான்
வந்துதரித்தனன்மாதுலன்வாணாள்
சிந்தியமால்வசுதேவகுமாரன். (௯)

பேரருளாளன்கண்டாகன்றனுக்குலிங்கபத்திவிட்டபிறகு அவனது பிரமஹத்திதீர்த்தத்துக்காகஉதகரித்தஇக்கதை.

ஆணிப்பொற்கலையானருளாளன்
மாணுற்றவ்வழிவந்தனனென்னப்
பேணிச்செய்தபெருந்தவனென்றும்
காணிக்கைப்பொருள்கண்டிலனாகி. (௰)

மெய்த்தவர்தம்மொடுவேள்விசெயுஞ்சீர்
உத்தமவேதனொருத்தனையன்னான்
குசதிவதைத்தகொடும்பிணமுன்னே
வைத்திருபாதம்வணங்கினன்மாதோ. (மக)

மன்றலர்பாதம்வணங்கிடுவானோ
டின்றிதுசெய்ததெனிப்படியென்றே
வென்றிகொண்மால்சொல்மேதகுகண்டா
கன்றன்மகிழ்ந்திதுகட்டுரைசெய்வான். (மஉ)

விதிப்படிநான்முறைவேள்வியநேகம்
மதிப்பொடுசெய்தமகத்தவனுவி
பதைப்பவதைத்ததுமின்றுபழிப்பில்
புதுப்பிணமென்றிருபொன்னடிதாழ. (மங)

கண்ணனவன்செயல்கண்டுநகைத்திங்
கெண்ணமுனக்கினியேதெனவோடும்
புண்ணியமிக்கபுராதனருக்கு
நண்ணருமுத்தியைநல்குதியென்றான். (மச)

கண்டைசெவுப்புடைகட்டினனும்
உண்டுமனத்தினுமொண்பெயரின்றும்
தண்டலில்பத்திதழைக்கையினாலே
கொண்டனைமுத்திகொடுத்தனமென்றான். (மரு)

சு-வது, நிற்வேறுதுகவைபவப்பரிசசேதம்.

அப்படிமுத்தியளித்தனமென்றே
இப்புவனங்களோரேழுளமாயன்
செப்பமகிழ்ந்துசெருக்குமியக்கன்
ஒப்பறுவாசகமொன்றுரைசெய்தான். (க)

பொன்னார்நேமிபொருந்துகையாய்கேள்
உன்னுவின்னமுமோருபகாரம்
இன்னுளிங்குளதேதெனிலென்றன்
பின்னனுண்டோர்பெருந்திறல்வீரன். (உ)

அன்னவனுக்குமளித்தருள்வாய்நீ
என்னொடுமுத்தியெனத்தொழுவானின்
பின்னவன்முத்திபெறும்படியென்மேல்
உன்னிகர்பத்தியனேவெனவோத. (ங)

நின்மேலன்புளநீர்மையிலானீ
என்மேலன்புகொடுதியெனப்பின்
உன்மேலன்பினனோவெனவோத
என்மேலும்பரிவில்லவனென்றான். (௪)

அன்பான்மாலுமவன்றனைவீரா
என்பாலன்பிலனென்னருளைச்சேர்
உன்பாலன்பிலனுற்றவனென்னே
தன்பான்முத்திதரும்படியென்றான். (௫)

ஆனவியக்கனுமச்சுதவென்மேல்
தானவமானசதஞ்செயுமேனும்
நானவன்மேன்மிகநண்பினைவைத்தேன்
ஆனமையாலருளத்தகுமென்றான். (௬)

ஏரணிமாயனுமெம்மைவிரும்பும்
பேரொழினின்னருள்பெற்றவனன்றோ
ஆரொவனாகிலுமாகுகவின்பம்
கூரியமுத்திகொடுத்தனமென்றான். (௭)

ஏத்தாவன்பிவனுக்குமிவன்றன்
மூத்தானுக்குநன்முத்தியளித்தே
நீத்தாநின்மலநெஞ்சில்விளங்கும்
பூத்தாமப்புயபூதரமாலும். (௮)

கொன்றவனின்றுகொணர்ந்தசரீரத்
தொன்றியசீவனுமொண்புவிநின்றும்
சென்றுயர்முத்திசெறிந்திடுமாறே
நன்றியினல்வரநல்கினன்மாதோ. (௯)

ஈதறிவம்சமியம்புமணங்கே
ஆதலின்மாலடியார்கடமக்கும்
பாதகமென்பதுபற்றுதலுண்டோ
ஓதெனவாகமவொண்ணுதல்சொல்வாள். (௰)

வன்புகழ்மாலிடைவல்வினைசேரா
தென்பவள்போலரனெஞ்சவில்பத்தர்க்
கன்பொடுமுத்தியளித்திலனென்றாய்
மின்பொலிவாணகைவேதமடந்தாய். (௰௧)

அந்தமிலாதவனைத்துயிருக்கும்
முந்தியகாசியின்முத்தியளிப்பான்
இந்துமுடித்தருளீசரனன்றோ
பைந்திரைசூழ்தருபாரினிலென்றாள். (௰உ)

எ-வது, கைலையாளிக்குப்பிரமத்திதீத்தபரிச்சேதம்.

வேறு.

வாசிபெறுமாகமமடங்கையிதுகூறமறைமாதுமொழிவாள்
காசணிதனத்துமயிலேயனையதாங்கிகழ்காசிவளமும்
பேசுமதிசூடுசிவனங்குறையுமாலினருள்பெற்றமையுமப்
பாசுபதமுத்தியருடன்மையுமுறைப்பனதுபண்பினொடுகேள். (க)

ரீதவனமாநதிசெழுஞ்சடிலமேவியதிகம்பரன்முனாள்
வேதனொருசென்னியையறுத்தமகபாதகமிகத்தொடர்கையான்
மாதவனதாகியவளம்பெரியகாசியினைவந்தணுகினான்
ஆதவனையஞ்சுமிருள்போலகலநின்றததிபாதகமரோ. (உ)

தொடாநதுவருபாதகமகன்றபடிகண்டுமதிசூடுசடையான்
மடந்தைவளாமாபனைவணங்கிமதுசூதனாநின்மாநகரையான்
அடைந்தளவின்முன்னையதிபாதகமகன்றதவனித்தலமெலாம
நடந்தகழறேய்வறவளாந்திலகினேனெனநவின்றருளவே. (ங)

காசிநகர்மாதவனுநேயமுறவேகரளகந்தரனுடன்
தேசுறுசுவாகதமுரைத்துவெகுமானமவைசெயதருளிநின்
மாசறுமணிசசிகரவெள்ளிம[illegible]மேன்மருவிவாழமதியால்
வீசுகிலவார்சடையினையகறியென்னவிடைகொண்டருளியே. (ச)

தாண்டுவிடையேறியுயர்காசிநிலமாகியதலத்தையகலத்
தூண்டியிடவேகமொடுதொல்லைவினையானதுதொடாந்துகொளலும்
மீண்டடிபணிந்தருளிவெள்ளிமலைநாயகன்விசும்புமுழுதும்
நீண்டுலகளந்தமுதல்வாவினையகேளெனநிகழ்த்திடுவான். (ரு)

அ-வது, காசியைகபாலிக்குப்ரசாதித்தபரிச்சேதம்.

முப்புவனமெங்குமுழல்போழ்துமகலாமலெனைமொய்த்துவருமச்
செப்பரியபாதகமுன்னொல்லைபுகவஞ்சியயல்சேமமுறநின்
றப்புறமகன்றளவில்வந்துதொடர்கின்றவதனைலசினேன்
இப்பெரியகாசிதனில்யானினிதிருக்கவரமீதியெனவே. (க)

கண்ணன்மகிழ்வுற்றிலகுகாசிநகரைப்பெருகுகங்கையெனுமப்
பெண்ணையமர்விததசடையற்குதவிநீடுபிரயாகைதனிலே

நண்ணினனெனப்பகருநாரதியமச்சிவனுநாளதுமுதல்
புண்ணியமிகுத்துவளர்காசிதனதாயெழில்பொருந்தினனரோ. (௨)

'௯-வது, ஸ்ரீராமதாரகப்பிரமமந்திர உபதேசப்பரிச்சேதம.

கண்ணுதலெனுங்கடவுள்கங்கையுமையாகுபதிகந்தனுடனே
நண்ணியுயர்காசியிலிருந்துசகலர்க்கும்வரநல்குவதுகேட்
டெண்ணரியயோகியருஞானியருமெய்த்தவமிழைத்துவளரும்
புண்ணியருமப்பதியோடாறிடமறும்படிபுகுந்தணுகினார். (௧)

பூசியிடுபூதியர்புனைந்தசெபமாலையர்பொறுத்தசடையர்
ஆசையருசிந்தையினைவகையெழுத்தினைவழுத்துமுரவோர்
தூசிலகுவற்கலையர்நெற்றிநிமிரும்புருவர்சோர்வொழியவே
நாசிமுனைவைத்தநயனத்தருயர்முத்திதனைநச்சுதலுமே. (௨)

இத்தகையமாதவமிருந்தவர்கள்காமியமெமக்கரியதாம்
முத்தியெனிலாங்கதனையெப்படிகொடுத்தினிமுடிக்குவமெனா
அத்தியையுரித்தருளுமற்புதனனைத்துலகுமாளுடையவன்
புத்திசெயுமவ்வளவில்வந்தனன்விளங்குலவுபுண்டரிகனே. (௩)

வந்தமலராசனனையீசன்மகபூசைவழிபட்டருளியென்
புந்தியிலிருந்தகுறைபோயதெனநின்றெதிர்புகழ்ந்திடுதலும்
சிந்தையினினைந்தபொருள்யாவதெனநின்னருள்சிறந்துளவெனக்
கெந்தையரிதானபொருளில்லையெனவோதியிதிசைத்தனனரோ (௪)

செப்பரியமுத்திதருதெய்வமெனவென்னையிவர்சிந்தனைசெய்தே
இப்பெரியமாதவமிழைக்குனர்கண்மற்றிவருநின்னருளினால்
ஒப்பரியபேறுபெறநானுதவவேதினியுபாயமெனலும்
மைப்பயின்மிடற்றமலனுக்குயர்கிராணமதிவாசமலரோன். (௫)

வண்மைபெறுதாரகமகப்பிரமமானதிருமந்திரமுகந்
துண்மையுபதேசமுறவோதிபிதுகங்கைநதியொண்கரையிலே
திண்மைபெறுகாயம்விடுவாசெவியினீயுரைதிருந்தவரும்
நுண்மைபெறுமுத்தியுறுவாரெனமறைந்தனனொடிப்பொழுதிலே (௬)

அன்னவுபதேசவரமந்திரமெலாமினிதறிந்தருளியே
மன்னுயிரனைத்தினையுமுத்தியுறுவித்தரன்மகிழ்ச்சிபெறுமால்
இன்னசொலகத்தியவிராமவரசங்கிதையியம்புமிதுவும்
பன்னியுரைசெய்யினவகண்டவுலகத்தின்மிகுபாடமெனவே. (௭)

௬-வது, வரபாலனப்படல முற்றும். ஆ திருவிருத்தம் - ௮௫.

அரிதாசர் திருவடிகளேசரணம்.

எ-வது, சைவாகமவிதிப்படலம்.

க-வது, திருநீற்றுப்பஞ்சாட்சரப் பரிச்சேதம்.

வேறு.

அன்னவாசகங்கேட்டாகமக் கொடியுமறைகுவாளாரணை மடந்
தாய், பன்னகாபரணனி ராமமந்திரத்தாற் பாரின்மேன் முத்தியீகின்
றான், என்னவேயுரைத்தாயாகமப்படியாலெழிற்சிவதீக்கைபெற்றுயர்
வோர், தன்னைநேரில்லாமுத்திசேர்வதற்குச்சந்தயந்தான்சிறிதுளதோ.

தெய்வவெண்ணீற்றின் மகிமையுமறையிற்றெரிந்தபஞ்சாக்கர
ச்சிறப்பும், மெய்வருமுருத்திராக்கதாரணமுமிகுசிவபூசையின்விதியு
ம், கைவருஞ்சரிதை கிரிகையோக முடன்காட்சிசேர் ஞானத்தினியல்
பும், சைவசித்தாந்ததத்துவபேதத்தன்மைதொண்ணூறுமோராறும் (௨)

பரிவுடன்பஞ்சப்பிரமமுன்னுணர்ந்துபரசிவன்றனையுறுபண்பும்
விரவியநிருமாலியவிசேடணமும்வீரமாயேச்சுரசமய
தருமமாமிலிங்கதாரணத்தியல்புந்தகுசிவபுராணமேன்மையுநீள்
சுருதியின்சமானமானவாகமத்தின்சொலும்பரமார்த்தநிச்சயமும் (௩)

தெரிந்தபோதன்றிச்சிவனதுமகிமைதெளியுமோசெவ்வரிபரந்த
கருந்தடங்கண்ணாயெவரொவர்க்குந் தாங்கண்டதே காட்சியாயிராதோ,
விரிந்தவிப்பொருளைச்சுருக்கியொன்றொன்றாய் வெளிபெறவிளம்பிவு
ன்மனத்தைப், பொருந்துவிக்கின்றேன்கேட்டியாலென்றுபுலப்படப்
புகலுவதானாள். (௪)

சிந்தூரநுதலாய்தொல்லைநாள்விளங்குந்தெய்வலோகத்திடைநின்று
மிந்தலோகத்தைப்பவித்திரமாக்கவிழிந்தன பசுக்களினினங்கள்
அந்தமேன்மையுளபசுக்களுக்கன்பாலருந்து தற்குரியனபசும்புல்
தந்துமுன்வைத்தங்கவைபொசித்ததற்பின்றருகமும்புனலினூற்றணித்து

சத்தியோசாதமந்திரத்தாற்கோமயந்தனைத் தரைவிழாதேற்றுச்
சித்தியாம்வாமதேவமந்திரத்தாற்றிரளைசெய்தகோரமந்திரத்தால்
வைத்துலர்த்தித்தற்புருடமந்திரத்தால்வளர்பெருங்கனலிட விளைவித்
தித்தலம்புகழீசானமந்திரத்தாலெழில்பெறவிளைந்தபினெடுத்து. (௬)
பன்மலர்சுகந்தம்பற்றுவித்தந்தப்பவித்திரநீற்றினைப்புனலின்
முன்முழுகிப்பின்முழுதுமுத்தூளமுறைமுழுகுதல்விதியென்றும்
இன்மலர்ப்புனலின்முழுகுவதரிதாயிருந்துளவிடத்தினிலெழில்சேர்
நின்மலநீறேயாடுதலசுத்தநெடுநிலமாந்தருக்கென்றும். (௭)

இலகுநீறுத்தூளஞ்செயுமிடத்தீசானமந்திரத்தினாற்சிரமும்
பொலியுமானனந்தற்புருடமந்திரத்தும்பொங்ககோரத்தினான்மார்பும்
நலமிகுவாமதேவமந்திரத்தானாபியுமவயவமுழுதும்
அலகறுசெஞ்சொற்சத்தியோசாதமானமாமந்திரத்தாலும். (௮)

முறைபிறழாமற்றரிப்பதுதானே முக்கியமாந்தருக்கென்றும்
நிறையுமுத்தூளமியன்றிலதாகினீடிரிபுண்டரந்தனையே
அறிவுடன்றரிப்பதமைந்திடுமென்றுமந்தமுப்புண்டரந்தரிப்ப
துறுவதற்சனிமத்திமையநாமிகையென் றோதுமங்குலிகளாலென்றும்

மொழியுமத்திரிபுண்டரக்குறிதான்மும்மூர்த்திகண்முழமையமென்றும்
அழகுசேர்திருவெண்ணீற்றினைச்சிரமேயாதியாவடைவுகுன்றாமல்
வழுவறுபாதம்பெருவிரலீறுவளமைகூறாகமத்தடைவே [தும்.
எழுதிடமெண்ணுங்கெண்ணிரண்டிருநாலீரிரண்டேக மென்றிசைத்

சிரத்தினிலயனுநெற்றியிற்குகனுந்திகழ்கழுத்தினிற்கணபதியும
நிரைத்தட்ந்தோளினீடுகேசவனுநிறைந்திடுமார்பிலீசுரனும்
சுரித்தவுந்தியிற்பிரசாபதிதானுந்தொடைகளிலச்சுவினிகளும்
உரைத்தபாதத்திலுரகருமிவர்களுயரதிதேவதையென்றும். (௧௨)

தாழ்விலாவிந்தநீற்றினையணிவார்சகலதீர்த்தம்படிபலனும் [றும்
வேழ்வியாயிரஞ்செய்துள்ள புண்ணியமுமேவுவர் புவியின்மேலென்
சூழ்விசாலச்செஞ்சொல்லினுல்விளகுஞ்சுப்பிரபேதவாகமத்தில்
வாழ்வுகூறாரும்படலம்வெண்ணீற்றின்மகிமையைப்பகர்ந்திடலாலும்.

இங்கிதற்கிசையவதருவசிரத்திலெண்ணுமஞ்சானகாண்டத்தில்
தங்குபாசுபதவிரததீக்கையினைச்சாற்றியதகைமைசோதீக்கைக்
கங்கமாநீற்றுத்தூளனவிதியுமதற்குமந்திரங்களுமமைத்துப்
பொங்குமந்நீற்றுத்தூளனமுத்திபொருந்துவித்திடுமெனலாலும் (௰௩)

திருவெண்ணீறெனப்பதொருபொருளில்லைத் தெரிந்தபஞ்சாக்
கரச்சிறப்பும், சுரிகருங்குழலாய்சொல்லுவேனதுதான்றூலபஞ்சாக்க
கரமென்றும், விரவுசூக்குமபஞ்சாககரமென்றும்வேதவேதாந்தவேரா
ன, பிரணவமுறுபஞ்சாககர மென்றும்பேதமூவேழதாய்ப் பிறக்கும்.

தேசுறுமிந்ததிருவெழுத்தைந்துஞ்சிவன்றிருமுகங்களைந்தினிலும்
மாசறவந்துதோன்றியாகமத்தில்வளம்பெறவளாந்துவாய்த்துளவால்
காசிபன்கௌசிகன்பரத்துவாசன்கௌதமனத்திரியென்போர்
ஆசறுமந்தவெழுததொளைஞ்சிற்குமடைவிலேயிருடிகளாகும். (௰௫)

பெருகுசீரனுட்டுப்புத்திருட்டுப்புப் பிருகதிசெகதிமாசெகதி,
விரவு மிப்பஞ்சாககரங்களுக் கடைவேமிக்க சந்தங்களின்விகற்பம்,
பொருவருங்கறுப்புச் செவப்புநீள்பச்சைபொன்மைவெண்மைகணிற
ம,பொலிவாம்தரைபுனலங்கிவாயுவாசாயந்தகுதியாம் பூசததத்துவங்கள.

சத்தியோசாதன்வாமனகோரன் றழைத்ததற்புருடனீசானன்' சித்தியாமதிதெய்வதங்கண்மற்றந்தத்திருவெழுத்தைந்தோடோங்காரம்,வைததுவேதியர்க்குச்செவிப்பதுவிதிதமற்றுளபேர்க்குமங், கையாக்கும், சுததமாம்பஞ்சாக்கரத்தையே செவிக்கத்தொல்லையாகமம்விதித்துளதால். (௰எ)

இன்னவஞ்செழுத்தின்மந்திரசெபத்தாலிகபரசித்தியாமென்று
சொன்னதுமாறுகியபடலத்திற்சுப்பிரபேதாகமத்துளதால்
அன்னதற்கெல்லாம்புவனதிட்டாந்தமாகவஞ்செழுத்தையுச்சரித்துத்
தன்னிகரில்லாச்சிவபதமடைந்தோர்தங்களுக்கெண்ணிலக்குளதோ.

உ-வது, உருத்திராக்கப்பரிச்சேதம்.

அன்னவாகமத்திலறைந்தவப்படலத்தப்புகச்செஞ்சொலாரணங்கே
தன்னைநேரில்லாவுருத்திராக்கத்தின்றகுதியும்பகரநீதான்கேள்
கின்னரரியக்கர்சுராசுராமுனிவாகேசராகெருடாகந்தப்பா
மன்னிநின்றுபயமலரடிபோற்றவண்கயிலாயமால்வரையில் (க)

வளர்பெருந்தெய்வவருடமாயிரங்கண்மணங்கமழ்மலரெனமயங்கி
அளியினம்பிறைமேறகதுவுசெஞ்சடையானணிமிடநயனனுயிருக்க
ஒளிகிளரவன்றன்கண்கணீர்மல்கியுகுபுனற்றுளிகள்பன்மணியாய்
விளைவுபெற்றதுமற்றந்தமாமணியேவிளங்குரீருருத்திராக்கமதால். (உ)

மற்றவைதம்மிலொருமுகமுடையமணிசிவனிரண்டுமாமுகத்தைப்
பெற்றதுசத்திமும்முகநாதம்பிறங்குநான்முகத்ததுவிந்து
முற்றுமைம்முகத்தசதாசிவமாறுமுகததசதிசுரனெழுமுகத்தை
உற்றதுருத்திரனெண்முகத்ததுவிண்டொன்பதுமுகத்ததுபிரமன் (ங)

தெய்வமாமணியின்சிறப்பிதிம்மணியைச்சிகையினிற்காதினிற்கழுத்தில், கையினிற்றரித்தலிதுசிகைமீதுகருத்துறத்தரித்தல்கோடிபலம, துய்யகாதணியில்நூறுகோடிபலந்துலங்குகண்டத்தினிற்றொடுக்கில், ஐயிருநூறுகோடிநற்பலங்கைக்கணிந்திடிலனந்தகோடிபலம்.(ச)

ங - வது, சிவபூசைப்பரிச்சேதம்.

ஆகியதெய்வவுருத்திராக்கத்தினடைவெலாமறிந்தவாறுரைத்தேன்
மேகநேர்குழலாயாகமத்தியல்பான்மிகுசிவபூசைபின்விதிகேள்
ஓகைகூர்சிவனைச்சரிதைகிரியையோகஞானங்களால்விருப்பம்
ஆகவேயாராதிப்பரிந்நாலுமடைவிலொள்ளொன்றுநால்விதமாம். (க)

சரிதையிற்சரிதைசரிதையிற்கிரியைசரிதையிற்யோகமெஞ்ஞானம்
உரைசெயிலடைவினுதமேனையவுமோங்கியசரிதையாவதுதான்

திரமிகுகோயிலெடுத்தனந்தவனஞ்செயறிருமாலைகள்சேர்த்தல்
மருவியதீபந்திருமெழுக்கிடுதன்மற்றுமிப்படிவழிபடுதல். (௨)

கிரியையாம்பதத்திலிருமறைபுகலுங்கிருத்திவாசன்மகபூசை
இருவகையாகுமாத்துமார்த்தமுடனெழில்புனைபார்த்தமுமென்று
குருவழியிலிங்கந்தண்டிலங்கனிகங்குளிர்புனன்மண்டிலமென்ன
உரைசெயுமைந்துமாத்துமார்த்தப்பேருகந்துபூசனைசெயுந்தலங்கள் (௩)

இங்கிவிற்கணிகலிங்கமீராறுண்டெவையவையெனிலெழின்மணலும்
கொங்கலர்பூவுஞ்சந்தனமுஞ்சற்கோமயந்தானுமோதனமும் [ர்
தங்கியமாவுமக்காரமும்பழமுந்தடினியின்மண்ணும்வெண்ணெயுஞ்சே
பொங்கியவுருத்திராக்கமாமணியும்புல்லுமென்றாகமம்புகலும். (௪)

எழின்மணன்முத்திசந்தனஞ்செல்வமிலங்கியமலர்பிணியின்மை
அழகியநற்கோமயம்பிணிநாசமன்னமண்ணாதிகாமங்கள்
பழமொடக்காரம்பிரியம்புற்றானேபகர்மனோகரமுருத்திராக்கம்
தழைபலபலமாவெண்ணெயிட்டார்த்தந்தடினிமண்சம்புசாரூபம். (௫)

சொலுமிதுநிற்கச்சகலருமீடேறும்படிதொல்பதிதோறும்
நலமிகுதேவரிருடிகண்மனிதர்நாமநூலாகமப்படியே
அலகறுபதிட்டைசெய்தவுஞ்சுயம்புவானவுமாகியவிலிங்கம்
பலவையும்பூசைபண்ணியிச்சித்தபலம்பெறுகின்றதுபரார்த்தம். (௬)

இனையனவானவிலிங்கபூசனைசெய்திடுவதற்கருகமாயேற்கும்
துனியறுபஞ்சசுத்தியாகமத்திறசொல்லுமச்சுத்திகளைந்தில
புனிதநீர்தன்னைவிதிமுறையாடல்பொலிவுகூர்தேகசித்தியதாம்
அனையநீராடிவடதிசைநோக்கியதன்கரையேறியங்கிருந்து. (௭)

பரவுமத்திரமந்திரத்தினாற்றிக்கைப்பந்தனைசெய்தநாமிகையாம்
விரலினால்வாமநாசியைநெருக்கிமெய்யில்வாழ்வாயுவைவலத்தும்
மருவுநாசியினாலிரேசகஞ்செய்துமற்றதுதனைப்பெருவிரலால்
புரைவறநெருக்கிவாமநாசியினாற்புலப்படப்பூரகம்பண்ணி. (௮)

நாசியினிரண்டுபுறத்தையும்வாயுநடையறவிரல்களானெருக்கிப்
பேசுகும்பகஞ்செய்திவ்வகைப்பிராணாயாமமூன்றினைத்திடம்பெற்றுத்
தேசுறுபொன்மைவெண்மைமாசெவப்புச்செறிகருப்புப்புகைநிறமாய்
ஆசறுசதுரம்பிறைதிரிகோணமாறுகோணாழிமண்டிலமாம். (௯)

ஒழிவறும்பிரமாவாதியாம்பஞ்சமூர்த்தியேயூர்த்துவமுதலாய்
விழுமியதேவாய்மிகுலகராதிவிளம்புவீசாக்கரமுடைத்தாய்
எழில்புனைபாரநீர்தீவளிவானென்றெண்ணுமைம்பூதத்தினிடமாம்
செழுமுழந்தாளுநாபிகந்தரநெற்றிசிரமெனச்சிறந்ததேகத்தை. (௰)

அலகறுங்கலமேயாதியாய்வீசாக்கரங்களையடைவுறநிறுத்தி
நிலைபெறுமிதயஞ்சிரஞ்சிகைகவசநேத்திரமந்திரங்களுடன்
தலைமையாயோதிச்சிவமயமாகித்தழைத்தபாசுபதவத்திரத்தால்
கிலமுறும்படியேயமுந்தியேபஞ்சாக்கிராந்தியைசேதனஞ்செய்து (கக)

அங்கிபீசத்தாலாக்கையைத்தகனமாக்கியவ்வாக்கையினுள்ளே
தங்குமாவியைச்சங்காரமுத்திரையாற்றகவுறவறிவினல்வாங்கித், துங்க
மாஞ்சிகையில்வியோமகளுதித்துலங்கியசைவதத்துவத்தில், தங்கவொ
ன்ருக்கிவெந்திடும்புரியின்றன்மையாய்ப்பொலியு மிவ்வுடலில், (கஉ)

பேணியவமுதப்பிலாவனஞ்செய்துபிரணவயோகபீடமுமாய்
மாணுறுபிரமரந்திரத்தினில் வெள்வனசத்தையதோமுகமாக்கிச், சே
ணுறுமந்தவமுதிலான்மாவைத்திரம்பெறநனைத்ததாய்நினைத்து, பூணு
றுமுடலிற்பொருத்திலச்சரீரம்புகழ்ச்சிவசரீரமாய்ப்பொலியும். (௰௩)

சிட்டிசங்காரந்திதியெனுநியாசத்திறங்களின் விகற்பமோர் மு
ப்பத், தெட்டையுஞ்செய்துதன்னையன்னிலையி லெழிற்சிவனுகவேயெ
ண்ணித், தெட்டநாபியினில்வன்னிமண்டிலமுமிதயத்திற்சோமமண்
டிலமும், வட்டமாம்புருவநடுவினிலிரவிமண்டிலந்தானுமாய்வகுத்து.

இதயமாந்தலத்திற்பூசைசெய்துந்திபிடத்திலோமத்தினைவளர்
த்து, நுதனடுவாகத்தியானமுஞ்செய்துநுண்ணியவறிவினிலிதய, பது
மமேலுறையும்பராபரன்றன்னைப்பண்புசேராகமம்பகரும், விதியினு
லாராதனைசெய்யுந்திறனேவிளங்கியவாத்துமசுத்தி, (௰௫)

தேசிகன் சிவன் சந்நிதியினிலிருந்துதிரம்பெறவொருகை நீள
த்தால், ஆசறவிளங்குமண்டிலமெழுதியதிலலங்காரவாபரணக், காசி
னிதனையாவாகனஞ்செய்துகருதியவிதயமந்திரத்தால், பூசனைசெய்து
திக்கையும்பந்தம்புரிவதுதானசுத்தியதாம். (௰௬)

மருவியசராவங்கரகநற்படிக்கம்வலம்புரிமஞ்சனகும்பம்
விரைமலர்த்தட்டமருக்கியகலசம்வேறுமாமுபகரணமெலாம்
இருமையத்திரமந்திரத்தினல்விளக்கியிதயமந்திரத்தினற்பார்த்து
முரண்மிகுகவசமந்திரத்தாலேமூடியம்முறைகளாற்றிறந்து. (௰௭)

கங்கையுங்கரகந்தன்னையஞ்சுத்தசலத்தினுற்பூரிதமாக்கி
அங்கதிற்பிரமமஞ்சையுஞ்சடங்கமதனையுநியாசமாயமைத்துத்
தங்குசீர்வலக்கைத்தலத்தினுலேவீசாக்கரநியாசமும்பண்ணி
மங்கலவிலிங்கமுத்திரையுடனேவனசமுத்திரையையும்வகுத்து. (௰அ)

வாய்த்தசங்கத்திற்பூரிதமாக்கிவைத்தமந்திரப்புனலாலே
பாத்திரமனைத்தும்புரோக்கணைசெய்துபண்புடனிருத்தியபின்னைச்
சூத்திரந்தவறுச்சந்தனம்புட்பந்தூபதீபங்களுங்கொடுத்துச்
சாத்திரப்படிப்பாரிப்பதுதானேதகைமைசேர்திரவியசுத்தி (௰௯)

சங்கராலயத்தைத்தேசிகனணைந்துசந்நிதித்தலத்துவந்தித்து
மங்கலக்கோயில்வாயின்மேலாகவலத்திடதனிலுமத்திமத்தும்
பொங்குமைங்கரவெண்கலைமகள்கமலப்பூமகளென்னுமூவரையும்
துங்கமானமனப்பூசனையாகச்சோடசோபசாரணைசெய்து. (௨௰)

வாயிலின்வலத்தும்வாமபார்சுவத்துமங்கலக்கங்கைநந்தீசன்
ஏயசீர்புனையும்யமுனன்மாகாளனென்பவர்தம்மையர்ச்சித்துக்
காயும்வேல்விமலன்சுவாகுவென்போரைக்கதவினிற்பூசனைபுரிந்து
தூயசந்நிதியிலிடபவாகனத்தைத்துலங்கவாராதனைசெய்து. (௨௧)

நாமவத்திரமந்திரத்திறற்கண்டாநாதமுஞ்செய்துபின்னிதயச்
சேமமந்திரத்தாற்றிருத்திரைநீக்கித்திரம்பெறக்கெற்பமந்திரத்தில்
ஏமுறவணுகிமுன்னைநாட்சாத்தியிருந்தநின்மாலியங்கழித்துத்
தோமறுபுதியநாண்மலரொன்றுதுலங்கியமுடியினிற்சாத்தி. (௨௨)

களைந்தனவெல்லாஞ்சண்டன்மேற்சாத்திக் கைகளையிலிங்கமந்திரத்தால், விளங்கவேகழுவியிலிங்கபீடத்தை விமலபாசுபதமந்திரத்தால், உளங்களிகூரநீடபிடேகமொருமையாற்செய்வதுதானே, வளங்கெழுமலர்சேர்கருங்குழன்மயிலேமகிமைசேரிலிங்கசுத்தியதாம். (௨௩)

மருவியபூசாவேளையிற்சகலமந்திரத்தைதயுநமவந்தம்
பிரணவமாதியாகவுச்சரிக்கப்பெறுவதேமந்திரசுத்தி
திரமதாமிந்தப்பஞ்சசுத்தியையுந்தெளிந்தவனேசிவபூசைக்
கருகனுஞ்சோமசூரியசரத்திலானபூசனைசெயலாகா. (௨௪)

நாசிகளிரண்டுஞ்சமமுறவாயுநடந்திடும்போதுசங்கரனைப்
பூசனைசெய்யிற்சபலமப்படியேபூசனைதான்செயுமிடத்தில்
ஏசறுசத்திசிவமெனுமிரண்டுமிலிங்கமும்பீடமுமாகித்
தேசொடுவிளங்கும்பூவொடுமணமுந்தேகமுஞ் சிறந்தசீவனும்போல்.

புனிதமாயொன்றுக்கொன்றுமேலாகப்பொருந்தனந்தாசனஞ்சிங்கா
சனமுடனேயோகாசனம்பதுமாசனம்விமலாசனமென்ன
வினியவாசனங்களைஞ்சுளவதன்மேலிறையையாவாகனஞ்செய்து
தினமுமாகமநூன்முறையினர்ச்சிப்பார்சேர்வர்சாமீபமாம்பதமே, ௨௬

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

இத்திறமெல்லாங்காரணாகமத்திலிருபதோடுத்துநாலான
அத்தியாயத்திலருச்சனைப்படலத்தடைவுறவேபகர்ந்திடுமால்
மததவாரணத்தின்மருப்பெனத்திகிரிவாகமாம்புள்ளெனக்கனகச்
சித்திரகலசத்துணையெனவளருஞ்சிகரகுங்குமத்தனத்திருவே. (௨௭)

௪-வது, சிவதீட்சைப்பரிச்சேதம்.

சரிதையேகிரியையோகஞானமெனுஞ்சதுவிதபாதசித்திக்கும்
அருகமாந்திக்கைமகிமைமேகளாசானங்கியைசிவாக்கினியாக்கி
உரியமாணாக்காதம்மையன்புடனேயுத்தரமுகமதாய்வைத்துப் [யது.
பொருவருங்கரகந்தருப்பையைப்பதித்தப் புனலினாற்புரோக்கணைசெ

மிக்கவத்திரமந்திரத்தினான்மெய்யில் வெண்பொடி தூளனஞ்செய்திட்
டகுசப்புல்லாற்றுடைத்துமேதகுகாலாக்கினிமந்திரத்தாலே
முக்கியசரீரந்தனைத்தகித்துடனேமொய்சிலமுத்திரையாலும்
தக்கசிவனில்வீசாக்கரத்தாலுந்தகனமாமுடல்பரிசித்து. (௨)

இதயமந்திரத்தாலிதயமாதியதாயெண்ணுந்தானங்களைத்தொடுவித்
ததுகொடச்சிவ்பதத்தையுங்கொடுத்தாசாரியன்வலக்கரந்தன்னை
இதமுறயோகபீடமாய்ப்பண்ணியிட்டுவித்தேசாசூழ்ந்திடத்தின்
மதிமனோன்மணிவாழ்சதாசிவன்றன்னைமனங்கொடாவாகனம்பண்ணி

மருவுதேசிகனச் செங்கையை மூக்கான்மகிழ்ந்து மாணாக்கன்
மத்தகத்தில், பரிவுறவைத்துச் சதுரமண்டலத்தைப் பண்ணிநீடருப்
பையும்படுத்து, விரவுமீசான மந்திரநியாசமிக்க வெண்டிசையினும்
பண்ணிக், குருபரன்சிவன்சன்னிதியில்வைத தகண்டகோடிவத்திரத்
தினாற்சூழ்ந்து. (௬)

அந்தணர்முதலாநாலுசாதிக்குமபிநவநாமமுஞ்சாத்தி
முந்தியகுருவினிழலுடன்றனக்குமூத்தவர்நிழலிங்கநிழல்கள்
வந்துழிகடவாமலுஞ்சிவதீக்கைமருவிடாமடமகள்புணர்ச்சி [ம.
புந்தியிலெண்ணாமையுஞ் சிவனூலைப்புறஞ்சொலிப்பழித்திடாதமையு

தேசிகனைப்பின் செல்கையும் பத்தர்திரத்தைநிந்தனைசெயாத
மையும், ஈசுரநிருமாலியந்தொடாமையுமென்றெண்ணியசமயமோ
ரெட்டும்,மாசறவுபதேசித்துநீடத்துவம்பதவருணமாவுபனம், ஆசிலா
நன்மந்திரங்கலையென்னுமத்துவாவாறறிவித்தும். (௬)

இலங்கியவித்தேசுரர்கணேசருலோகேசர்தேசாத்திரரென்னும்
வலம்வளர்தேவர்தமைக்குறித்தவர்தம்மந்திரத்தாவுதிபண்ணி
நலங்கிளர்பூசாங்கிரமமுந்திருத்திநற்குருநனிதுநீணிலத்தில்
வலஞ்செயும்படிமாணாக்கனுக்குபதேசிப்பதுவேசிவதீட்சை. (௭)

இன்னவெல்லாஞ்சப்பிரபேதமென்னுமாகமத்திலாகப்
பன்னியபடலத்துரைக்குமிப்படியேபசுபதிதீக்கைபெற்றவர்க்கே
மன்னியசரிதைகிரியையோகமுடன்மருவியஞானசித்தியெலாம்
கன்னிலத்தெய்துமிதாருக்கெய்தாநயனமற்றெவர்வழிநடப்பார். (அ

இ-வது, பசுபதிபாசசிவயோகப்பரிச்சேதம்.

பஞ்சிமெல்லடியாய்பசுபதிபாசப்பண்புகேள்பராபரமயமாம்
எஞ்சலில்வித்தைதத்துவத்திடைநின்றெழில்பெற வாத்துமாத்தோன்
றும், விஞ்சுமவ்வான்மாசுத்தமாயொளியாய்விமலமாயறிவாய்விளா
கும்வஞ்சமாயையிலைச்சூழ்ந்திடப்படலான்மற்றதுபசுவெனவழங்குப

ஆகியமாயைத்துவக்கிலான்மாவுக்காசையுமோகமுஞ்சுகமும்
சோகமுந்துயருங்கோபமுமிகுசந்தோடமுஞ்சகசமாய்த்தொடரும்
நாகவல்குலினுயவைகளெண்பத்துநான்குநூறுயிரபேதப்
பாகுபாடானயோனியில்வந்துற்பவிப்பதுமரிப்பதுமாகும். (உ)

செப்புழிச்சீவன்சிவன்றரிசனத்தாற்றீட்சையாற்சிறந்தபூசனை
யால், ஒப்பிலாயோகத்தாற்பெறுஞானவொளிவிளக்கைக்கொடஞ்ஞா
ன,வைப்பதாமிருளைத்துடைத்துமாத்தாண்டன்மறைத்தன்மாசறவிள
ங்குவதும், மெய்ப்படுகுடத்துட்டீபமக்குடந்தான்விண்டிடவொளிர்வ
தும்போல. (௩)

ஈசனதருளாற்பாசம்விட்டேகியிவனதாஞ்சகலகன்மத்தின்
வாசனையுடலைப்பற்றியேயிருந்துமடிந்துடன்மாண்டநாண்மாளும்
ஆசறுபெருங்காயம்பொதிபரணியப்பெருங்காயமாண்டுந்தான்
நாசமாமளவும்வாசனைவிடாமைநசிக்குநாணசிப்பதேபோல. (சு)

இத்தகைமையினுற்சிவமயமெல்லாமியல்புறவறிந்துளசீவன்
முத்தர்கண்ஞானவிளைவினலந்தமூர்த்தியையடைந்திடுமுறைகேள்
பைத்தலையரவைப்பழித்தபேரல்குற்பவளவாய்க்குவளையந்தடங்கட்
கொத்தலரோதிச்சித்திரக்கொங்கைக்கொடியிடைக்கோமளக்கொம்பே

நற்செவிகண்மெய்நாசிநாவென்னுஞானவிந்திரியமோரைந்தும்
சொற்பதம்பாணிபாயுருபத்தந்தொகுங்கருமேந்தியமைந்தும்
சிற்செறியுமனம்புத்தியாங்காரஞ்சித்தமென்றுரைத்திடுந்தெளிவைத்
தற்செயுமந்தக்கரணமீரிரண்டுந்தகுதியாம்பகுதிதானென்றும். (கூ)

மருவியவன்னமயம்பிராணமயமனோமயம்விக்கானமயமே
பரவுமானந்தமயமெனுங்கோசபஞ்சமந்தானுமெப்பரத்தில்
உரியதோலுதிரந்தசையுடனரம்புமூளைபெறுமூளைசுக்கிலமாய்த் [ம.
தனையின்மேல்யோகசாத்திரமுணர்ந்தோர்தாஞ்சொலுந்தாதுசத்தகமு

சொல்லியவிடையேபிங்கலையோடுசுழுமுனையத்திசிக்குவைசீர்
புல்லுகாந்தாரிமெய்யலம்புருடை புருடனேடுத்தசங்கினியாய்
வல்லபேருணருநாடியீரைந்தும்வன்னியாதித்தியன்மதியென்
றெல்லையாமுலகிற்பல்லுயிர்க்கெல்லாமிசைந்திடுமண்டலமூன்றும்.

ஓர்வரும்பிராணனபானனேவியானனுதானனேசமானனீனைகன்
சீரியகூர்மன்கிரிகரன்றேவதத்தனேதனஞ்சயன்றழைக்கும்
பேரியலந்தரியாமிமுக்கியன்சீர்ப்பிரபஞ்சன்வயிரவனென்ன
வாரிதியுலகிலாரியோருணர்ந்துவகுத்துளவாயுவீரேழும். (க)

அகமுறுமூலாதாரமேசுவாதிட்டானமாய்விளங்குமாதாரம்
மிகுமெழின்மணிபூரகமநாகதமேவிசுத்தியாக்கினையெனவிளம்பத்
தகைமையாகியவாதாரமோராறுஞ்சாக்கிரஞ்சொப்பனஞ்சுழுத்தி
திகழ்வுறுதுரியஞ்சிறந்திடுந்துரியாதீதமாமவத்தைகளைந்தும். (ம)

மருவுசாத்திகராசதமொடுதாமதங்களாகியகுணமூன்றும்
விரவுமாணவமேமாயைகாமியமாமேவியமும்மலவிகற்பும்
திரமிகுவாதஞ்சேட்பமும்பித்தந்திறன்மிகுவியாதிகண்மூன்றும்
இருநிதிபுதல்வருலகமென்றிசைக்குமேடணையிரண்டினேடொன்றும்

காமமேகுரோதமுலோபமேமோகமதங்கருதுமாற்சரிய நீடிராகம்
ஏமமாத்துவேடமெனவிரித்தியம்புமிராகமென்பவையிருநாலும்
தோமிலாததூலஞ்சூக்குமமென்னச்சொற்பெறுசரீரங்களிரண்டும்
நாமநேத்திரநாசிகன்னமுடனுடியதுவாரமொன்பதுவும். (கஉ)

௬-வது, சகளநிட்களப்பரிச்சேதம்.

இத்திறமுறையாலெண்ணுதொண்ணூற்றுறென்னுமிச்சரீர தத்துவத்தில், சித்தியையறிந்துசிவசொரூபத்தைத தெளிந்திடவேண்டுமெத்திறத்தில், சத்திதான்சிவன்றன் சொருபநிட்களமுஞ்சகளமுஞ் சகளநிட்களமும், ஒதுதுமூவிதமாயிருக்குமங்கவற்றி னேதியநிட்கள முரைக்கில். (க)

நகைமணியனையாய்சாந்திசத்தியுடனுதமும்விந்துவுநாலாம்
சகளமுமீசனுருத்திரன்விண்டுசதுமுகனென்றுநால்விதமாம்
நிகரறுசகளநிட்களமிலிங்கநிருபணசதாக்கியதத்துவத்தில்
பகாமனேன்மணியாஞ்சததிசங்கதமாய்ப்பணைததிடுஞ்சதாசிவமாகும்.

செப்பியவந்தசசதாசிவனுக்குத் திருமுடி யைந்துநாலுமுகம், ஒப்பறுகண்பன்னிரண்டுவாய் நாசியொளிகழுத்துறுப்பொருநாலும், மெய்ப்படுசெவியெட்டாக்கையொன்றிருதாள்விளங்கிய திருநிறமவெண்மை, இப்பெருஞ்சிவதத்துவங்களை முறையாலெண்ணின் முப்பத் திருமூன்று. (ரு)

சாற்றியவவைதாமெவையெனிற்சிவன்றன்சத்திசொற்சதாசிவனீசன்
தோற்றியசுத்தவித்தியேச்சுரராஞ்சுத்ததத்துவங்களோரைந்தும்

ஏறமாமாயைகலையவியத்தமிராகநித்தியையெழிற்காலம்
போற்றியங்கியதியெனப்பகர்மாயாபுஞ்சதத்துவங்களோரேழும். (௪)

பூதமைந்துத்தன்மாத்திரையைந்துபொருந்துகன்மேந்திரியத்திறமைந்
தேதமின்ஞானேந்திரியமைந்திதலாலெண்ணியகுணமகங்காரம
சேதனம்புத்தியென்றொருநாலுஞ்சிறந்தவிவ்வகையினற்பூமி
ஆதியாஞானயோகியாகணிதத்தமைந்ததத்துவங்களுலாறும. (௫)

ஓதியவிந்ததத்துவமெல்லாமுணர்ந்துநீள்யோகசாதனையால்
ஏதமில்பஞ்சப்பிரமமூன்றுணர்ந்தோக்கெய்துமானந்தமாமுத்தி
மாதுகேளிதெலாஞ்சுப்பிரபேதவாகமத்தாதியாமபடலத்
தாதிரையான்பாலைங்கரத்திருதாளானைபெற்றனுபதேசம். (௬)

எ-வது, சிவநின்மாலியவிசேடப்பரிசசேதம்.

மங்கலங்கலசக்கொங்கையாரணமாமடந்தையேயிங்கிதுநிறகச
சங்கரனிருமாலியங்கள்சண்டேசன்றனக்கெனமுன்னமேவிதிபெற்
றங்கவன்றன்கைக்கொண்டிடலாலுமவற்றையங்கீகரித்திடவுந்
துங்கநின்மலாவேறிலாமையினாலுநதுய்ப்பதற்கடாததானதலால். (௧)

ஏதமிறூயவாஞ்சிவநிருமாலியங்களைப்பழுதுளவாகச்
சோதனைசெய்துதுறந்திலருலகோர்சொலிற்பழுதங்கவைக்குளதோ
ஓதருங்கலைகள்கற்றுளோராவியக்குமொண்புகழ்க்கஞ்சனூராழ்வான்
மாதகவான்முன்னிப்பிரசங்கம்வந்ததோபிரகரணத்தில். (௨)

அம்புலிதிகழ்செஞ்சடையினுகந்தவன்னபானாதிகளெல்லாம்,
டம்புரீரவன்றன்றசபுத்திராக்குப்பாங்குடன்கொளத்தகுமென்று, செ
ம்பொருட்சைவாகமங்களினுள்ளசெழும்பொருண்முழுதுணர்ந்தனரா
ய,நம்புதாற்பரியவிசேடமேகொண்டுநாட்டினரறிந்துகொணன்றுய(௩

அ-வது, வீரமகேச்சுரப்பரிச்சேதம்.

வித்தகமயிலேயிதெலாநிற்கவீரமாமகேச்சுரசித்தாந்
தத்தினிற்பரமரகசியத்துமைக்குச்சங்கரன்சொன்னவாசகங்கேள்,
உத்தமவிலிங்கதாரணத்தாலேயுயிருமவ்விலிங்கத்தினுருவாம்
அத்திறமெவ்வாறென்னிலமமிடாநீரங்கியால்வெமமையாவதுபோல்.()

இனையனவிலிங்கசொருபமேன்மையெலாமியல்புறவறிந்திலிங்கத் தை
புனைபவன்றேகந்தனைத்துறந்தாவிபோயிடுமரணகாலத்தில் [ப்
அனையலிங்கத்தின்மூர்த்தியுமேருமாவியோடயிக்கமாகையினல்
பினையவிலிங்கம்பிரேதலிங்கமெனப்பெரும்புவிமீதுபோபெருமாள்(௨

ஆவியினுடனேமூர்த்தியையிழந்தவாக்கையுமிலிங்கமுமாக
மேவியம்புவியையகழ்ந்துநற்சமாதிவிதிமுறைவைப்பதுமியல்பான்
மாவடுவகிர்நேர்விழியினியிதலால்வச்சிரசூசியினிடத்தும்
தாவரும்வீரசமயசித்தாந்ததன்மையின்பெருமைநீதான்கேள். (௩)

பேறுளசிவதத்துவங்களையறியப்பெற்றவனேபிராமணனும்
கூறியவருணாச்சிரமதற்மத்தைக்கொண்டொருபயனுமிங்கில்லை [மம்
மாறியவுண்மைசசிவன்சொல்வாக்கியத்தை வைதிகாக்குணாப்பதக்கிர
தேறியசோகம்பாவனைதானேசிறந்தசீவனுக்குநன்முத்தி. (சு)

தாவரும்பிரமங்காரணத்துடனேசங்கமமாகையினாலே
சீவபாவனையையடைந்ததததனையேதிரம்பெறத்தெளிந்துதான்றனே
மேவியபிரமமென்னுமிதறிந்தால்வீடதுவேயெனுமேன்மை
தூவியோநிமமேசீடனுபோகச்சூத்திரத்தினுமிதுசொல்லும். (ரு)

மன்னுசாலோகமோடுசாமீபம்வாய்த்தசாரூபசாயுச்சம்
என்னுநாற்பதமுமட்டமாசித்தியென்பனமுத்தியென்றிசைப்பர்
பன்னுவேதாந்தங்கடந்தபின்சோகம்பாவனைசெய்வதுதானே
தன்னைநேரில்லாமுத்தியென்பதுவுந்தழைத்தவச்சூததிரஞ்சாற்றும். ()

ஆதலாலிந்தச்சிவமயமெல்லாமாகமத்தாலறியாமல், ஓதநீரவேலைதம்மிலொன்றதிகமுண்டெனவுணாத்திடுவார்போல்,பாதிவெண்மதிசூடியைத்தவிாந்தரியைப்பரனெனப்பகாவதேயென்ன, வேதமாமடந்தையதறகுவெண்முறுவல்விளைத்துசிற்சிலமொழிவிரிப்பாள். (எ)

அ - வது, சைவாகமவிதிப்படலம் முற்றும்.

ஆ திருவிருத்தம்-அரு

ஆ காண்டம்-உ-இபடலம்-யசுஇகூடியதிருவிருத்தம்-எருசு.

அரிதாசர்திருவடிகளேசரணம்.

சர்வம்விஷ்ணுமயம்ஜகத்.

ந-வது, உத்தரகாண்டம்.

க - வது, வேதவேதாந்தவிதிப்படலம்.

க - வது, வெண்ணிற்றைமறுத்தபரிச்சேதம்.

மருவியசடைமேன்மதிவளர்பெம்மான்மகிமையையின்னவாறுரைத்து, முருகவிழ்குழலாயாகமநூலேமுக்கிய நூலெனமொழிந்தாய், விரிவுளவேத நூலினிச்சயமும்விண்டுவின்பெருமையுஞ்சிறிதும், கருதலையிதுவுமொக்குமேசெம்பொன்கனவினுற்காண்டல்கைப்புகுமோ()

தோகையேயுலகிற்சைவசித்தாந்தத்தொன்மையோர் குறைவறச்சொன்னாய், ஆகமஞ்சொன்னவதறகெலாமேனியா மெனவுத்தரிக்கின்றேன், ஓகைகூாவேதபுராணசாததிரத்தாலுரைத்துளவுத்தரமுரைக்கேன்,நீகுறிக்கொண்டுகேளெனக்கல்விநிலையினணிசழ்த்துவதானுள்

வெண்ணிறநீற்றின் மகிமையு மணிந்தால்விளைந்திடும்பலன்க ளுமுரைத்தாய், என்னுமந்நீற்றின்விசேடமாகமத்திலியம்பிய திருககவி ப்புவிமேல், நண்ணியசெஞ்சொலதருவசிரத்தினவின்றிடுந்தன்மைகே ணறும்பூ, வண்ணவாரளகவல்லியேயந்தவண்மை சேரதருவ சிரத்தில்.

ஆதிகண்டத்தில்விண்ணவர்தம்மோடந்திரியாமிமாலெனக்கெ ன், றோதியசிவனுக்குவாசனைதன்னையுரைத்திடும்பஞ்சமகண்டத்,தேத மின்றியவப்பசுபதிதிட்சைக்கிலக்கணநீறெனமொழிந்து,வேதியர்களெ ல்லாமந்தவெண்ணீற்றைவிதித்திலாமுறைமையினுலே. (௪)

தக்கவெண்ணீறு வேதியர்க்கெல்லாஞ் சகலசாதாரணமன்று, மிக்கவந்நீற்றையநருகமென்றுவெகுவிடத்துரைத்திருககையினும. தொக்கமாமறையில்விதிப்பதேதென்னிற்சொலுமக விரதயாகததில்பு க்கநற்பிரமசாரியோடசதிபுணர்நதிடத்திகிரடிப்பதுவும். (௫)

வைப்புளசவித்திராமணிமகந்தன்னின் மதுவையேயருந்துத ருனும்,மெய்ப்படுநீதிவேதியர்தமககுவிகிதமென் றுரைப்பதேபோலச்
செப்பியபாசுபதவிரதத்தின்றீட்சையின்மாதிரத்துக்கே.
ஒப்பறுநீறுமுக்கியமதுவுமுரியதச்சிவமறையோர்க்கே. (௬)

அறுத்தியால்விளக்குமோமவேலையினிலக்கினிகோத்திரநீறு
தரிப்பதந்தணர்கள்சகலருக்குஞ்சாதாரணமல்லவோவென்னில்
விரிததிடுஞ்சதாககமிருநிவெண்ணீறுவீறியசைவாகளுககே
சிரததினிறறரிககவிகிதமென்பதனைத்திருத்தமாயுரைததிடலாலும். (௭)

வேறுளசகலமிகுதியுநீறுவேதியர்க்கநருகமென்று
கூறுகையானுமதுசகலருக்குங்குறிப்புடன்றரிக்குமதென்று
தேறியவந்தநீறுதான்முக்கட்சிவனையாதரிப்பவர்சிலாக்கு
மாறிலாவுலகிற்குததிராதமக்கேமதிப்புடன்வகுததவாசாரம். (௮)

௨ - வது, திருமண்காப்பு என்கிற ஊர்த்துவபுண்டரப்பரிச்சேதம்.

ஓதுமூர்த்துவபுண்டரமதேமறையோர்க்குரியதவ்வோங்கு புண்டரமே
நீதியாலணியவிகிதமென்பதற்குநீறவர்க்கடாததென்பதற்கும
ஏதமினீறுசூத்திராதியர்க்கேயிசைந்தவாசாரமென்பதற்கும்
வேதசாத்திர நூலின்பிரமாணவிதங்களைநான்விளம்பககேள். (௧)

வேறு.

பொன்னியலாகமமயிலேபொலிவுபெறுந்திருமண்ணைப்புகழ்ந் துபோற்றி, உன்னையினிதணிகின்றேன் காப்பாகவெனக்கருணீ யுத வென்றுன்னி, மின்னெறில்சேரூர்த்துவபுண்டரந்தன்னைநீடுமெசுவே தந்தன்னில்மன்னியவாரணத்தாரும்பருச்சத்திலாறியனுவாகங்கூறும்

தாரணியிலூர்த்துவபுண்டரமினிதுதரிப்பாரைச்சகலலோக
காரணனுநாரணனெத்துன்பமுமெய்தாதபடிகாக்குமென்றும்

சீரணியுஞ்சொல்லிருக்குவேதத்திற்றெளிவுபெறச்செப்பாநிற்கும்
வாரணியுந்துணைமுலையால்வஞ்சியெனத்துவளிடையைவருத்துமாதே
நேரணுரிணையடியின்சீர்மைபெறவிடைவெளியுந்திருத்தமாக
மீதுயாபுண்டரமணிவாரநெடுமாறிருவுள்ளம்விரும்பப்பெற்றுப்
பாதகமெலாந்தொலைத்துப்பரமபததானந்தம்பயில்வாரென்று
மாதுநல்லாயவேதாந்தமெண்ணான்கினுள்ளதகடவல்லிசொல்லும்(சு)

தாழ்வறு சீரூர்த்துவபுண்டரந்தன்னை விதிப்படியேதரித்துக் கொண்டு, வேழ்விவடிவாகியநாராயணனாராதனையைவிரும்புகின்றார், வாழ்வுளதங்குலததோரை யேழுதலைமுறையளவுமனத்தால்வாக்கால், சூழ்வினையைப் பற்றறுத்துப் பரகதியையடைவிப் பார்துணையாயென்றும. (ரு)

அன்னியதேவதைகளிடததன்புளராயிருந்தாலுமனைவோருக்கும்
மின்னியநீளபுண்டரமேவிதிமறையோர்தங்களுக்குமிகவிசேடம்
என்னமொழிந்திட்டதுதானெசுவேதச்சாகையினிலிதுமட்டன்றிப்
பன்னுமகோபனிடத்துமூர்த்துவபுண்டரமகிமைபகருமாதோ. (சா)

அந்தணர்சததிரியருக்குப்புண்டரமும்வணிகர்குலத்தவருக்கந்தச்
சநதிரரேகைப்பிரமசாரிக்குச்சந்தனமுஞ்சன்னசிக்குக்
கந்தமொடுவெண்ணீறுதரிக்குவதெக்காலத்துங்காப்பன்றென்றும்.
கொநதலருநகருநகுழலாய்தாபனியோபனிடத்திற்கூறுமன்றே. (எ)

மெய்ததியல்சீரூர்த்துவபுண்டரத்துககுவேதவேதாந்தத்தாலே
இத்துணைநற்பிரமாணமியையவுரைத்தேனிந்தமறைகட்கேற்கச்
சிததிரமாமயிலனையாய்புராணமொடுசங்கிதைசாததிரங்களாலே
வைததபிரமாணமுநானுரைக்கின்றேனதனையுநீமனத்துட்கொள்வாய்.

வீசுபுகழ்நாரதனைவேதவியாசன்பரவிவிமலனேநற்
றேசுபெறுமூர்த்துவபுண்டரவிதியுந்தலங்களுமந்திரங்கடானும்
ஆசரிககுமடைவுமதிதேவதையுந்தியானமுமிங்கடைவதாகப்
பேசுகெனசசுருதியெலாம்வீணையினுறைதஞ்செய்பெரியோன்றானும்.()

ஓதுமறைகளைகண்டமுனியேகேளூர்த்துவபுண்டரந்தான்சொல்லிற்
றூதுசெறிபதுமாகாரநகூருமாகாரஞ்சநகாகாரம
தீதறுமச்சுவபத்திராகாரமவேணுபததிரந்தீபாகாரம்
போதவருமால்சரணவாகாரந்திந்திருணிபுட்பாகாரம். (ய)

இன்னனவாமூர்த்துவபுண்டரங்களெல்லா மந்தணர்க்கேயிய ல்புமற்றைப், பன்னியசொற்பதிதருக்குஞ்சூத்திரர்க்குங்குறுக்கிடுதல் பண்பதாகும், என்னமரபினரொனினுமெம்பெருமாற்கன்புளராயிருப் போர்க்கெல்லாம், மின்னுதிருமண்குறியா யூர்த்துவ புண்டரமிடுதல் விதியதாகும. (கக)

மற்றுமிந்தப்புண்டரங்களிடுமிட த்திலுயர்திருமண்மறையோரு கரும், கொற்றவர்களுச்சந்தனமும்வணிகருக்கு வில்லுவத்திற்கொண்ட வேரும், வெற்றிபுனைசூத்திராக்குவெண்ணீறுவிதிநாலுவிதசாதிகளும், தெற்றெனவாந்திருமண்ணுஞ் சந்தனமுங் கொடுதிலகந்தீட்டலாகா.

வில்லுவமும்வெண்ணீரும்வணிகருக்குஞ் சூத்திரர்க்குமொழி ந்துமேலாய்ச், சொல்லுமிருகுலத்தோர்க்குத்தகாதுதிருமண்ணடைவு தோன்றக்கூறில், எல்லமைபொன்வெண்மைகறுப் பிரத்தமுடன்பச் சையிவையென்றைம்பேதம், நல்லவற்றிற்சுக்கிலமாகியதிருமண்டலமி தற்குநாட்டுங்காலை. (கங)

பொங்குதிருமால்வாழும்புண்ணியதேசங்களினும்புனிதநன்னீர்க்
கங்கைமுதலாகியபன்னதிக்கரையினுந்துளவங்கமழுமூலத்தும்
தங்கியநற்றிருமண்ணேவிசேடமிவைதமைத்தரிக்குந்தலம்பன்மூன்று
துங்கமிகுமீராரெட்டோராறுநாலொன்றுச்சொல்லாநிற்கும். (கச)

மங்கலமாகியநெற்றிவயிறுமணிமாபுகளம்வலப்பாலுந்தி [ல்
துங்கவலத்தோளதன்மேல்வயிற்றினிடப்பாகமிடத்தோ டோளின்மே
தங்கியகிழவெரிந்பிடரிதலையாகும்பதின்மூன்றுய்ச்சாற்றுந்தானம்
இங்கிவற்றினுச்சிதவிர்ந்திடுவதுபன்னிருநாமமெழுதுந்தானம் (கரு)

பெருங்குறிகளீராறிற்பிடரியுங்கந்தரமுமுயர்பெறுமேற்றோள்கள்
இரண்டுமொழிந்திடிற்றிருமணிருநாலாயெழுதுவற்கேற்றதானம்
திருந்தியதோள்களுமார்புநெற்றியுமாறீரிரண்டாய்த்தீட்டுந்தானம்[ம்
பொருந்தியநெற்றித்தலமேயொன்றாகவெழுதுவர் புண்டரத்தின்றான

இளொளிசேர்புண்டரங்கள்பதின்மூன்றுயிடுமிடத்திற்கேசவாதி
வளமைமிருநாமமெல்லாமந்திரங்கள்வாசுதேவாந்தமாக
ஒளிகிளரும்புண்டரங்களீராறுயிடுமிடத்திலோதுநாமம்
தெளிவுறுகேசவனாதிதாமோதராந்தமுமந்திரங்களாகும். (கள)

இருநாலாய்ப்புண்டரங்களெழுதிடத்தின்மந்திர மெட்டெழுத் தேயாகும். திருநாமமதுசூதநாந்தமிருமூக்குறிமந்திரங்களாகும், ஒரு நாலாகியகுறிகளுக்கேசவனச்சுத னனந்தனுயர் கோவிந்தன், வருநாம மொற்றையெழுதுங்குறிக்குக்கேசவமந்திரமேமன்றே. (கஅ)

அங்குட்டம்பொருணல்குமநாமிகைமைந்தையருளுமாயுடன்னைத்
தங்குகனிட்டிகையுதவுநதர்ச்சினியங்குலிமுத்திதனையேநல்கும்
இங்கிவைங்குலிகளிவற்றுற்றிருமணிலங்கு குறியெழுதுவாக்குப்
பொங்குபலன்மத்திமவங்குலிகொடுபுண்டரங்கள்புனைதலாகா. (ககூ)

ஏதொருநாமத்தாலேபுண்டரங்களிடவிதியிட்டிசைத்ததந்தத்
திதனுநாமப்பொருளேதியானிக்கப்படுமூர்த்திதிகழ்வுகூற
ஓதியநீள்புண்டரத்தைத்தரித்தரியாராதனைசெய்துளங்களிப்பார்
மேதைமிகுபாகவதரவரடைவாபரமபதவிண்டுலோகம். (உ0)

இந்தரகசியப்பொருளேயிசைத்தனமின்றுனக்கென்றுனிலையவெல்லா
முந்துபுகழ்நாரதியபுராணத்திலறுபதுடனென்பதாக [ம்
வந்திடுமத்தியாயத்திலறிந்திடலாமடமயிலேமற்றுமிந்த
அந்தமில்சீர்புராணத்திலெழுபதுடனைந்தாமத்தியாயந்தன்னில். (உக)

நாரணனன்முகனுடனேநான்மகிழ்த்தாந்தமக்கு நலமாகத்தா
ன், ஏரணியுமூர்த்துவபுண்டரந்தரிப்பாமுத்தவொன்றெனெண்கணனு
ம்,சீரியமாமுனிவருடனூர்த்துவபுண்டரந்தவிர்ந்துசெய்யாகின்ற,ஏரம
ருமநுட்டானமபலியாமலொழிந்திடுமென்றிசையசொன்னன்(உஉ

மலைமகளோடுருத்திரனுமங்கலமாம்பூரணபாவன மாகத்தான்,
நிலவியநீளூர்த்துவபுண்டரந்தரிப்பாபரமபதநேர்வவொன்றுன்,உலகு
புகழிந்திரனுமூர்த்துவபுண்டரமிமையோர்க்குபதேசித்தான், அலகில
வக்கினிதேவுந்தென்புலத்தார்க்கெல்லாமீதறியசொன்னன். (உங)

தேவர்களுமுனிவர்களுந்தென்புலத்தோர்களுந்தம்மைசசேர்ந்
தோர்களெல்லாம, மேவியவவ்வூர்த்துவபுண்டர மகிமையுபதேசம்விள
ங்கசசெய்தார,பூவுலகுந்தாழுலகும்பொன்னுலகுமுதலாய்புவனத்துள்
ளோர,யாவருமவ்வூர்த்துவபுண்டரராகிமகிழ்ந்தனரொன்றியம்புமாதோ

இலங்கியநீளபுண்டரததைநெற்றிகளிடை வெளியிட்டெழுதாதா
னும், சூலவுறமுப்புண்டரததைததரிப்பானுஞ்சூத்திரனேயனையானெ
ன்றும, தலையினிலோடெலும்புமயிர்சங்குமணிகற்சாம்பாதரித்துநெற்
றி, நிலவுதிரிபுண்டரத்தையணிந்திடுவா ரதமாகளிந்நிலத்திலென்றும்.

வேதியர்தங்குடிப்பிறந்துமவிடத்தைநுகர்வாருமனைவேவத்தீயிட்
டாதலரன்கண்மணிமுட்புண்டரந்தானிலிங்கமிவையணிவாராகில்
நீதியிலாவிவர்தம்மைமுறைமையிஞனிலம்புரக்குநிருபர்தங்கள
பூதலத்தினெல்லைகடந்திடும்படிக்குப்போக்கவிதிபுகலுமென்றும் உசு

மேனிடுபுண்டரததையணிந்துசெபஞ்செய்தனல்வேட்டல்வே
தம்,தானேதல்தென்புலததோர்தமைத்தணித்தல்சந்தியில்வந்தனைகள
பண்ணல், நானாவாந்தானங்கள்கொடுத்தவெலாமந்தபலனல்குமென்
றும்,யானோர்புண்டரமன்றிச்செயதவநுட்டானங்கள்பலியாவென்றும,

நூலியல்பாறசிராத்தஞ்செய்காலத்துநுகர்வார்க்குநுகர்விப்பார்க்கும்
மேலுமுயர்புண்டரங்களெழுதுவதுவிதியென்றுமெழுதுங்காலைப் [டி
பாவிரண்டுமிரண்டுவிரலிடைவெளியோரிரண்டு விரல்பகுத்துக்கூட்
நாலுவிரல்விசாலத்தாளுசிமுதற்கேசாந்தநடதைவென்றும். (உ.அ)

இத்தகையபுண்டரங்களிலக்கண மல்லா தெழுதலியல்பன்றெ ன்றும், மத்திமத்தில் வெளியின்றி யெழுதுகுறி யுத்தமர்க்குவழங்கன் றென்றும், முத்துநிரையென மூலைமுகையினணிதானென்ன முருந்துவாயத்த, பத்தியென வொளிர்நகையாய் பராசரசமிதைதன்னிற் பகுத்துக்கூறும். (உகூ)

இருவிரலினகலமிடைவெளியிட்டுப்பககங்களிரண்டுமோரோர்
விரலகலமெழுதுவதூர்த்துவபுண்டரக்தனக்குவிகிதமென்றும்
மருவுமிடைவெளியின்றியூர்த்துவபுண்டரமொருவன்வரைந்தானகில்
அறிமருவுபரமபதமாகியவைகுந்தமவனடையானென்றும். (ஙய)

தக்கதிரிபுண்டரத்தைவிநோதத்தாலானுலுந்தரிக்குஞ்செய்கை
மிக்கமறையந்தணர்க்குவிதியன்றவகதுதரித்துவிட்டானகில்
அக்கணமேபதிதனெனவறையுமரிசசிப்பெயரோனமுதவாக்குத்
தொக்கமிருதியிலிசைக்குந்தும்பியினம்பம்புகுழற்றேகைநல்லாய்.ஙக

தருமறையோர்குடிப்பிறந்துஞ்சங்கரனையருச்சித்துந்தமதுமெய்யில்,மிகுதிரிபுண்டரமணிவாரங்நிலையேயதமர்களாய்விடுவரிந்தத, தொகைபெறுமாசாரமெல்லாஞ்சூத்திரர்க்கும்பதிதாகருஞ் சொன்னதென்று, மகிமைபுளவாசிட்டசங்கிதையில்வெளியாகவகுததுக்கூறும்.(ஙஉ)

போசனங் தானந்தவங் தென்புலத்தோரைத் தணிக்குத னெய்பொழிதீவேட்டல்,ஏசறுமூர்த்துவபுண்டரந்தரித்தாற்பலன்றருமிதன்றிச்செய்வார், நீசரினுங்கடையவர்கடமதுமுகமசானத்தை நிகர்க்குமென்றும், வீசுபுகழுலகோர்க்குநீதிவரபாற்கவனூர்மிருதிசொல்லும். ஙங

இருக்கெசுச்சாமாதருவத்தியற்கையாயிருக்குமென்றும்
விரித்தநாரணன்றன்வாக்கால்விளம்பிடப்பட்டதென்றும்
உருத்திரற்கயனந்நூலினுண்மையையுரைத்தானென்றும். (௪)

நாரதன்றனேகானற்றவமுனிவர்க்கெல்லாம்
பாரினிவிந்தநூலைப்படியின்மேற்பகர்ந்தானென்றும்
ஏரமர்ந்தநூலேயிலங்குபாரதமறைக்குச்
சீருபநிடந்தானென்றுந்திரம்பெறச்செப்புமாதோ. (௫)

நீடுசெங்கருடனப்போனேமிமாலுலகுக்கெல்லாம்
பாடமாயுரைக்கப்பட்டபஞ்சராத்திரநன்னூலவ்
வாடரவணையினன்றனருச்சனைக்குரியதென்றும்
வீடுமபருவத்தாலும்விரித்ததவ்வைந்தாம்வேதம். (௬)

சாந்திபருவத்திற்றனுஞ்சதுமறைச்சாரமாகி
ஏயந்திடுமகிமைப்பஞ்சராத்திரநூலையேமப்
பூந்துகில்வண்ணன்மேருப்பொருப்பினிலிருந்துமேனாள்
ஆய்ந்தனனென்னுந்தன்மையவனியோரறியக்கூறும். (௭)

ஞானகாண்டத்தின்மூன்றாய்நவிலத்தியாயந்தன்னில்
பானிகர்செஞ்சொலாகப்பரிசரவசுவின்செய்கை
தானியல்பெறவிரிக்குந்தலத்தின்மாதவனார்பூசைக்
கீனமில்லாதபஞ்சராத்திரமிசைந்ததென்றும். (அ)

நிலைபெறுமிந்தநூலானியமித்தநைமித்தங்கள்
உலகினிற்செய்யப்பெற்றாலொன்றவையனந்தமென்றும
பலமறைபடித்துளோரும்பஞ்சராத்திரங்கற்றோரும்
அலகிலாநேமிமாலையன்புடனடைவொன்றும். (கூ)

ஓதியவேதந்தானுமுயோகசாங்கியமும்பாரில்
ஏதமிலாதபஞ்சராத்திரமென்னுநூலும்
ஆதிதொட்டொன்றுக்கொன்றங்காகியபாகமாகித்
தீதறவிளங்குமென்றுந்தெளிவுறச்செப்புமன்றே. (ய)

வேதநாதங்கள்பம்பும்வீணைநாரதனார்மேலோா
ஆதிநாரணனைசெம்பொனடியிணைபணிந்துபோற்றிச்
சீதராவுன்னையிங்காச்சித்திடுங்கிரமந்தன்னை
ஓதுவாயென்னவீரேழுலகமுமளந்தமாலும். (கக)

பரவியபுருடசூத்தம்பஞ்சராத்திரங்கள்சொன்ன
கிரமமாக்கததிறற்செயகின்றதென்றுரைத்ததாக
மருவகத்தியனார்சொன்னவாசகம்வராகந்தன்னில்
அரிவையேயறுபத்தெட்டாமத்தியாயத்திலோதும். (கஉ)

வஞ்சிநுண்ணிடைமடந்தாய்மற்றுமெவ்விடத்துந்தானே
பஞ்சராத்திரநூலுக்குப்பாத்திரர்மறையோரொன்றும்
விஞ்சுசூத்திரருகெல்லாம்விகிதமன்றென்றும்பாரில்
தஞ்சமாகியமுத்திக்குச்சாதனமிதுவேயென்றும். (கங)

பத்தியும்வேள்விதானும்பஞ்சராத்திரநன்னூலும்
மெய்தமிதொகைமறையுஞ்சென்மமநந்தகோடிகளினின்றும்
தொத்தியபாவமெல்லாந்தொலைந்துளபேருக்கல்லால்
சித்தியாவுலகிலென்றுந்தெளிந்திடப்பகருமன்றே. (கச)

அன்றியுமெழுபத்தொன்றாமத்தியாயத்திற்குற்றம்
இன்றியேதிகழும்பஞ்சராத்திரக்கிரமந்தானே
வென்றிமால்பூசனைக்குவிசேடமென்பதனையெல்லாம்
துன்றுகப்பெய்தப்பூசைசொல்லியவிடத்திற்சொல்லும். (கரு)

போற்றுநான்மறையினானும்புராணநூன்முறையினானும்
ஏற்றமாய்விளங்கும்பஞ்சராத்திரத்தானுஞ்சிந்தை
தேற்றமாயோகசீலர்நியானியாகிற்பமொன்றும்
சாற்றிடாகிற்குநீடுதகவிராமாயணத்தும். (௧௬)

பங்கயவுந்தியானைப்பஞ்சராத்திரநூல்சொல்லும்
அங்கமேயங்கமாகவருசசனைபுரியவென்றும்
மங்கலசெஞ்சொலாஞ்சமதக்கினிமிருதிதானும்
சஙகையில்விதேகன்சொன்னசங்கிதைதானுங்கூறும். (௧௭)

இருக்கெசுசாமாதர்வமென்னும்வேதமபுராணம்
பருப்பொருளன்றிநின்றபஞ்சராத்திரநூன்மேலோர
கருத்துறுமூலராமகாதைபாரதங்கடாமே
திருத்தமாயுலகத்திற்குதிரப்பிரமாணமென்றும். (௧௮)

இவ்வகைநூல்கடங்கட்கேற்றநூலிவைக்குமாறாய்க்
கவ்வைசோநூல்களெல்லாங்கைக்கொளப்பெறாநூலென்றும்
அவ்வழிநூலான்முத்தியடைவதற்கருமையென்றும்
மவ்வல்சேரளகக்கோதாய்மாபிரமாண்டங்கூறும். (௧௯)

பையரவல்குன்மின்னேபஞ்சராத்திரநூறன்னை
மெய்யெனத்தெரிந்துவேதவியாதர்நிச்சயித்தலாலும்
பொய்யறுமந்நூல்வேதப்பொருளையேபுகறலாலும்
வையமேலீதுவேசொல்லின்மகப்பிரமாணமாமே. (௨௰)

என்னவிப்பிரமாணங்களெண்ணிலாவெடுத்தியம்பிப்
பன்னுசொற்றெளிந்திடுஞ்சீாப்பஞ்சராத்திரநூறன்னைத்
தன்னிகரற்றவேதசாரமென்றுரைத்தலோடும்
அன்னமென்னடைப்பூங்கோதையாகமமல்லிசொல்வாள். (௨௧)

௩-வது, பரமார்த்தநூல்வைபவப்பரிச்சேதம்.

பார்புகழ்சுருதிமானேபஞ்சராததிரமென்கின்ற
சார்புநூல்கொண்டேமேலுஞ்சாற்றுதல்கருத்தோவன்றி
நோபெறும்பொதுநூலாகிநீசொலும்படிககுவேறு
சோர்வறுபிரமாணத்தாற்சொல்லுநூலுண்டோவென்ன. (௧)

பகர்மறைமாதுமானேபஞ்சராத்திரத்தையும்பார்
புகழ்பிரமாணமென்றுபுகன்றதத்தனைநானின்னும்
நிகழ்பிரமாணமாகிநீடறிவாளர்போற்ற
திகழ்வுறுநூல்களெல்லாஞ்செப்புவென்சிந்தைசெய்யாய். (௨)

நித்தியமாதலான்மானிடங்களாரிடங்களன்றிச
சுத்தமாயுலகிற்றனேதோன்றலாற்சொல்வதெல்லாம
சத்தியமென்றுதன்னைச்சகலசாத்திரபுராணம்
உத்தரித்திடலால்வேதமுயாபிரமாணமாமே. (௩)

பான்மதியனையாய்பன்னிரண்டதாம்பருச்சத்தினாந்
தாமனுவாகநதன்னிற்றன்மனுமிருதிசொன்ன
வாய்மையையெசுருப்பேராமாமறைசொல்லலாலத்
தேமனுமிருதிதானேதிடப்பிரமாணமாமே. (௪)

நிகரிலாவுருவைச்சாந்தநிழலதாய்விளங்கிநீடும்
அகிலமேலவேதந்தன்னையனுசரித்திடுகையாலே
சிகரமாமேருவென்னத்திகழ்தடங்கொங்கைநல்லாய்
தகுபிரமாணமாகுந்தருமசாத்திரங்களெல்லாம். (௫)

எவ்வகைபிராசியங்களெவ்வகைப்பராசியங்கள்
அவ்வகையுள்ளவெல்லாமங்கையினெல்லியேபோல்
கவ்வைதீரகருத்திற்றோன்றக்கடவனினக்கென்றந்தத்
தெய்வவான்மிகற்குவேதன்றிடவரமீதலாலும். (௬)

தற்பரனுமாயோன்றசரதனிடத்திலேவந்
துற்பவித்திடலால்வேதமோங்குவான்மீகன்றன்பால்
வைப்புறத்தோன்றிராமாயணமகாமகிமையாலே
முற்படுமிதிகாசச்சீர்மொழியதற்கெய்தலாலும். (௭)

கூறுமங்கதுதானூறுகோடிவிததாரமாகி
ஈறிலாவதனிலேயோரெழுத்தையுச்சரித்தபேர்க்கும்
மீறுமாபாதகங்கள்விநாசமாமேன்மையாலும்
தேறியவிராமகாதைதிடப்பிரமாணமாமே. (௮)

பரவுவிண்டுபுராணத்திற்பராசரன்மயித்திரோய
விரதனைநோக்கிநீயவ்வியாசனைவிண்டுவென்றே
கருதுதிவியாதன்றனக்கண்ணனேயல்லனாகில்
அரியபாரதநூல்செய்யவாராவசமென்னலாலும். (௯)

பானுவான்மதியாற்றுங்கபாரதகதையாலன்றி
மாநிலத்தந்தகாரமாறுமாறெங்ஙனென்றும்
ஏனையபுராணத்துள்ளயாவையும்பாரதத்தில்
தானுளவில்லாவச்சொற்சகலத்துமில்லையென்றும். (௰)

பாரதகாதைதானேபஞ்சமவேதமென்றும்
பேருலகத்திலெல்லாமபிரசித்தியாகையாலும்
சீரியமகிமைபாரிற்சிறப்பினுற்றன்னில்விஞ்சும்
பாரிலொன்றிலாத்தன்மைத்துபாரதமாகையாலும். (கக)

ஒளிக்கிளர்பொருள்சேர்வேதத்தொடுபுராணங்களையெல்லாம்
வெளிப்படுத்துவதற்காகவியாதமாமுனிவன்மேனாள்
வளப்பமுற்றிடும்பார்மீதுவாய்த்தமாபாரதத்தைக்
கிளத்தினனென்றுருத்ரர்கேண்மையாலுரைத்தலாலும். (கஉ)

வளம்பெறுமெய்ம்மையானவாசகனென்றுபோற்றும்
களங்கமில்வியாதனன்பாற்கட்டுரைத்திடுகையாலும்
தளம்பெறுமலரோன்கேட்டுச்சம்மதித்தருள்கையாலும்
விளங்குமாபாரதந்தான்மிகுபிரமாணமாமே. (கங)

பொன்பயில்கமலத்தண்ணல்புராணமானவெலாமுந்த
அன்புடனுரைத்தான்வேதமவன்றிருவாக்கினின்றும்
பின்புதன்னிச்சையாலேபிறந்ததிவ்வுலகிலென்ன
இன்பமாம்விளங்குமவாயுபுராணத்தினிசைக்கையாலே. (கச)

இத்திறப்பழமையாகவெழின்மறைவிளம்புகின்ற
உத்தமப்பொருளையெல்லாமுண்மையாயுரையாநின்ற
வித்தகபுராணமெல்லாமேதினிமாந்தருக்குத
தத்தைபோன்மழலைமாதேதகுபிரமாணமாமே. (க௫)

சத்தியென்கின்றநாமத்தங்கையைவதைத்தோராய
குத்திரவரக்கர்தங்கள்குலமெலாமறுப்பதான
சித்திரவேள்விதன்னைச்செயதியான்முடிப்பெனென்றே
மைத்தலையரவிறபொங்கிப்பராசரன்முயன்றநாளில். (கசு)

புலத்தியன்வசிட்டனென்னும்புனிதமாமுனிவர்வந்து
விலக்கலுந்தவிர்ந்துநின்றமெய்ப்பராசரனைநோக்கிச்
சலத்தைவிட்டனையுனக்குச்சதுமறைப்பரமார்த்தங்கள்
நிலத்தினிற்றெரிகவென்றுநீள்வரங்கொடுத்தலாலும். (கஎ)

நீதிசேர்சுருவேதங்கிழந்தசீராரணத்தில்
ஆதியாம்பாடலத்தொன்பதாமனுவாகந்தன்னில்
மேதைகூர்வியாதன்மேன்மைவிரிப்பதாயவியாதனாந்தத
தீதறுபராசரற்குச்சேயன்றேயென்னலாலும். (கஅ)

பூதலமுழுதும்போற்றும்புகழ்ப்பராசரன்றனது
வேதநூல்கண்டவேதவியாசன்றன்சுகனார்தாமும்
தீதறுதோற்றந்தெய்வத்திருவவதாரமென்று
மூதிலிங்கப்புராணமொழிந்துளபடியினாலும். (க௯)

அப்பராசரனைநோக்கியன்பொடுமைத்திரேயன்
ஒப்பறும்புவனமெங்கேதோன்றியதொடுக்கமெங்கே
இப்பிரவஞ்சமெல்லாமெவனதுசொரூபமென்றே
தப்பறவவனையேநிச்சானியமாகக்கேட்டான். (உ௰)

மருவுஞானியர்க்குளெண்ணும்வரபராசரனார்தாமும்
அரிமயந்தானேநீடுமண்டகோடிகளதெல்லாம்
பரிவுடனவனேயென்றும்படைத்தளித்தழியாநின்றான்
விரவிலீலையினாலென்றுவிசேடமாய்ப்பகாகையாலே. (உக)

விரியவேயவருரைத்தவிண்டுவின்புராணந்தானும்
தரையினின்மாந்தர்கெல்லாந்தகுபிரமாணம்பின்னர்க்
கரதலாமலகமென்னககனபிரமாணமாக
இருமைசேர்புராணம்வேறென்றின்னமுமியம்புவென்கேள். ()

விதித்தறிமுத்தாதம்முன்மேன்மையாலெண்ணுங்காலை
முதற்பெயராகியெல்லாமுனிவருந்தொழவும்வாக்கால்
துதிக்கவுமுரியனாமெய்ச்சுகமுனிசகலர்க்குஞ்சம
மதிக்கவோதுகையாற்பாகவதம்பிரமாணமாமே. (உ௩)

மற்றுமோதியசாத்திகவரபுராணஙகளெல்லாம்
வெற்றிவேற்கண்ணாய்வேதவிருத்தமற்றிருக்கையாலே
நற்றடஙகடன்மூன்றேடுநான்குசூழ்செகத்துக்கெல்லாம்
தெற்றெனவாகச்சொல்லுநதிரப்பிரமாணமாமே. (உ௪)

அப்பிரமாணமானவருகர்நூல்புத்தர்நூலும்
ஏப்பிராணியையுங்கொல்லாவிரதமேவிரதமென்னும
மெய்ப்படுவசனம்வேதவிரோதமில்லாமையாலே
தப்பிலாவுலகுகெல்லாஞ்சம்மதம்சிறிதத்தேபோல். (உ௫)

எண்ணுதாமதவிராசதப்புராணங்களுள்ளும்
வண்மைமாமறைக்குமொத்துமாறுபாடிலாதவெல்லாம்
பண்ணினையமுதைத்தேனைப்பாலினைப்பழித்தசொல்லாய்
திண்ணியவுலகுகெல்லாஞ்சில்பிரமாணமாமே. (உ௬)

சு-வது, திருநாமவிவரணப்பரிச்சேதம்.

என்றுநால்வேதவல்லியிசைப்பவாகமத்துமானும்
நன்றுரைசெய்தாயிந்நாண்மறைநயந்தாண்ணூல்
வென்றிவேற்றடங்கண்மாதேமிகுபிரமாணமேயாம்
அன்றெனச்சொல்வாரில்லையாயினுமொன்றுநீகேள். (க)

பரவுமச்சதுவேதத்தாற்பரியமாம்பரமார்த்தத்தைத
தெரியவென்றுலெவர்க்குஞ்செவ்வையிற்றெளிவுறுது
தனாயின்மேலெங்கள்சைவசமயமுத்தரித்தமேலோா
உரைசெய்தாரதனையெல்லாமுள்ளவாறுரைக்கின்றேனல். (உ)

வேறு. [வன்

எவன்பொருட்டுவணககங்குணங்களாலேமிகுததவனிப்பாரின்மேலெ
பவஞ்சாமிககவிலங்கியநாரணேபதிடஞ்சொல்லுமெவன்றனுபாசனே[ய
உவநதுதன்புத்தியைமுயல்விப்பதற்குன்னுவனெவனேநலவேள்வியா
னிவநதநாயகனுவானெவனவன்நீலகண்டனிருபகனுகுமே. (ஙு)

உலகமீசுரரமுள்ளதில்லாதெனயோகாசாரங்கியரோராந்துணாந்
தோதியே, சொலுமவீச்சுரநாமமயனேடுதுளபமாயனைச் சொல்லப்ப
டாமையால், நலமதாகியவாரணவல்லியே நண்ணுமீச்சுர நாமமினம்பி
றைக், கலைகொள்வேணியனு மவனேநமக்காரம் யாவையுங்கைக்கொ
ளுநதேவனே. (சு)

இன்னசொல்லியவாகமவல்லிமுன்னிவனுமீசுரனெனன்றுமை
பங்கனைச, சொன்னதன்மைதனிறமுற்றநதவாகனைச்சுட்டியுமபலசொல்
லுமுளுடியாய், மன்னிகின்றுளவாசகத்தாலுமேமறறதெப்படியேல்வ
னக்களனியை, நன்னிலத்தின் மகாவிருக்கம் மெனநாமமிட்டுநடக
கின்றதொககுமே. (ரு)

மொழியுமீச்சுரசத்தத்திறைற்சொலு முக்கியப்பொருளாகியமூ
ர்த்திமின்,பொழியுமாழியகைப்பரந்தாமனேபுவனகாரணனுமைப்புனி
தனைப்,பழுதிலாதநல்லீச்சுரச்சொல்லினுற்பகருகின்றனபல்பிரமாண
மொன்,றெழிவிலாமலுரைக்கை யருததியினேந்தியான் சிறிதோதுவ
ல்கேட்டியால். (சா)

நன்றிகூர்தருமீச்சுர னென்பதோராநாம நறபொருளுல்வகைந
தோற்றமாம், துன்றுலோகத்திருட்டியதிற்புகுந்துளரிவுமிக்கதொழினி
யமித்தலா ல.மன்றல்சேர்குழலாயிச்செயலெலாமவண்மிழாயமுடிமாய
வன்லீலையில்,நின்றதென்றுதயிந்திரியோபநிடத்தின்வாயமைநிகழ்த்தி
யிருககுமால். (எ)

நீரசந்திருவுநதிமுகுந்தனேநித்தனுகியந்தாவுநிறைவிறைல்
சாரயிசசொரியங்களுறபத்தியாந்தானமும பல்வானவைச்சொரியமும

பூரணம்பெறவாழ்வானுமங்கதுபோற்றுவானுமருள்பவனும்மெனப்
பாரமாற்பவுபகிடத்தாதியாய்ப்பன்னுநீடனுவாகம்பகருமே. (அ)

அனையதானமறைப்பொருட்கேற்பயானகிலலோகமனைத்தும்
படைத்ததில், சனனகோடியினுள்புகுந்தேகியந் தாவுமானதுமென்ம
ணிமாலையில்,புனையுநூலினைப்போலெனக்கண்ணனோர்பொருதனஞ்சய
பூபற்குரைத்ததும், எனிலுயர்ந்துளவீச்சுரரில்லைவேறென்றசொல்லு
மியற்கீதைசொல்லுமால். (கூ)

ஆயிரம்புயவாணனுக்காக வந்தன்று தோற்றவரனரிரதமே, லேயிரு
ந்தரியேயொருவன்றனியீச னென்பதுமீறிலியென்பதும், தூயநீள்பர
மாத்துமனென்பதுஞ்சொற்றரும்புருடோத்தமனென்பதும், ஏயநான
றிந்தேனெனவெண்ணியேயேத்தியேதுதியிறைஞ்சினனென்னவும (ய)

அகிலகாரணவீச்சுரனைநாராயணன்றனையர்ச்சனைசெய்திடாா
பகருநீள்கலிகாலததில்வைதிகப்பண்பிலா நெறிப்பாடண்டொன்னவும்
நிகரிலாரணனென்றுளவீசசுரனிகிலசிட்டிநியாமகனென்னவும்
புகழைவீசுபராசராவாய்மையாற்பூத்தவிண்டுபுராணத்துரைக்குமே.()

மண்ணினின்மீதிற்நிருவுது வெவ்பெயர்மவுலியீச்சுர னென்றும்
வண்டாமரைக், கண்ணர்தம்மைப்பகர்ந்தனன்பின்னையுங்கள்மபாசங்க
டந்துளபேர்களே, எண்ணுமாயனையீச்சுரனென்னவே யாசசவற்கமு
மோதுமிதன்றியே, வெண்ணெயுண்டவனைப்பிரசாபதி மிருதியீச்சுர
னென்றுவிளம்புமால். (கஉ)

எந்தைநாரணனேபரஞ்சோதியாமீசனென்ன வெடுத்துரைசெய்திடும்
கந்தமாபுராணத்தினும்பாரதகதையிலாதிகடைநடுத்தன்னிலும்
முந்தமாயனையீசுரனேயெனமொழியுமற்றுமுகுந்தனுக்கப்பெயர்
அந்தநாமசகத்திரமாகியவானுசாதங்கத்தினுமுள்ளதே. (கங)

வண்ணவார்சடைச்சங்கர நாதர்தம்வனிதைதன்னுடன்வானவாக்கீசனு
ம்,கண்ணனேயெனக்கீச்சுரனென்றசொல்கன்னபர்வகதையிலுங்காண
எண்ணுமிந்தமகபாரதத்துளுமேற்றசத்தவிருடிசம்வாதமும் [லாம்
நண்ணுமாயனையீச்சுரனென்னவேநானிலத்தினலம்பெறவோதுமே.()

ஆதலாலும்பகுபதத்தாலும்வேறடைசொலற்றபதத்தாலுமாகி
யே, சோதியாகியநாரணன்றன்னை யீச்சுரனெனுஞ் சொற்றுலங்கிடச
சொல்லுமால், தாதுசேர்குழலா யிச்சொலென்றுமோர்சகலமாகியசத்
தசழுகமும், ஓதுகின்றதவன்றனை யென்பதற்குண்மைகேளென வோ
துவதாயினள். (கரு)

அரியையச்சுதனைச்சிவனென்னநாராயணனைப்பிட ஞ்சொலுமா
டல்வேல், பொருகணையிதுவன்றியும்விட்டுமப்புனிதனோடப்பொருள்

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

கொண்டருத்தியால், தருமன்கேட்டசகத்திரநாமமுஞ் சார்ங்கபாணி
தனைச்சிவனென்றிடும், சுருதியுள்ளுமரியைச் சிவனெனச்சொன்னவி
ங்குச்சொலிற்பரப்பாகுமே. (கசு)

ஏலவார்குழலாகமவல்லியேயின்னுமோர்சொல்லியம்புவதுண்டுகேள்
மாலினீள்கழலைப்புனற்கங்கையால்வனசவேதன்மகிழ்ந்துவிளக்கிய [ச்
சீலமாகியசெய்கைபுனாக்கிலுன்றேகபாவனஞ் செய்யவென்றேவென
சாலவேசங்கரனையிருக்குவேதம்புகழ்ந்துதனத்தினிற்சாற்றுமே. (கஎ)

இததிறப் பொருட்கேற்பமுகுந்தனரில குதாணின்றிழிந்திடுங்கங்கை
யே சித்திரசசடைமீதினிற்றங்கியேதிங்கள்சூடுஞ்சிவன்சிவனாயினன்
மெய்த்தலத்திலெனச்சுகமாமுனிமிக்கபாகவதத்தில்விளம்பலால்
சுததமங்கலமாஞ்சிவசத்தமச்சூலபாணியைசசொல்லலுமாகுமே.(கஅ)

உம்பருக்கரசாகிவிளங்கியவுவணவாகனனேயுயர்சம்புவச், சம்
புசத்தந்தனக்குப் பொருள்சுகந்தருதல் குன்றைத்தழுவிய கொண்டல்
போல், வம்புமொய்த்ததுணை முலையாகமவல்லியே தன்மயந்தெளிந்
தோர்க்கெலாம், பம்புகைச்சங்கமேந்து முகுந்தனே பரமமூர்த்திசு
கந்தரும்பண்ணவன். (ககூ)

மொழியுமங்கியதேவரிடத்தெலாமுந்திபில்லைமுகுந்தனொருத்தனே
பழுதிலாவுயிர்முத்தியளித்திடும்பரமனென்பதுபாகவதஞ்சொலும்
தழைபநற்குணபூரணனதாமோதரன்றனைசசம்புசத்தத்தினல்
நழுவலாதநற்செஞ்சொனிரப்பியநாரணனைபகிடத்தினுநாட்டுமே.(உ௰)

ஆனுசாதனுகத்தினுஞ்சம்புவென்றுழியானைப்பகாந்திடுமாதலால் [ந்
தேனுலாமலாநான்முகனோடுவெண்டிங்கள்சூடுஞ்சிவன்முதலோர்களை
தானுமேனைகண்டுவுநூல்களுஞ்சம்புவென்றுதனித்தனிச் சொல்வது
மானனுய்திரமற்றசுகந்தரும்வண்மைகொண்டுவழங்கியதன்மையே. ()

இச்சைதன்னொடு ஞானங்கிரியை யென்றெண்ணுமம்மைகள்
மூவரிவாக்கெலாம், அச்சுதன்றனிநாயகனுதலா னன்னவன்றிரியம்பக
னென்பதும், நிச்சயித்தகிற் புத்திரனியப்பெயர்நிமலனேதி நிகழ்த்தியச
ங்கிதை, உச்சரித்திடு மாதலிற்றெல்லை நூலுட்படாத வாக்குள்ளங
தெளியுமோ. (உஉ)

நலமதாயவிச்சாசத்திதானுநீண்ஞானசத்தியுநண்ணுங்கிரியையாம்
புலமைகூாசத்தியுந்திருமாலினுறபூதமானபொருளைப்புவனமேல்
அலகிலாவெசுவேதத்திணங்குசீராரணத்துமதருவணத்துநீ
டிலகுசெஞ்சொன்மகோபநிடத்தினும்யாவருக்குமியையப்பகருமே. ()

தலைமைகூரச்சுதனேயுருத்திரசத்தமாகித்தழைத்தசத்தந்தனக்
கலகிலாதபொருள்பெறுநதுன்பநோயகலுவித்தலழலமூவித்தலாம

திலகவாணுதலாகமவல்லியேசிந்தையிற்றுயர்தீர்த்திடுந்தன்மைநின்,மல
ரிஞுண்மணவாள்ன்செயலெனவாய்த்தசீர்ப்பிர மாண்டத்திலோதுமே

பிரளயத்திற்பிரமன்சதாசிவப்பெயரினுன்முதலோரைப் பெரும்பயங
கரசொருபனுமாயழிவிப்பவன்கண்ணனென்னுங்கமலப்புராண நூல்
பரவுவேதனிடத்திற்பிறந்ததன்பாவநீங்கப்பரிந்துதற்பேரிடென் [தே.
றுரைசெயாநின்றழுதது கொண்டுதோலுடையினனையுருத்திரனெனப

அயனிடத்திலுமாபதியுற்பவிப்பழுதுருத்திரனும்பெயர்பெற்றது
நியமமானசுபாலோபநிடமுநிகமெசுருநிகமமுஞ்சொல்லுமால்
உயருருத்திரநாமமுகுந்தனுக்குள்ளதன்மையுலகோர்க்குஞானமாய்
நயனமாம்பஞ்சமவேதபாரதநவில்சகத்திரநாமத்துமோதுமே. (உசு)

உற்றதுன்பங்களைபவனுதலாலோங்குமாலையுருத்திரனென்ன
வும், மற்றிவன்சகலர்க்கும் பெரியனுமகிமைகொண்டு மகாதேவனென்
னவும,சற்றலாதசுகரூபியாதலாற்சார்ங்கபாணிதனைச்சம்புவென்னவும,
கொற்றவைச் சொரியத்தால் விளங்கும்வைகுந்தன் மெயப்பெயரிங
திரனென்னவும். (உஎ)

தோலினுற்புறம்போர்த்தவுடம்பினைசகூத்திரப்படிவம்போலியக்கலால்
தாலமெழளந்தாற்குக்கிருத்திவாசன்னெனுமபெயர் கான் வந்ததென்ன
நீலவார்குழலாய்பலவாகியநிகிலலோகநியாமகனுகையால் [வும்
ஏலமாமறைபோற்றுமுகுந்தனெம்பிரான்றனையீச்சுரனென்னவும()

பேசுநாகமடைவிநதல்கொண்டுமால் பேர்பிநாகியெனப்பெற்
றதென்னவும், ஆசரித்தவர் தமமைப்பெருமையோ ராக்குகின்றவரு
ளின் பெருமையால், கேசவற்குப் பிரமனெனும்பெயர்கிளந்தெடுத்த
தெனவுங்கிளர்செகம, ஏசிலாமல்விடுவதுகொண்டு மாலேவிரிஞ்சியெ
னுமவனென்னவும. (உகூ)

விவிதமானவிலோசனனுகையான்மிக்கமாலைவிருபாக்கனென்னவும்
புவனசிட்டிசெய்லாலரியையே போற்றுநீள்விச்சுவகன்மனென்னவும்
உவமையில்லாதவண்டங்களையெல்லா மோங்குசீருதரத்தினில்வைத்த
நவையிலாதவிரணியகர்ப்பனுநாமமூர்த்தியுநாரணனென்னவும். [லால்

நிகிலலோகம்வரம்பழியாமலே நிலைநிறுத்தி நிகழ்த்திடுநீர்மை
யால்,சகலவேதபுராணசொருபனுஞ் சக்கரபாணிதனைச்சர்வனென்ன
வும், தொகையினுன்மிக்க காரணவாச்சியாய்ச் சுருதிவேறுசொலுஞ்
சொற்சமூகமும, மகிமைநாரணனைச்சொல்லுமென்னவும் வாய்த்தசீர்
ப்பிரமாண்டமுரைக்குமே. (ஙக)

அரிமுகுந்தனநந்தன்பராபரனுனநாமங்களாரைச்சொலுமவன்
ஒருவனேயந்தகனுமுயிருக்குளேயுறைகுவானுமுருத்திரமூர்த்தியும்

பெருமைசேர்ஙியந்தாவுஞ்சுவாமியும் பிராணதாரியுமென்றுபல்பேதமா
சுரிகருங்குழலாகமவல்லியேசுபாலநோபங்டைத்தினிற்சொல்லுமே. [ய்ச்

அனந்தசாகைகளாகிய வேதவேதாந்தநூல்களி லட்சரக்கூறெ
லாம், வனந்ததண்டுளவத்தொடைமாயனுமங்களேயெனவாழ்த்திமதி
ப்பினால், புனைந்தசீர்மிருதித்தொகைசொல்லுமப் பொருள்விளங்கப்பு
வனதிட்டாந்தமாய், தினந்தினந்தொறுமந்தணரோதுமத்தியானவந்தத்
தினிற்செப்புவார்களே. (௩௩)

சிவவுருத்திரசம்புமயேச்சுராதிப்பெருந்திருநாமங்கள்செங்கண்மா
யவனிடத்துங்கிழ்வதுபோலநாராயணுதிசத்தங்களுமன்னமே
தவமிருங்கமலாசனநான்முகன்ருழ்செழுஞ்சடைச்சங்கரனுதியர்
எவரிடத்தும்பொருந்திகழ்ந்திடாவென்றுவாமனியத்திலியம்புமே. ()

அயனுமிந்துதரனும்பராபரனுமாயனையன்புடன்போற்றிநீ
நயைபுரிந்துமுகுந்தவெமக்கசாதாரணப்பெயர்தந்தருளாயென
நயமோடந்தவயனுக்குயர்சதானந்தன்வேதனவினுன்முகத்தனம் [ம்.
புயவரோதயன்மெய்ப்பிரமாவெனப்புவனமெங்கும் புகழ்கின்றநாமமு

பக்கமொன்றினிற்பச்சைப்பசுங்கொடிபரந்திலங்கும் பவளக்கிரியைநே
முக்கணும்பர்பிரானுக்குநீறணிமுதல்வனுக்கிரமூர்த்திகபாலிசீர் [ர்
நக்கனென்றியனுல்வகைநாமமுநல்கினன்றிருநாரணனென்பதும்
கைக்குணெல்லிக்கனிபோற்பிரமமும்கந்தமானபுராணமுங்காட்டுமே()

ரு-வது, வந்தனையோக்கியப்பரிச்சேதம்.

தையல்பாகனுடனயனுக்கசாதாரணப்பெயர்சாற்றினனீதலா
வையமேற்பொதுவாகிவிளங்குசாமானியச்சொற்குவாச்சியனுமவன்[ம்
பையராவணையானேயவன்சகம்பணிவதற்குமெய்ப்பாத்திரனென்றலு
மையுலாவிழியாகமவல்லிசீர்வாய்த்தவேதமடந்தைக்கியம்புவாள். (க)

புனிதமாறிருநாமங்களெண்ணுவார்போல நீயம்புலிச்சேகரனை
யவ், வனசவேதனிற்ருேன்றினனென்றனைமற்றதற்கெதிமாற்றமுமே
ற்சொல்வேன், அனையநாமஞ்சிவனுக்குமாகமத் தனந்தகோடியுளதது
நிற்கநின், மனமுடன்படவந்தனைக்கும் பிரமாணமோதுவெனென்று
மற்றுஞ்சொல்வாள். (உ)

கருதுகுலகவேள்வியிலேநமக்காரபாத்திரன்கைக்கொளுவானென
உரியதோபசுவீதலினுலந்தவோங்குவேள்விக்குமாபதிதெய்வமாய்த்
தனையின்மீதுங்கிழ்தலினுலுநற்சதவுருத்திரியத்திலத்தானுவுக்
கருகமாம்பலவந்தனைசொல்லுதலாலும்வந்தனையங்கவன்றன்னதே.(௩

ஆகமக்கொடியவ்வுரை கூறவாரணமடந்தைபகர்வாளரிவையே
சேகரப்பிறையானைச்சதவுருத்திரியம்வந்தனைசெப்பியவாறுகேள்
ஊகபுத்தியினூற்றொடக்கத்திலேயுக்கிரத்தின்படிவானவும்பொருட்
டாகவேநமவென்றதுமத்திமத்தடைவுசேரனுவாகங்கடம்மிலே. (௪)

பலவிடத்தினும்வாதைசெய்வானெனும்பண்புபுத்தியணிநீள்பயத்தினு
ல், அலகிலாவெகுவந்தனைசொல்லியந்தத்திலே யெங்களாயுப்பசுச்சுதர்
இலகுமாறருளீறுசெய்யாய் கொலென்றிடுதலா லவ்வியல்வந்தனையெ
மெலிவுகூர்பயபுத்தியிலல்லதுநீள்பரத்துவநிச்சயித்தல்லவே. [லாம்

பாரிலிப்படியேபயபுத்தியாற்பணிவதற்கொருபாத்திரமாகிய
கோரவிக்கிரமச்சூலபாணியைக்கூறுசூலகவேள்வியதனினும்
சீரின்மிக்கபடிநமக்காரபாத்திரனெனுந்திறஞ்செப்பியதென்றலும்
தாரமைத்தகுழல்மறைமானுடன்றக்கவாகமத்தையல்விளம்புவாள் (௬)

ஓதுமிச்சகத்துக்குச் சுவாமியாமொருவனுக்கன்றி யுக்கிரஞ்
சொல்லுமோ, ஈதுநிற்பப்பயமும்வணக்கமுமிணையிலார்க்கன்றியாவரு
ஞ்செய்வரோ, வேதவுத்தமியேயென்றுரைப்பவுமின்னனூளும் வியப்
புடனாகமக், கோதையைக்குறித்திங்கிவைகேளெனக்கோகிலப்பெடை
போலிவள்கூறுவாள். (௭)

அங்கிதேவன்றனையெசுவேதமைந்தானகாண் டமைந்தாம்பரு
ச்சத்தினில், பொங்குநீள்வயவேங்கைவரிப்புலிபோன்ற சீற்றம்பொறு
த்தருளாயென, இங்கிதம்பெறவந்தனைசொல்லுமாலிதுவுமன்றியிவன்
றனையாரணம், தங்குபஞ்சகமாம் பருச்சத்திலுந்தக்கவந்தனை சாற்றிய
தன்மைகேள். (௮)

ஒன்றுகேண்முதலாய்ப்பலவந்தமாயோங்குசீர்நமக்காரமுரைத்திடும்
குன்றுநேர்முலையாயிதுவன்றியேகோலமானவிருடிக்குழாத்தையும் [ம்
நன்றிகூர்வந்தனைசொல்லும்பின்னையுநாமவேள்விநடாத்து மிடத்தினு
துன்றுநீதிபுனைசவுளாதியாய்ச்சொல்லுகின்றசுபகருமத்தினும். (௯)

கூர்மமாகியசத்திகடம்மையுங்குறித்துவந்தனைகூறு மிக்கொள்கைபோ
சீரிதாகமணஞ்செயலாகயாத்திரைகடம்மினுந்தீங்கணுகாமலே [ல்
ஏருலாவுசகுனப்பக்கிக்கும்வீறேற்றவேதமியம்பிவிதிக்குமால்
பாரின்மீதுபயங்கரபுத்தியாற்பணிந்தயாவும்பரத்துவமோவென்றுள்()

சேயவாரணவல்லியித்தன்மையைச்செப்பலோடுஞ்சிவாகமவல்லியும்
தூயதாஞ்சதருத்திரியத்தினிற்சொற்சராசரத்தோமங்களைக்குறித்
தேயவேசொல்லியவந்தனைக்கெலாமிந்துமோலியிடையேயடைதலால்
ஆயசங்கரனேசருவாந்தரியாமியென்பதற்கையமுண்டோவென்றுள()

அந்தவாய்மொழிக்காரணவல்லியுமாலகண்டனையந்தரியாமியென்
றெந்தநூலுமியம்புவதில்லையவ்விறைவனான்முகன்றந்தவரத்தினால் [ம்
மூந்துமெண்வகைமூர்த்தமதாகியமுறைமையாலவன் மூவுலகத்தொடு
தொந்தமானசொரூபகனென்னவேதூயவந்தனைசொன்னதுகாணென்

ஆரணக்கொடியிம்மொழிகூறநீடகிலரூபமனைத்தையுநீயெனத் [றாள்
தாரணிக்குப்பராபரன்றானலாதவனைமாமறைசாற்றிடுமோவெனச் [ம்
சீரணைத்திடுங்கல்விச்சிவாகமச்செல்வமங்கையுஞ்செப்பினள்செப்பலு
வாரணைத்ததுணைத்தனவாரணவல்லிமீளமறுத்திரஞ்சொல்லுவாள். ()

ஆவிநீசகநீயண்டரண்டநீயன்னநீதெள்ளமுதநீபற்பல
தேவுநீயெனவேயெசுவாரணந்தேங்குநீரைச்சிறப்பித்ததீதலால்
தாவுமக்கினியோடந்தணரையுஞ்சகலதேவதையென்றுதனித்தனி[னாள்
பூவிலோதியவப்படிமுக்கணற்புதனையும் மறைபோற்றிற்றென்றோதி

ஆகமக்கொடியம்மொழிகேட்டலுமந்தணாளரையக்கினித்தேவனை
மேகநீரைப்புகழ்ந்ததுபோலவெவ்விடையினானையும் வேதம்புகழ்ந்தது
பூகநேர்களத்தாரணவல்லியேபுன்மையீதுபுகன்றாய்புராரியாம் [வேன்
ஏகநாயகனேவந்தனைக்கெல்லாமிறைவனென்பதற்கின்னமொன்றோது

தஞ்சமானதயித்திரியத்தினிற்றானுநிற்பச்சகலதெய்வத்தையும்
சிஞ்சுமாரப்பிரசாபதியுடல்சேருறுப்பெனச்செப்பிச்சிரமது [வர்தம்
பஞ்சின்மெல்லடியாய்வந்தனைக்கெலாம்பாத்திரன்வடிவென்றலிற்றே
புஞ்சகத்துளவந்தனைபாத்திரன்புராரியென்றுபொருட்படுமென்னவே

இனையசொல்லியவாகமமென்கொடிக்கேறபவாரணவல்லி யியம்புவாள, அனையதன்மையில்வந்தனைபாத்திரரானதேவரநேகருண்டாகையால், தொனிசைபொற்கொடியேத்துஞ்சிவனையே சொன்னதென்னப்பொருதுசொன்னாலுமென், சினைமலர்ச்சிஞ்சுமாரற்கவன் றனைச்சென்னியென்றுரைசெய்ததுமில்லையே. (கஎ)

செய்யவந்தனைப்பாத்திரன்றானுமாய்ச் செப்பிடுஞ்சிரச்சொற்சிஞ்சுமாரனார், துய்யமேலவாதாங்கெழுத்தெட்டெனச்சொல்லலாலுந்துலங்குந்தன்மைத்தனை,மெய்யில்வீறுபுனையுமூர்த்தாவெனமேல்விளம்பிவிவரிக்கையாலுமப், பொய்யிலாச்சிரச்சத்த முகத்திலோர்பொருளூறுப்பைப்புலப்படச்சொன்னதே. (கஅ)

அன்னவன்றன்சிரவுறுப்புக்குமே லானவுச்சிகனற் றெய்வமென்கையால், முன்னுரைத்தசிரவுறுப்பானவன்முக்கியப் பெயரால்மொழியப்பெறான், இன்னகாரணநிற்பவவன்றனக்கின் னுயிராக்கிடமாமிதயத்தலந், தன்னைவிண்டுவெனலாற் பிராணனைத்தாஙகுறுப் பிற்றதுமுறுப்புள்ளதே. (ககூ)

வஞ்சிமெல்லிடையாயிதுவன்றியேவாய்த்தவிண்டுபுராணத்திரண்டதா
அஞ்சகத்தினிலீரிரண்டாகியவத்தியாயத்தரியவதாரமாய்ச் [ம
சிஞ்சுமாரசரீரத்திருந்துசோதிப் பெருஞ்சக்கரஞ் செலுத்துஞ்செயல்.
தஞ்சமாகச்சொலுமதனுற்சுரர்தாஞ்சரீரஞ்சரீரியச்சார்ங்கியே. (உ௰)

செங்கண்மாலினவதாரமாகியசிஞ்சுமாரனைச்சிந்தைசெய்வார்க்கெலாம்
தங்குவீடருடேவதையென்னவுஞ்சகலவந்தனைதாரகனென்னவும்[யால்
பொங்குசெஞ்சொற்றயித்திரியத்தினிற்புலமைகூரப்புகன்றிடுந்தன்மை
எங்குநாரணனேவந்தனைக்கெலாமிறைவனென்னவிவளுமியம்பினுள்()

ஒண்ணுதற்றிருவேயிமையோர்களையும்மதாயவுயர்ந்தவனையெல்லாம், கண்ணுதற்குச்சமர்ப்பணஞ் செய்துநீர்காமியங்கள்கைக்கொண்டிடுவீரென.வெண்ணுசீர்கொளிருக்கிலுரைக்கையாலேனைவந்தனைக்கெல்லாமுரியராம், விண்ணவர்க்குமரனேசரணியன்வேறுவந்தனைக்கார்விதித்தாரென்றுள். (உஉ)

சுருதிவல்லியதுகேட்டுரைசெய்வாள் சுரரைநோக்கித்தொகையேகுறிக்கிற்றும்,கருதிநீங்களுங்கட்குசசெயுநமக்காரம்யாவையுநகண்ணுதற்கீமினென், றுரைசெய்தன்மைசுருதியிலில்லையவ்வும்பரைக்குறித்துங்கட்குருத்திரன், தருவனென்றது காமியமன்றியேதக்கவீடுதருமென்றதில்லையே. (உ௩)

ஆதலாற்றம்மிற்றாழ்நதவர்வந்தனைக்கருகரற்புதராகியதன்மைபோல்
ஓதுமாபதியுஞ்சுராவந்தனைக்குரியனந்தவுமாபதிவந்தனைக்
கேதுபூதரும்வேறுளரொன்றலுமேற்றவாகமவல்லியிலங்குசீா
வேதவல்லிமதிமுகம்பார்த்தொருவிவரவாய்மைவிரித்துவிளம்புவாள்()

ஈறிலாதநுதல்விழித்தேவனே யாவருக்குமிறைவ னென்றல்லவோ, கூறும்வானவர்தம்முளொருத்தனைக்கூட்டிவாவெனிற்கூட்டிபணிந்திடில்,ஆறணிந்தவன்சீறுமென்றேயிருக்கதனிலேயிரண்டாமட்டகத்துளே, வேறதாகவிரித்துரைக்கின்றதம் மெய்ம்மைவாயமையைவேறும்விளங்கவே. (உ௫)

வாசவன்றனையங்கியைமித்திரன்வருணனைக்குருவைசசோமனைப்புகழ
வீசுமச்சுவினித்தேவரையெலாம்வேறுவேறழையாதழைத்தைம்முகத்
திசனைத்தனியேயழைக்குந்திறனேற்றசிரொசுச்சாகையுங்கூறலால்
பேசுபைக்கிளியேதனிநாயகர்பேரையன்றிப்பிறித்தங்கழைகருமோ.()

என்னவாகமவல்லியுரைப்பமற்றிவளுநீயிங்கியம்பியமந்திரம்
தன்னிலேமகதேவனைவேறுறத்தானழைத்தவத்தன்மையுமன்றியே
மன்னுமிந்திரனீடுமகேந்திரன்வருணனென்பவரையுந்தனிதனி
அன்னசாகைதனிலங்கழைத்தலாலவாகடாமுமதிகாகளாவரோ. (உஎ)

ஆயிழாயிங்குநீவிரித்தோதியவன்னமந்திரத்திற்பொருள்கேண்மதி
தீயநோயனுகாமற்பிரார்த்தனைசெய்துகொள்ளுஞ்சிலர்மகிழ்ந்தாயிர
வாயராவணியுஞ்சங்கரன்றனைவாழ்வயித்தியருக்கும்வயித்தியன்
நீயெனும்படியாஙகளறிந்தனநீறுபூசியநீலமிடற்றனே. (உஅ)

உன்றனக்குலகத்திலிணையிலா வும்பர்தம்முடனொக்க வணங்கி
யும், நின்றுமற்றவர்தம்மோடழைத்துமுன்னெஞ்சில்வெஞ்சினநீடுதல்
செய்கிலேம், இன்றெமக்குமருத்துவவித்தையா லின்பமாக்கென்றிரந
தனரித்தனை, மன்றலஞ்சடையானிதனுற் பரவத்துவென்றுவகுத்திட
லாகுமோ. (உகூ)

தக்ககூட்டத்தவரையழைத்தபின்றனியழைக்கத்தகுநதமராயினோ
அக்குழாத்திலுயர்ந்தவாதாழ்ந்தவரானபேரிருவோர்க்குமடுக்குமால்
மைக்கணுயநக்கனையந்தமந்திரம்வண்மைகூரவயித்தியனென்னலால்
மிககவானவர்க்குப்பின்பிழைப்பதும்வேதநீதியில்வேணடுமுறைமையே

அன்னதெவ்வகையென்னில் வயித்தியரானவச்சுவினித் தேவ
ரைதனைந்,துன்னும்வேள்வியில்வானவாதம்முடன்சோமபானசசுவை
யருந்தாதவா,நிங்கிலத்திற்புறக்கணிததிட்டனொன்றும்வேதமிதுநிறக
முக்கணன், தன்னைமுக்கியனென்னிலுமஙகழைத் தவரின்முக்கியனெ
ன்னததகுமென்றாள். (௩க)

பாலனோமொழியாரணவல்லியிப்படியுரைப்பப்பசும்பொற்கு
ன்றுதுரந், தாலகாலவிடமெனச்சேலெனவழகுசோவிழியாகம வல்லியு
ம, ஏலவார்குழலாய்வந்தனைக்கெலாமேற்றபாததிரனேரணி மூவிலைச,
சூலபாணியனே யென்பதறகியான் றேன்றவொன்றினிச சொல்வ
னென்றோதுவாள். (௩உ)

நாரணற்குயாசஙகடையாளமுநான்முகற்குநளினக்குறியுமவாழ
திரதற்குஞயரிந்திரற்குநீடேசுகூாவச்சிரலாஞ்சனையுமாயப்
பாரிடத்திலபிநயஞ்சொல்லுமப்பரதசாத்திரப்பாவனை நூலிலே
ஆணைநீயஞ்சலிமுத்திரையினுலவனைவைப்பதறிநதுகொள்ளியென்றாள.

சுருதிவல்லியிதற்கு நகைசெயூஉத்தூயவேத புராணததுறையி
னுல், உரியவுத்தரஞ்சொல்லப் பெறுதநீயோத வேலையிலோடதனை
விட்டருஞ், சுணைமிதப்புக்குடுக்கையைக்கைக்கொளநதோன்றுதுன்ம
திருழந்துளபோகள்போல், பரதசாததிர நூல்கொண்டுவென்றியேபக
ர்தறன்னையும்பாரததுமென்றோதினுள். (௩௪)

மாலினாகருவலம்புரிசசஙகுநால்வதனனுக்குவரபுண்டரீகமும்
கோலவிந்திரனுக்குயாவசசிரக்குறியுமென்றுநீகூறியகொள்கைபோல்
மூலநெற்றியிறபற்றவநோமுகமுன்னுசூசிமுகமுததிரையினுல்
பாலலோசனனுககுமபிநயமபன்னுமாதிபரததிலோதுமே. (௩௫)

பழுதிலாலகுமாதங்கமாகியபரதசாத்திரப்பாணிவிகற்பினில்
அழகுநீள்சுரஞ்சேரஞ்சலியனைத்தமரருக்குமணிநுதலஞ்சலி
விழுமிதானகுரவர்க்குமாரபினின்மேவுமஞ்சலிவேதியாகக்கும்மெனப்
பொழிவுகூரஞ்சலிமுத்திரையினைப்பூதலத்திற்பொதுப்படக்கூறுமே.

மற்றுமஞ்சலிமுத்திரையைச்சொலுமாவராகிதனக்குமீதன்றியே
பெற்றிடும்பிரமத்தலமூர்த்தியாய்ப்பேசுநாடகசாலையிற்போபெறும்
கொற்றநான்முகனுக்குவிசேடமாய்க்கோலமானபுட்பாஞ்சலிகூறுமால்
நெற்றிலோசனற்கீதுகொண்டோமினைநீள்பரத்துவநிச்சயித்ததே.()

அலங்கலோதியாய்மற்றிதுநிற்கநீடகிலபஞ்சதாளேசுரநூலினில், நடனகொடாளத்திருக் கோயிறன்னிலே நண்ணிவாழ்ந்திடு நாரணனென்னவும், துலங்குதாளத்தினி லெழூநாதமேதூய நக்கன்சொரூபமதென்னவும், இலங்குநாதத்தினுள்ளுபிராகுவானே சிலாவந்தநாரணனென்னவும். (௫௮)

இனையதாளத்தெழுந்திடுநாதநல்லிசையினுலேயவற்கன்புசெய்வதும
வனசவுந்தியினன்முகனேதகருமாலையேமகிழவிக்குமதென்னவும்
புனிதமாதவததாளநன்னுதமிப்புவனமண்டலமேலுகப்பாரொலாம்
அனகனுகியவந்தனைமாலவனருளின்முத்தியடைகுவரென்னவும் (௫௯)

ஈதலாதுமிராகப்பிரகணத்தின்பமானவிசையின்றிறமெலாம்'
தாதுசேருங்காருங்குழறறையலேசாமகானவிகற்பங்களென்னவும
ஓதுமிப்பெருஞ்சாமசுருதிமாலுருவமென்னவுமுற்றவிததன்மையாம்
கீதமின்பமுணாவாாகுமுதநிதான்கிட்டுமென்பதுங்கேழறவோதுமே

கூ-வது, வாதனைக்குரியதாரகப்பிரம சொரூபத்தை
சிவனுபதேசித்தப்பரிச்சேதம.

இங்குமறறிதுநிறகமதிப்பினுலெண்ணிலக்கமிலா வந்தனைகளெலாம, பங்கய ஈதிருநாயகனுகியபரமனேவரபாத்திரனென்னவும்,செங்கயறகட் கருங்குழற் பைந்தொடிசசிற்றிடைப் பெருந்தேர்மணியல்குலாய, மங்கலசசொறசிவாகமவல்லியேவகுததுணைப்பன்மனங்கொண்டு கேட்டியால். (க)

பிரமனும்மதுசூதனுமீசசுரப்பெயரினுனுமெய்ப்போபட்டதேவரும்
பரவுவேதமுமங்கமுஞ்சாகையும்பலபுராணமுமம பானுவுஞ்சோமனும
சுரருமேனையசுரருமாந்தருந்துவாதசாதித்தியருந்துலங்குசீா
மருவுயட்டவசுக்களுமபன்னொருவாக்கமானவருததிராகளும. (உ)

இலகுமென்டிசைப்பாலருங்காலமுமியிலுமந்தகன்றனுமியாகமும
சுலபமானமகாதேவனுமயேசுரனுமீன்முதறமேருன்றவதாரமும
நிலையினிறபனயுந்திரிகின்றவுநிகிலவிசசுவமுமியந்தாவுநீ
டலகிலந்தக்கரணசதுக்கமுமாவியுஞ்சருவாந்தரியாமியும. (௩)

பிரணவாக்கரமுமுயர்தாரகப்பிரமமும்மறைபேசிடுமேழ்வியா
கரணமுங்கிரகங்களுந்தாரகாகணமும்யோகமுங்கண்ணெனுஞானமும்
உரியவண்டத்தினுள்ளும்புறம்புமாயுலவுவானுமொப்பாருமிக்காருமில்
அரியுமத்திருவுங்கலைவாணியுமச்சுதானந்தவிக்கிரகத்தனும். (சு)

என்னவோதுஞ்சகலமுநீயெனவேத்தியங்கமிலக்கணங்கூரவே
நன்னயததினவிலும்பதங்கொறுநாட்டிநாட்டிநமோநமவென்றவச்[னே
சென்னிவந்தனேயெல்லாமிராமச்சந்திரனேயேகுறித்துச் செய்கைவந்த
பன்னுசீர்புனேயும்யாச்சவற்கியோபநிடமோதிப்பரதுவங்காட்டுமே()

அல்கிலாதபெருவேள்வியின்வடிவானநாரணனேயாதரத்தினல்
பலபகாரம்பணிந்தரியேபுனேப்பணியுமிந்தப்பணிவுகளன்றியும்
தலைமைகூரந்தரியாமியானநின்சரிரபூதர்களாய்ச்சமீபத்திலே[ன்னவே
இலகுதேவர்க்கிறைஞ்சியவந்தனேயெனவையுநின்பொருட்டேயெய்துமெ

சீரிணங்குமெசுவேதசாகையிற்செறியுமட்டகமூன்றினிலேழதாய்
நேருநற்பருச்சத்திருமூன்றெணநின்றதோரனுவாகநிகழ்த்துமால்
ஏரணிந்தபிரமசொருபனுயிலகுவிண்டுவுக்கேநமவென்றுபூந்
தாரணிந்தகுழலாய்பிரமமச்சத்துமந்திரந்தன்னிலுஞ்சொல்லுமே.(எ)

திகிரிமாலினவதாரமாகிய சிஞ்சுமாரப்பிரசாபதி தன்னேயே,
சகலவந்தனேக்கும்பாததிரனெனத் தரணிபோற்றுந் தயித்திரியஞ்சொ
லும்,அகிலகாரணனுகிப்பராபரனனவச்சுதனுக்குயர்வந்தனே,ககனநே
ரிடையாய்மெயப்பொருளெல்லாங் காட்டும்பாரதகாதையிலோதுமே.

மன்னுபாகவதத்திற்றசமமாய்வாயத்தகந்தம்வச்சாபகரணத்தில்,அன்ன
வாகனன்கண்ணன்பரத்துவமடைவிலோதியடியிணைதாழ்ந்தமை,முன்
னியோதுமுதற்பஞ்சகத்திலேமுதிரும்விண்டுபுராணமுமுத்தொழில்
தன்னேவல்லபராபரமூர்த்தியேசாங்கியேசரணென்றமை சாற்றுமே.

ஈனமாறுநற்பாகவதத்தினிலீரிரண்டாங்கந்தத்திருபத்துமூன்,ஞனசீ
ரததியாயமுககட்சிவனன்புசேர்பிரசேதர்களுக்கொரு,தேனுலாவுபுது
மலாப்பொயகையிற்செம்பொன் மால்வரை போல்வந்து தோன்றியே
ஞானநாரணனுர்தம்மகிமையைநாவிஞலுபதேசித்தநாளிலே. (அ)

உலககாரணனேநமமிக்கபேரோதுபேர்பெறுமுத்தமனேநம
அலகிலாதுயருஞ்சருவாந்தரியாமியேநமவச்சுதனேநம
இல்குமுத்தொழிலையகனேநமவெங்தையைத்தருமுந்தியனேநம
பலவுயிர்க்குயிராகியிருந்துமோர்பற்றிலாதபராபரனேநம. (கக)

மங்கலக்குணபூரணனேநமவாய்த்தமுத்தியளிப்பவனேநம
துங்கமேவள்விச்சொரூபகனேநமசுத்தசாத்துவிதசசொரூபாநம
சங்குசக்கரபாணியனேநமசச்சிதானந்தமேநமவென்றுகொண்
டங்குநின்றுபணிந்தமையாழிசூழவனியோர்நின்றறியப்பகருமே. (கஉ)

உலகமீதுபராபரன்யாவன்மற்றேருங்குமுத்திக்குபாயசன்மார்க்கமே
தலநில்வந்தனையார்க்குரித்தாகுமாராதனைக்குரியானெவனையவென்
றிலகுவேற்றருமன்வீட்டுமனையங்கேத்திநீயிதியம்பிடுகென்றெனச்
சலனபுத்தியிலாதவவ்வீட்டுமன்றான்மகிழ்ந்துசரசயனத்திலே. (கங)

பூரசுயாதத்தவகேளுலகுக்கெலாமூலகாரணனுமுகுந்தனே
பரவவேதத்தினைக்கவருச்சனைபண்ணமுங்கியபாத்திரனானவன் [ன
கருதிமுத்திபெறுகைக்குமற்றவக்கண்ணனல்லது கண்டதொன்றில்லெ
அருளுறப்பகர்ந்திட்டதுபாரதத்தானுசாதனிகத்தினிலுள்ளதே. (கச)

மற்றிதன்றியும் பாரதத்தொன்று கேள்வான்வழங்குமழைத்து
ளிநீரெலாம், சொற்றரங்கக்கடலினைச் சேர்வபோற்றெருகுதியான சுர
ரையெல்லாங்குறித், துற்றிறைஞ்சிடுவந்தனையாவது மோங்குகேசவனு
மொருவனாதத்தினையப், பற்றியேயடைக்கின்றதெனுந் திரம்பண்புகூரப்
பகர்ந்திருக்கின்றதே. (கரு)

அனையசொற்குப்புவனதிட்டாந்தமுண்டானதேதெனிலந்தண
ராயாவர்க்கும், வினையமாமனுட்டான வந்தத்திலே வேறுவேறுளவின்
ணோர்களையெலாம், நினைவினால்வந்தனைசெய்தபின்னையிந்நீள்சுலோக
நிகழ்த்திமுடித்தலால், வனசநாபியனேயனைத்தாகிய வண்மைவந்தனை
க்குமவர்பாத்திரன். (கசு)

கருதுலோகத்தவராலுநீநமக்காரபாத்திரனென்றகறைக்களத்,
தொருவனாலும்பணிதற்குரியவனேயுநாரணனேயெனுமுறைமையை
ச், சுருதியாலுமுபநிடதத்தாலுநீள் சொற்புராணத்தினாலுந் துலங்கு
சீர், மிருதியாலுமுரைத்தனெ னென்றனன் மேன்மைதங்குமவ்வேத
மடந்தையே. (கஎ)

எ-வது, மங்கலகுணப்பரிச்சேதம்.

ஆயவளினையகூறவாகமவல்லிசொல்வாள்
மாயவனொருவன்றானேவந்தனைக்குரியனென்ன
நீயிதுபகர்ந்தாய்பின்னேநிறைந்தவந்தனைகட்கெல்லாம்
பாயும்வெவ்விடையினானேபாத்திரனல்லனாகில். (க)

ஆச்சரியங்களானவறுவகைக்குணங்களோடே
சாச்சுதமாகநின்றுசகலசற்குணமும்பெற்றுப்
பூச்சியமானமேலோர்புகழ்ந்திடும்பகவற்சத்த
வாச்சியனாமோவன்னானென்பதுவகுத்துச்சொன்னாள். (உ)

அரியமாமறைமானச்சொற்கழகுறநகைத்துமின்னே
இரவலாபரணத்தைப்பூண்டெமக்கியைந்திருந்ததென்னத்
தெருவினிற்குலாவுவாரபோற்சிவனையும்பகவானென்றும்
உரைசெயப்புதுமைதன்னையுள்ளவாறறிதியென்றாள். (௩)

அம்மொழியமையக்கேட்டவாகமவல்லிமுக்கட்
செம்மலையனையதேவேசிறந்திடும்பகவானென்னும்
மெய்ம்மைநானுனக்கொப்பாகவிரித்தபின்மிகைநீசொன்ன
இம்மொழியுனக்கேயன்றேவென்னமேவியம்பலுற்றாள். (௪)

பகவனென்கின்றசொற்குப்பயன்பரிபூர்ணமான
சகலயிச்சொரியம்வீரஞ்சம்பதைகீர்த்திஞானம்
மகிமைவைராக்கியமென்னுமங்கலகுணங்களிந்தத்
தகைபெறுகுணங்கணக்கன்றனகருளதன்மைநீகேள். (௫)

அரியவீச்சுரசத்தத்தாலயிச்சொரியத்தைச்சொல்லும்
விரவுருத்திரசத்தத்தால்வீரியம்விரித்துக்கூறும்
மருவுறுசருவசத்தம்வரம்பிலாஞானமாகும்
கிரமமஞ்சிவசத்தத்தாற்கீர்த்தியைக்கிளந்துமன்றே. (௬)

மன்னுகாமாரிசத்தமதித்தவைராக்கியமோதும்
தன்னியற்சிரேட்டசத்தஞ்சம்பதைதன்னைச்சாற்றும்
இன்னனசத்தத்தாலேயெண்ணியகுணங்களாறும
கன்னியோர்பாகனானகண்ணுதற்குள்ளதாமே. (௭)

நிகழுமிக்குணங்களன்றிநியமனந்திருதிசிட்டி
தகுதவமபொறுமைசாந்தஞ்சத்தியந்தருமமென்னும்
அகணிதகுணங்களெல்லாமவனியல்பாகையாலே
பகவனென்றுரைக்குநாமம்பசுபதிதனதேயென்றாள். (௮)

அளிகுலாவியகாரோதியாகமவல்லியச்சொல்
தெளிவுறவுரைத்தலோடுஞ்செழுமறைச்செல்விசொல்வாள்
வளர்மதிச்சடையினானைமங்கலகுணங்களாலே
அளவிடற்கரியானென்றுமவனேயேபகவானென்றும். (௯)

சுருதியிற்புராணந்தன்னிற்சொற்பிரமாணங்காட்டிக்
கருதியுத்தரித்திடாமற்கற்பனாகதைசொல்வார்போல்
உரியநாமங்கள்கொண்டேயுவமையாற்பொருளைக்கூட்டி
விரகினாலுரைத்தாலத்தைமெய்யெனக்கொள்வாருண்டோ. (௰)

நிகழுநாமங்கள்கொண்டேநிச்சயித்துரைக்குங்காலே
திகழ்வுருஞ்சருவனென்றுஞ்சித்தசவயிரியென்றும்
பகவனென்றும்பேர்பெற்றாபவுத்தனுமருகன்றானும்
அகிலமேல்வனாநாமிங்கநிகரொன்றெண்ணலாமோ. (கக)

நக்கனைப்பகவானென்றுநாட்டிநீகூட்டிவைத்த
தக்கவீச்சுரசிவாதிசகலசத்தங்களுக்கும்
முக்கியப்பொருளாங்தெயவமுகுந்தனென்றுறைத்தேன்முன்னே
அக்கதையிங்குச்சொன்னலவையுளோர்க்கடுத்திராதே. (கஉ)

நாரணமூர்த்திதானேநவையிலாக்குணங்களாலே
பூரணனென்பதற்குப்புராணமெய்ப்பொருள்களாலும்
ஆரணமொழிகளாலுமனைத்திதிகாசத்தாலும்
ஏரணிபிரமாணங்களிசைப்பனென்றெடுத்துக்கொண்டாள். (கஈ)

உத்தமவிருக்குவேதத்துபயவட்டகதிரண்டாம்
அததியாயததில்வாக்கமவையிருபத்துநாலில்
வைத்தகைத்திகிரிமாயன்மஙகலகுணங்கள்வான்மீன்
எத்தனையெனககண்டாலுமெண்ணரிதென்றுகூறும். (கச)

மருக்குலாங்குழலாய்மாயன்மஙகலகுணங்ளெல்லாம்
பெருக்கமேதினியின்மீதுபிறந்தவர்பிறப்போர்நிற்போர்
திருக்கிலாவுளத்தராகித்தேரினுமுடியாதென்ன
இருக்குவேதத்துவேறுமியைந்திடவிசைக்குமன்றே. (கரு)

விண்டுவினுடைமையானவீரியகுணங்களெண்ணிக்
கண்டிடத்துணிதல்பாரிற்கழிதுகள்கணக்கிட்டேற்றிக்
கொண்டிடலொக்குமென்னக்குறித்தெசுவேதத்ததி
பண்டைக்காண்டத்திரண்டாம்பருச்சத்திற்பகருமாதோ. (கசு)

பாவமுஞ்சிறையுந்துன்பம்பசியுமில்லாதானென்றும
கோவைமஙகலங்களானகுணமெலாமுடையனென்றும்
தாவுமிக்குணங்களெல்லாந்தற்சுபாவத்தனென்றும்
மேவுசாவித்தைதன்னில்விண்டுவைப்புகழுமன்றே. (கஎ)

இருமையேழுலகுபோற்றுமிராமச்சந்திரப்பிரானை
அரியுலாங்குழலாய்நாற்பத்தாறுகால்வேறுவேறு
மருவுமந்திரங்கடோறும்வகையுறப்பகருமென்று
பரவுசிர்யாச்சவர்க்கவுபநிடம்பகருமன்றே. (கஅ)

கணிதமில்குணங்களெல்லாங்கண்ணனுக்குளதென்றெண்ணாத
துணிபவாமுத்தனொன்றுஞ்சுபாலனோபநிடஞ்சொல்லும்
மணியெனத்துலங்குமேனிமாயனைப்பகவானென்று
பணிதிகழ்கின்றகெற்போபநிடமும்பகருமன்றே. (௧௯)

அகிலெலாமணைந்தகொங்கையன்னமேயதனுக்கேற்க
மகரவாருதியினுள்ளமணலெலாமெண்ணினாலும்
திகழுநற்கமலநாபன்றிவ்வியகுணங்களெல்லாம
தொகையிடற்கரியவென்றுசொல்லுமச்சியபுராணம். (௨௰)

விற்றொடுத்தொருவன்வானில்விட்டவெஞ்சரமவ்வானில்
சற்றிடமின்றியேகச்சத்தியற்றழியுமாபோல்
கற்றவர்தாமுமான்மங்கலகுணங்களைத்தம்புந்திக்
குற்றனபுகழ்வவொன்னவுரைத்திடும்விண்டுதன்மம். (௨௧)

செங்கண்மாயவனேயுன்றன்றிருவவதாரத்தொன்றின்
மங்கலகுணங்களெல்லாமணல்பணித்திவலைவான்மீன்
இங்கிவையெண்ணினாலுமெண்ணமாட்டாகணெஞ்சில்
சங்கையுற்றவரும்பன்னூடாங்கணக்கிடினுமென்றே. (௨௨)

பையவாரணத்தான்வச்சாபகரணஞ்செய்துமீள
வையமேல்வந்துபாதம்வணங்கிவாழ்த்தியதோர்வாயமை
செய்யபாகவதத்தெண்ணுந்தெசமகந்தத்திற்சீரார்
ஐயிரண்டுடனேநாலாமத்தியாயத்திலுண்டே. (௨௩)

சகலமங்கலங்களானசற்குணராசியாலே
அகணிதனுயிரேனுமணிமையேமுதலெட்டான
தொகுமயிச்சொரியத்தானுஞ்சுத்தசாதுவிதத்தானும்
பகவனுமுடிவிலானும்பாம்பணைப்பரமனென்றே. (௨௪)

சத்திரயாகஞ்செய்நாட்சரசொதிநதியின்றீரம்
சித்தராமுனிவரெல்லாநிருபணஞ்செய்தன்மை
பதததாங்கந்தத்தேயெண்பத்துநாலாகின்ற
மெய்த்தசீரத்தியாயம்பிருகுவிஞ்ஞானத்துண்டே. (௨௫)

அவ்வகந்தத்திலெண்பத்தைந்தாமத்தியாயம்
தன்னிலச்சுருதிபோற்றத்தழைத்தகீதையினின்மாலைப்
பண்ணுநற்குணங்களாலேபரிமிதந்தானிலானாய்
மன்னுசீர்ப்பகவானேமாமுகில்வண்ணன்றானேயென்றும். (௨௬)

பங்கயன்முதலினோரைப்பகுதிசம்பந்தராக்கி
அங்கெலாமுறைந்துபற்றற்றணிமையேமுதலாமட்ட
மங்கலைச்சூரியாகிவாழ்கின்றாய்யாழியென்றே
பொங்குநால்வேதந்தானேபுலப்படப்புகழ்ந்ததுண்டோ. (௨௭)

மதுமலருந்தியானைமங்கலகுணங்கட்கெல்லாம்
பதியெனப்போற்றிவச்சாபகரணஞ்செய்தநாளில்
சதுமுகன்பகர்ந்ததன்மைத்தலத்தினிற்சாற்றுமன்னோ
பதுமமாம்புராணத்தூடைம்பத்தொன்றாமத்தியாயம். (௨௮)

திவ்வியகுணங்களாறின்றிறத்தினைவிரித்துக்கூறின்
அவ்வகைக்குணத்தான்மிக்கானச்சுதனவனேயன்றி
மெய்வழிப்பகவானவான்வேறினியில்லையென்று
செவ்வியோர்புகழகிற்புத்தினியசங்கிதையுஞ்செப்பும். (௨௯)

சாண்டிலமிருதியூடுஞ்சத்தமாமுனிவர்ஞானம்
தூண்டுவிண்டுவின்புராணந்துருவருக்குபதேசித்தல்
காண்டிடுமிடத்துநீதிக்காசிபரதிதிக்கோதும்
பாண்டவர்காதையானபஞ்சமவேதத்துள்ளும். (௩௰)

துரியமந்திரமாய்ச்சொல்லுந்துவாதசாக்கரமதான
பிரமவித்தையினின்மேலோர்பேசிடுமபகவனுமம்
புருடவுத்தமனுமாலேபொதுவறவுடையானென்று
பரிவுறச்சகலலோகம்பாடமாய்ப்பகருமாதோ. (௩௧)

அந்தமின்ஞானஞ்சத்தியதிகயிச்சொரியம்வீரம்
முந்தியபலந்தேசெல்லாமுகுந்தனுக்கேயுண்டென்றும்
மந்திரசாத்திரத்தின்மாவிலக்குமியதான
தந்திரப்பகரணந்தான்றகவுறசசாற்றுமன்னோ. (௩௨)

சென்மமாரணங்களென்னுந்தீக்குணமில்லாதானும
நன்மையாங்குணமுள்ளானுநாரணன்றானேயென்றும்
தொன்மையாம்பிரமாண்டத்திற்சொல்லுமத்துலங்குமாலை
வன்மிகராமநூலுமங்கலகுணத்தானென்னும. (௩௩)

மிக்கிடும்பரமஞானவிருத்தர்களெனக்குமுன்னாள்
ஓககநற்குணங்களெல்லாமுடையவன்மாலேயென்றா
அக்குணமுடையமாலிவ்வசோதைநந்தனனேயென்ற
தக்கவீட்டுமன்சொல்பாரதச்சபாபருவஞ்சாற்றும. (௩௪)

அனைத்துலகத்துளோருமநேகமாயிரகாலங்கள்
நினைத்திருந்தெண்ணினாலுநீள்கடற்றுயிலுமாயன்
கனத்தமங்கலகுணங்கள்கணக்கிடமுடியாவென்றும்
பனைத்தடக்கொடியான்வேதபாரதத்துரைத்தான்மன்னே. (௩௫)

சதுமுகப்பிரானைப்போலத்தழைத்தவாறனேகக்கோடி
வதனமண்டலமுநாவுமாசசரியமிலாநெஞ்சும்
சிந்தைவறப்படைத்தபோதுஞ்செஞ்சுடராத்திகிரிமாலே
தந்தைவுறநிறைந்தவுன்றன்சகலமங்கலகுணத்தில். (௩௬)

பல்பதினாயிரத்தோர்பாகமாத்திரத்தைத்தானும்
சொல்பவருளரோவென்றேதுதித்தரனுரைத்தமாற்றம
வெல்பொருளவராகந்தன்னில்விரவியேயெழுபத்தைந்தாய்ச
செல்வுழியததியாயந்தெளிவுறச்செப்புமன்னே. (௩௭)

அ-வது, பகவற்சத்தார்த்த விவரணபரிச்சேதம.

புருடனென்கின்றபேருமபொஙகுசீர்ப்பகவானென்ன
மருவியேநின்றபேரும்வாசுதேவனதேயென்றும்
பரவுமப்பகவற்சத்தப்பதப்பொருள்ஞானஞ்சத்தி
விரவியபலமேகீர்த்திவீரியமயிசசௌரீயம். (௧)

சொன்னவிக்குணங்களெல்லாந்துளவமாறனதேயென்றும
பன்னுமத்துளவமாலேபழிக்குணமிலாதானென்றும்
அன்னவனல்லாதானையழைத்திடும்பகவனுமம்
பன்னுபசாரமென்றும்பராசரபுராணங்கூறும். (௨)

சுருதிகளின்னவாறுசொல்லியசொல்லினாலும்
மிருதிகளதனுககேற்பவிளம்பியவிபரததாலும்
கருதியபுராணமெல்லாஙகழறுகட்டுரையினாலும்
பெரிதிதிகாசததாலேபெறுமபிரமாணத்தாலும். (௩)

பகவற்சம்பந்தமென்றும்பரமபாகவதனென்றும்
இகழற்றபகவற்கீதையென்றும்பாகவதமென்றும்
தகவுற்றதிகிரிமாயன்சம்பிரதாயந்தன்னைப்
புகல்வுற்றுவழங்குகின்றபுவனதிட்டாந்தத்தாலும. (௪)

பகவனென்கின்றநாமம்பைந்துழாய்மாயனுக்கே
மிகுமசாதாரணப்பேர்மேருவில்லியையசசொன்னாலும்
அகிலமேறபரிதிசோமனக்கினியாதியோரைத்
தொகைபெறசசொன்னவாபோற்சொல்லியதன்மைதமெதென்றுள். (௫)

பரமார்த்தப்படலமுற்றும். ஆக திருவிருத்தம்-௨௱௫.

௨-வது, உபாசனைப்படலம்.

௧-வது, சிவவுபாசனைப்பரிச்சேதம்.

ஆரணவல்லியவ்வாறறையவாகமத்துமாது
சீரணிபகவற்சத்தஞ்செங்கண்மாலுமமாகில்
வாரணிமுலையாயந்தமாயவனிருக்கமாகத்
தோரணங்களையேவேதமுவாசனைசொலுமோவென்றாள். (௧)

மற்றவாசகத்தைக்கேட்டமாமறைமயிலுங்கங்கை
உற்றவார்சடையினானையுவாசியனென்னவேதம்
சொற்றதுமுளதேயானாற்றோன்றவுத்தரித்தியாயின்
வெற்றியுநனதேயந்தவிடையனேபரனுமென்றாள். (௨)

ஆகமவல்லியச்சொறகமகிழ்ந்தபரனைத்தானே
ஓகைகூர்மறைகளெல்லாமுவாசியனென்றதன்மை
நீகுறிக்கொள்ளுமாறுநிகழ்த்துவெனதனையெல்லாம
காகளக்கணைக்கான்மின்னேகண்டனஞ்செய்தியாகில். (௩)

கல்வியுமுனதேகேள்விக்கருத்ததுமுனதேசொல்லும
சொல்வனப்புனதேஞானத்துணிவுமுன்றனதேபின்னை
வெல்வினையுனதேயுங்கள்விண்டுவும்பரனேயென்னுப்
பல்விதபிரமாணத்தின்பயனெல்லாம்பகரலுற்றாள். (௪)

வேறு.

உன்னுசாகைகள்பலவினுமுபநிடங்களினும்
சொன்னதாகியவுவாசியவத்துவைத்துணிவால்
இன்னதன்மையனென்றெடுத்தேயிசைவிக்கும
தன்னைநேரிலாநாரணவுபநிடந்தன்னில். (௫)

மூதுணர்ந்தபேர்புகழநுவாகமோர்மூன்றில்
ஆதியாமனுவாகத்திலன்பருக்கெல்லாம்
தீதின்முத்தியையளிப்பவனென்னவுஞ்செகத்துக்
கோதுகாரணனென்னவுமொருவனையுரைத்து. (௬)

ஆமவன்றனைப்பிரணவவாச்சியனென
மாமகேச்சுரனென்றுபேர்வெளிப்படவகுத்துத
தாமமார்குழற்றையலேயன்னவன்றனக்கே
தோமிலாவுவாசத்துவஞ்சொல்லுகையாலும். (௭)

முன்னுரைத்தசொற்கேற்பமூன்றுமநுவாகம்
தன்னிலந்தநீபொசியன்றன்சொருபத்தை
மன்னுகிட்டிணபிங்கலன்மாவிருபாக்கன்
என்னவிப்படிநிச்சயித்தியம்புகையாலும். (௮)

கடையுமாதியுங்கண்ணுதலுபாசியனெனலால்
நடுவநாமநுவாகமோதியிடுநாரணனை
நெடுகியாயத்தினலுபாசகனெனங்கழத்தி
அடைவிலேபொருளகொண்டிடவேண்டுகையாலும். (௯)

தருமுவாசகனைநாராயணன்றன்னை
மிகுபரத்துவனென்றதில்விளம்பியதெல்லாம்
மிகிமையானவம்மகேசசுரனயிக்கபாவனையால்
அகல்விழிச்சியேயத்தனையாகையினலும. (௰)

அரியவீச்சுரன்யிககபாவனையினலரியைப்
பரனெனுஞ்சொலும்பகாநதிடப்பலிக்குமோவென்னில்
மருவுமந்திரவாதியர்கருடபாவனையால்
கருடனவதுகாட்டலாமாகையினலும. (௧௧)

அன்றியுமமவையறிந்திடுமுபநிடக்கருத்து
வென்றியீசுரனுபாசனையாவரும்விருமபந
துன்றுசீர்ப்பரத்துவந்துதிபரமதாய்சசொன்ன
தென்றுமோாபொருளியமபுகைக்கிசைகையினலும். (௧௨)

இன்னதன்மைகணிற்பநாரணனைமுன்னியம்பி
அன்னதறதுமேலம்புயங்கோசமாமிதயம
வன்னிமததிமததிறபரமாத்துமாவைகும
உன்னவிப்படித்தெளிவுறவிளம்புகையாலும், (௧௩)

அனையதாமிதயததைநாராயணன்றனதே
எனமொழிந்திடாதிருககினுகியாயத்தினியல்பால்
புனிதநாரணனிதயமென்றேபொருள்கொள்கை
இனிமையாயுசிதம்பெறவிசைகையினலும். (௧௪)

பாண்டுமைந்தனைப்பாாததனைப்பார்த்துநாரணனுக்கு
நீண்டஞானநல்னேத்திரமளிததனெனின்னைத்
தூண்டுகின்றவென்னுடையவீச்சுவரபாவனையைக்
காண்டியென்றுதன்வாக்கினர்கழறுகையாலும். (௧௫)

பாணிகாத்தசொல்லாலுயாநாரணனுபநிடம்
ஈனமற்றசங்கரனையேயுபாசியனெனவும்
ஞான்வசசுதனுபாசகனென்னவுநாட்டித்
தானுணாத்ததுதரணிமேனிச்சயந்தானே. (௧௬)

சிந்தைகூருமவ்வுபநிடந்திங்கள்வேணியற்கே
முந்துபாசியதத்துவமொழிந்ததேயானால்
அந்தமேலவனேபிரமாவவனெசீர்
இந்திரன்றனேயுஞ்சிவனென்னுமோவென்னில். (கள)

புவனம்யாவையும்படைத்தளித்தழிப்பதுபுணர்ப்பாம்
அவர்கண்மூவரிலொருவகைத்தொழிற்கதிகாரச்
சிவனெனும்பெயர்படைத்துயிரனேத்தையுஞ்செகுக்கும
அவனேயேயந்தத்தோத்திரஞ்செய்ததத்தனேயே. (கஅ)

ஆனபோதுநாராயணன்றன்னேயுமவனென்
றேநவின்றிடவேண்டியுமிருக்குமேயென்னில்
மேனிகழ்ந்துடனேபரமாக்கரவியன்சொல்
தானிருக்கையினலதுநாரணன்றனே. (கசு)

ஈதலாதுநாரணன்றனேவிச்சுவமென்றும
தீதில்வேள்வியென்றுஞ்சொன்னவேதங்கள்சிவனேக்
கோதில்வேள்வியின்பதியென்றுநகூறும்விசுவத்தின்
நாதனென்றுமநகவனேயேபரத்துவநாட்டும. (உ0)

சீதரன்றனேத்திகழ்வயிட்டிணவதந்திரத்தில்
ஏதமாகியபகுதியென்றிருக்கையினலே
ஓதுவேதஙகணிமித்தகாரணனென்றவொருவன்
மாதுபாகனேயென்பதுநிச்சயவழக்கே. (உக)

அச்சுதப்பெயரானேயுஞ்சிறந்தவாரணங்கள
விசசுவப்பதியென்னவும்வேள்விகட்கெல்லாம
நிச்சயித்திடுமதிபதியென்னவுநிகழ்த்தி
உச்சரித்தசொல்லோர்ந்திடும்பொழுதுபசாரம். (உஉ)

தகைமையாலுயர்சங்கரமூர்த்தியைத்தானும்
மகிமைவேதங்கள்விசுவமென்றிடும்வாய்மை
அகிலலோககாரணனவனுகையினலே
புகலுகின்றதத்தனேயிதுபுதுமையொன்றன்றே. (உங)

கன்னிபாகனதுபாசனேபகர்ந்தசாகைக்குப்
பன்னுநாரணேபநிடமென்றேபெயர்பலித்த
தென்னினாரணவிருடிமுன்காண்கையாலன்றி
அன்னவன்றனேப்பரதத்துவநாட்டியதன்றே. (உச)

திருந்தவஞ்செழுத்திருத்தலாற்சதவுருத்திரியம்
பொருந்துமேன்மையாலவிளங்கியதன்மையேபோல
பிருகதைமானுமபஞ்சப்பிரமமும்பொருந்திடலால
விரிந்தநாரணோபநிடமுமவிளங்கியதன்றே. (௨௫)

விரித்தவிந்தநாராயணோபநிடத்தில்வேதா
உருத்திரன்வயிறபிறந்தமையோதுகையாலே
திருத்தமாவதத்திகிரிசங்கந்தமைசசெங்கை
தரித்தமாலிடைப்பிறந்தனனெனறிடத்தகாதே. (௨௬)

பெயர்ந்துபோயதோகறபமேதத்தினிறபிரமன்
புயங்கசாயிதேகத்திடைவாக்கிறைபுகுந்து
மயங்கியேபுறப்படவழிகாணகிலாமையினல்
வியந்துமானமலாநாபியாறபுறப்பட்டுவிட்டான் (௨௭)

ஆதலாலயன்கமலசமபவப்பெயாக்கமைந்தான்
போதில்வாழபவனுக்கதின்மாயனுமபுகுந்து
வாதுவென்றதோாபிலத்துவாரத்தில்வந்ததனல்
தீதிலாவதோக்கசனெனுமபெயரினுறசிறந்தான (௨௮)

தகுதியாமவரிருவருஞசரீரங்கண்மாறிப
புகுதியுமபுறப்பாடுமேயல்லதுபுணாபபால்
நிகழொருத்தருக்கொருத்தாசென்மித்தவரலலால
பகருருத்திரனிடத்திருவோருமுறபவித்தார. (௨௯)

ஈதெலாஞசிவாகமத்தினில்விளமபியதிவவா
றோதுசொறகிசைந்திடவரனுபயவுருவினும
வேதனுந்திறல்விண்டுவுமபிறந்ததுவிரித்து
போதமேறகொளவியமபியதிலிங்கமாபுராணம. (௩௰)

நிறைந்தலோகமுநிறபவுந்திரிவவுமெல்லாம
இறந்தகாலமுமிறந்திடாவிந்துவேணியனைச
சிறந்ததாமறைத்தவிசிடைத்திசைமுகனிடத்தில
பிறந்ததாகவுமபிதற்றுவாரறிகிலாபபேயகள. (௩௧)

திருந்துநெஞசமுங்கண்டமும்பிரமரந்திரமும
பொருந்துநாவுநன்புருவநனனெறியுமெபபொழுதும
இருந்தயோகியாக்கீறிலாவீசசுரன்றேறறம
தருந்தியானமாந்தலமெனயோகநூல்சாறறும. (௩௨)

ஆகையாலயன்புருவநன்னெறியிலவ்வமலன்
யோகசாத்திரமுறைமையாறமுரைன்றியதுளதே
பாகுசேர்மொழியாய்பலசொல்லியும்பயனென்
ஓகைகூரரிக்குமாபதியுபாசியனென்றாள். (௩௩)

உ-வது, சிவவுபாசனைமறுப்புப்பரிச்சேதம்.

அங்கயற்கணுகமமயிலுரைத்தவம்மொழியைக்
குங்குமத்தனவாரணக்கொடிமனங்கொள்ளாக்
கங்கணங்களுங்கலின்கலின்கலினெனக்கறங்கப்
பங்கயக்கைகொட்டிசசிரித்திவையிவைபகர்வாள். (க)

படைத்தகாணியாய்த்தலைமகளுளுமோர்பதியைக்
கடைத்தொழிற்சிலாசுதந்தரஞ்சொலுங்கதையதுபோல்
அடுத்தமால்பரமானநாரணவுபசிடத்தைப்
பிடித்துநீயிங்ஙனென்பிணங்கினைச்சிவபிராங்தே. (உ)

தேன்றருநகுழற்சேயிழையேயிதுநிற்ப
ஏன்றுகொண்டிநீயிந்துசேகரனுபாசனையை
ஆன்றசெஞ்சொனாராயணவுபசிடத்தாலே
தோன்றவுத்தரிக்கின்றனெனென்றுமுன்சொல்லி. (௩)

உன்றனுத்தியின்கற்பிதமாய்ச்சிலவுரைத்தும்
என்றும்வேதவிருத்தமென்றிகழ்ந்தசொற்களிலே
பின்றையுஞ்சிலகூட்டியும்பேரறிவாளா
அன்றிநின்றவராகிலுமதிப்பரொன்பதற்காய். (௪)

இனையசொற்சிலசொல்லினையுங்கிதுநிற்பப்
பனிமலாக்குழலாயுயாநாரணேபசிடம்
புனிதநாரணனுபாசனைபுகன்றதென்பதற்கும்
அனகனுகுமநாரணன்றன்னையர்ச்சித்து. (௫)

முன்புசங்கரன்மகத்துவம்பெற்றுளமுறைக்கும்
அன்பனுமயன்சிவன்முதலாயினோர்கெல்லாம்
துன்பமற்றமாவிடத்திலேதோற்றமோடொடுக்கம்
என்பதற்கியானியம்புவல்கேள்பிரமாணம். (௬)

தனையில்யாதொருசத்தமும்பொருள்கொளுமிடத்துப்
பெரிதுபக்கிரமோபசங்காரமப்பியாசம்
மருவபூருவம்பலம்புகழென்றறுவகையாய்
விரிகியாயசிச்சயத்தினுற்பொருள்கொளல்வேண்டும். (௭)

அடைவுசேரநுவாகங்களறுபத்துநான்கும்
உடையதானநாராயணவுபநிடந்தன்னை
இடையின்மூன்றநுவாகமாத்திரமெடுத்திசைந்த
படிபொருட்கொளினுலகசம்மதமெனப்படுமோ. (அ)

உரைத்தநாரணவுபநிடத்துபக்கிரமத்தும்
நிரைத்தமுன்னநுவாகத்துநீள்கடற்றுயில்வும்
பெருத்தகாரணதத்துவமுந்தனிற்பெரியோர்
ஒருத்தரின்மையும்படைத்தவனொருத்தனையுரைத்து. (கூ)

வாய்த்தவாகமவல்லியேமற்றவன்றனையே
ஏததுமுத்தியைத்தருபவனென்னவுமுரைத்துப்
பூததநாபிநாராயணன்றன்னையப்புருட
சூததிரஞ்சொன்னவண்ணத்தினாற்சிலசொல்லி. (ய)

வைத்தவிம்முதலாமநுவாகத்தினாலே
இத்துடன்கலந்தோதுகவெனச்சொலியிருந்த
உத்தரத்துநாராயணவுயரநுவாகத்
தத்தினிற்றிசைமுகனுறையுதரனென்றதற்பின். (கக)

கோலமாமலராசனத்துறையிலக்குமியும்
சேலையாகவேழ்கடலையுமுடுத்தமேதினியும்
ஏலுமிங்கிவரிரவொடுபகலவளிரண்டு
பாலும்வாழ்ந்திடுபத்தினிமாரெனப்பகர்ந்து. (கஉ)

ஆரெனத்திகைத்திவன்றனையயிர்த்திடாவண்ணம்
சாருமத்திமமாமநுவாகங்கடமிலே
நாரணப்பெயர்பதந்தொறும்பதந்தொறுநாட்டி
நேரிலாப்பரதத்துவனென்றுநிச்சயித்து. (கங)

அந்தமாமனுவாகமெய்வாய்மையினாலும்
முந்துநாரணன்றன்னையேசொலிமுடித்திடலால்
பந்திசேரளகப்பொனேநாரணேபநிடம்
இந்துமோலியனுபாசனைசொல்லியதிலையே. (கச)

முழுச்சமத்தமையார்முதற்சாலுழாமுன்னம்
தழைத்தசெய்யின்மூன்றாகியசாலுமூவார்போல்
இழைத்தவாதியுமந்தமுங்கிடக்கநீயிடையே
சுழித்தெடுத்தமூவகையநுவாகமுந்தொகையும். (கரு)

உங்கள்சந்திரசேகரனுருபாசனையைத்
துங்கவாகமவல்லியேசொல்லியதிலலை
பொங்குமந்தமூவகையநுவாகமெய்ப்பொருளைச
சங்கைதீர்த்திடவிளம்புவனியதுதனைக்கேள். (௧௮)

௩-வது, உபாசியநிருணயப்பரிச்சேதம்.

அந்தமூன்றினிலாதியதாமநுவாகத்
துந்துமேதையாலுபாசியனென்னநீயுரைத்த
முந்துசீர்புனைமகேச்சுரனென்கின்றமூர்த்தி
இந்துசேகரனன்றஃதெங்ஙனேயென்னில். (௧)

அவ்விடத்தினிறபிரணவத்தாதியாயமாந்த
திவ்வியாக்கரமானதோரகாரவாச்சியனைக
கவ்வைதீர்ந்திடமகேச்சுரனென்றகட்டுரையால்
மவ்வலோதியாயகாரவாசசியன்றிருமாலே. (௨)

மறறதெப்படியென்னின்வேதங்களுமகிமை
உற்றசாததிரபுராணமுமிருதியுள்ளவையும்
பறறிலாதநாராயணமூாத்தியாம்பரனை
வெற்றிவேற்கணுயகாரவாச்சியனெனவிளம்பும். (௩)

சக்கரந்தவிர்ந்தக்கரந்துளுவுகோறனைக்கொண்
டுககிரப்பரிதேதோகடாவியமுகிலொருவன்
அக்கரங்களிலகாரநானென்றருச்சுனற்கு
மிக்குரைத்தனன்பாரதகீதையில்விளங்க. (௪)

திருத்தமாகியசங்கமுந்நிகிரியுங்கரத்தில்
தரிததமாயனையகாரவாச்சியனென்றதன்மை
வரைத்தடஞ்சிலையாற்புரமெரித்தவன்வாக்கால்
உரைததராமசகததிரநாமத்துமுளதே. (௫)

அன்னதன்றியேபிரணவவாச்சியனுவான்
சொன்னவம்மகேச்சுரனெனத்துணிந்திடுமிடத்தும்
தன்னைநேரிலாப்பிரணவவாச்சியத்தாலும்
என்னையாளுநாரணனிதற்கையமொன்றிலையே. (௬)

இங்கிதற்குரைத்திடும்பிரமாணங்களினிகேளா
செங்கயற்கணுகமமினேயதருவசிரத்தில்
பொங்குசீர்புனைபிரணவமபூருவமாகத
துங்கமானவட்டாக்கரதொகுதியுஞ்சொல்லி. (௭)

பேசுகின்றவப்பிரணவவாசியனை
தேசுகூருமநாரணன்றனையுயாசிபபா
ஆசிலாதவைகுநதநாடடைகுவொன்று
தூசுசேரிடையாயடையாளமாயசொலலும். (அ)

சனணமாரணநதவிாநதிடமிராமசசநதிரனை
இனிமையாகியபிரணவவாசியனென்று
தனைநிகர்பபதொன்றினறியதாரகப்பிரமோ
பநிடமோதியவாசகமுலகெலாமபாடம. (கூ)

விரிசுபாலமர்முபநிடததாலுமவிணடுவையே
பிரணவததிறைசொலப்படுமபொருளெனபபேசும
இருமையானவிமமறைகளசொல்லியமொழிககிப்பால்
பரவுசொறபலபுராணமுமபகாநதிடுமபடிகேள. (ய)

சிதரன்றனைபபிரணவசெழும்பொருளென்றும
ஓதுமாததுமமெனறுமவவிரணியறகுகிததோ
மேதையாலுணாததுசொலுமவிணடுவின்புராணத
காதியஞசககதெணணிரணடாயவததியாயம. (கக)

எஞசலின்றியவிபபுராணததினிலிரணடாம
அஞசகததிருநாலதாமததியாயததில்
வஞசிசூரியமண்டலமததிமததுறைவான்
விஞசுமேனமைநாராயணனென்பதுவிளமபி (க௨)

அநதநாரணனபிரணவபபொருளெனுமடைவும
சிநதையாவருநதெளிவுறபபிரமமாயசசெபபும
இநதமடடுமன்றிதறகுமேலானவஞசகததில
வநதமூன்றதாமததியாயததுவாயமையிலே. (கங)

மறைபிறிததவாறெபபடியெனமயிததிரேயா
அறிவுடைபபராசராதமைககேடபமறறவரும
முறைமுறைபபடிவியாதபட்டததுமுன்னிருநதோா
எறிகடறறலததிருபதோடெண் மருண்டென்று. (கச)

இவவியாதாபின்வியாதபடடநதனககிருபபாா
தவவலினறியேவசுவததாமனொன்றும்
அவ்வவவேதியாதுவாபராநதமதொறுமடைவே
இவவியபபுகழமறைததுறைசெயவாகளெனறும. (கரு)

இருநிலத்தினின்மறையெலாமிறந்தகாலத்தில்
பிரணவத்துமட்டேநிலைபெற்றிடுமென்றும
அருமையுறுமவப்பிரணவவக்கரந்தானே
பரவுலோகவுற்பத்தியதாம்பொருளென்றும. (கசு)

இத்திறம்பெறும்பிரணவப்பொருளதாயிருப்பான்
நித்தனுகியநாரணனென்னநிச்சயித்துப்
புத்திபண்ணுதிநீயெனவிவையெலாம்புகன்ருர்
சித்தமப்படியேமயித்திரேயருந்தெளிந்தார். (கஎ)

பன்னுபாரதகீதையிற்பிரணவப்பயனை
என்னைநீநினையென்றுபார்த்தனுக்கரியிசைத்தான்
கன்னிபாகனுமபிரணவப்பொருள்கண்ணனென்று
சொன்னசொறபிரமாண்டமாமபுராணமுஞ்சொல்லும். (கஅ)

எட்டெழுத்திலொன்ருகியபிரணவவெழுத்தின்
திட்டமெயபபொருளரியெனசசுகமுனிதெளிந்து
பட்டபத்திரனுமபரிக்ஷித்துபூபதிக்குக்
கட்டுரைத்தமைவிளம்பிடுநீடுபாகவதம். (ககூ)

மாசிலாதசீரபிரணவமாதியாயவைத்துப
பேசிடுந்துவாதசாக்கரப்பிரமவித்தையினும
தேசமேவிதுசகலருநதெளிந்திடச்செப்பும்
வீசுபாரதகதையுடனவிண்டுவின்புராணம. (உ0)

கண்ணுதற்சிவன்முனிவாக்குக்கண்ணனைககாட்டி
எண்ணுசீரப்பிரணவப்பொருளாகியவிவனை
நண்ணிமுத்தியைசசேருதிரொன்றமைநாட்டும்
மண்ணின்மேனிகழபாரதாந்தத்தரிவஙகிசம. (உக)

மூநதுசீரப்பிரணவப்பொருளரியெனமொழிந்தான்
இநதிரப்பெயரவனெனவெளிபெறவியமபும
அநதமானவைமபத்தொன்றுமத்தியாயததுப்
புநதிகூரியோரபுகழந்திடும்பதுமமாம்புராணம. (உஉ)

வண்டுழாயணியுஞ்சுடாமவுலிமாதவனே
எண்டகுமபிரணவததினிறபெறுபொருளென்று
புண்டரீகாநாரதரிவாபுகன்றவாதரததில்
கண்டுகொளளுமாறுணாசெயுமபாரதகாதை. (உங)

இளஙகலாபமாமயிலஞையிஙகிதறகெல்லாம
துளஙகுசீாபுனைபுவனதிடடாநதமுநதோன்ற
வளஙகுலாவுநீடணியாஙகததுமாயனுககு
விளஙகுகின்றதுபிரணவாகாரமாமவிமானம. (௨௪)

பிரணவபபொருளரியெனும்பெருமைநீயறிய
ஒருதொடைபபடசிலபிரமாணநானுரைததேன்
சுரிகருஙகுழறறேகையேவம்மகேசசுரனும்
தருணவெணபிறைசூடியன்றசசுதன்றனே. (௨௫)

அசசுதபபெயராலுயரறபுதன்றனையே
வைசசீாபுனைமகேசசுரனென்னுநாமததால்
உசசரிததெடுததோதிநீடுலகசமமதமாய
நிசசயிததுகாப்பமாகியவுபநிடமே. (௨௬)

வாயததசீாடபதுமநதனில்வாசுதேவனைமுன்
கோததிரஞசெபுஞ்சகததிரபபோததொகுதியினும
கீாததியைமமூகனிரணியகொப்பசஙகிதையில்
எததியோதியவிராமநாமஙகளாயிரததும. (௨௭)

தாமவேல்விறலவீடுமாபாரதநதனிலே
சேமமாகவேயோதுநாமசசகததிரததும்
வாமமேகலையல்குலாயமகேசசுரனென்றும
நாமதேயநாராயணன்தன்னதாயநவிலும. (௨௮)

சுடர்குலாவுசீாநேமிமாலேமகேச்சுரனென்
றிடியுலாஙகொடியிந்திரன்றுதிததவாறியமபும்
படியுளோரெலாமபுகழநதிடுபதுமமாபுராணத
தடைவதாணவைமபததொனறுமததியாயததில். (௨௯)

தகுமகேசசுரநாமதேயததினைத்தானி
டகிலமீதறியாாகளஞ்ஞானியரோனும்
திகிரிமாதவன்றனஞ்சயறகோருபதேசம்
பகருநீடிதிகாசமாமபாரதகீதை. (௩௰)

அலஙகலோதியாயமறறுமக்கீதையிலஞ்சாம
புலன்குவிந்துளயோகநூல்புகன்றிடுமிடததில்
துலஙகுசஙகுசககரததையாயுதமகேசசுரனை
இலஙகுநுண்ணறிவாறறியானிக்கவென்றிருககும. (௩௧)

ஏற்றுவாகனன்வாணனுக்காகவந்தெதிர்ந்து
தோற்றநாண்முகுந்தனைமகேச்சுரனென்றுதுதித்த
மாற்றமைம்பதோடஞ்சதாயவழங்குமத்தியாயத்
தூற்றமாய்ச்சொலும்பதுமநீடுத்தரகாண்டம். (௩௨)

சொற்றமுக்கணன்பசுபதியாம்வரஞ்சுராபால்
பெற்றதன்மையையுணர்த்திடும்பெருமறைக்கேற்ப
மற்றவன்றனக்குயர்மகேச்சுரனெனும்வரமும்
உற்றபட்டமுங்கட்டினரும்பரென்பதனை. (௩௩)

கருதுசீர்புனைபாரதகன்னபாவதத்தில்
திரிபுரப்பிரசங்கத்தில்வெளிபெறச்செகமேல்
உரைசெயாநின்றதாதலாலுயருமாபதிக்குச்
சரியிலாமகேசசுரப்பெயர்வரபலந்தானே. (௩௪)

முன்னுசீர்மகேச்சுரசசொற்குமுகங்கியப்பொருளாய்
மன்னிநின்றவன்வண்டுழாயமாலைமாதவனே
அன்னதன்றிமுக்கண்ணனேயென்றறைந்தனையேல்
துன்னுமிவ்விடத்தினிலுரைத்துளமகேசசுரனே. (௩௫)

உலககாரணனென்னவுமுத்தியையுதவும
தலைவனென்னவுமுணர்ததலாலனையவாந்தன்மை
சுலபமாயப்பிறைசூடியவம்மகேசசுரனுக்
கிலகுமாமறைபுகன்றிடாதினையதுமன்றி. (௩௬)

தங்குமுங்களதானவாகமத்திலேதானே
துங்கமாஞசதாசிவனிடத்தம்மகேச்சுரறகுப்
பொங்குதோற்றமுமொடுக்கமும்புகன்றிடுகையினல்
அங்கவன்றனக்குலககாரணத்துவமடாதே. (௩௭)

உலககாரணன்செங்கண்மாலேயெனுமுண்மை
பலபடச்சதுமறையினன்மேற்பகர்கின்றேன்
புலமைகூரவிப்பொழுதுநற்புராணவாசகத்தால்
நிலைமையாகவேவிரிததுரைககுவெனதுநீகேள. (௩௮)

கசேந்திரவுபாசனைப்பரிச்சேதம்.

தங்குபங்கயமலர்ந்ததோர்தண்புனற்றடத்தில்
பொங்குமும்மதக்கிம்புரிக்களிறொன்றுபுகுந்து
செங்கண்வெள்ளெயிற்றிடங்கர்வாய்ப்பட்டுளந்திகைத்துற்
றிங்கினிக்களையேறுவதரிதெனவெண்ணி. (௧)

அகிலகாரணனாகியவொருத்தனுக்கபயம
சகலசிவதயாபரவத்துவுக்கபயம்
நிகரிலோகவியாமகசித்தனுக்கபயம
பகரும்வேதபாராயணநாதனுக்கபயம். (உ)

ஆதியந்தமிலாதபரஞ்சுடர்க்கபயம்
கோதின்முத்தியைக்கொடுத்திடுந்தேவனுக்கபயம்
மூதுசத்துமசத்துமிலாமுதற்கபயம்
ஓதுபல்லுயிருக்குயிராமொளிக்கபயம. (௩)

சென்மநாமமுமுருவமுஞ்செறிகுணங்குற்றம்
கன்மமென்பதிலாதவொருத்தனுக்கபயம
தன்மயஞ்செயதுபாவனலீலையாற்றானே
பன்மையாமுலகம்படைப்பான்றனக்கபயம். (௪)

புருடனென்றிடப்புலப்படுந்தேவனுக்கபயம
அருவமாயுருவாயமாவான்றனக்கபயம
பரமவாத்துமனாய்ப்பரனாய்ப்பகவானாய்
விரிபரப்பிரமபெயர்விமலனுக்கபயம. (ரு)

பெண்ணொடாணலியென்னவும்பிறிக்கரிதாகி
எண்ணருமபகுதித்தொடர்பொன்பதிலாதாய
உண்ணிறைந்துபுறம்புநிறைந்துலகெல்லாம
நண்ணுகின்றவியாபகனும்பொருட்கபயம. (௬)

பிறப்பிறப்பிலியானபெருந்தகையாகிக்
குறிப்புறந்தனதிச்சையிலாகியகொள்கைத்
திறத்துவிக்கிரகங்களடைந்துமேதினிமேல்
அறத்தினைத்திரமாக்குமகண்டனுக்கபயம். (௭)

ஓதுகாரணமொன்றுந்தனக்கிலனாகி
மேதற்கொத்தவாமிக்கவரின்றியேதானே
காதல்கூருலகுக்கொருகாரணனா
ஆதிமூலபராபரவத்துவுக்கபயம, (அ)

என்றுகொண்டுபொதுப்படவின்னனபடியே
நின்றுதன்றுதிக்கையினைவானுறநீட்டி
மின்றிருந்தியமேகமுழங்குவபோல
மொன்றியொன்றியினைத்துமுறைப்படுகாலை. (௯)

ஆனையமாகரிசொல்லியசொற்களனைததும்
வனசனைம்முகனுதியாகேட்டுமதிப்பால்
இனையசொற்பொருளியாமலயாமலவென்று
வினவிவநதுபகாரம்விளைப்பதுவிட்டார். (௰)

ஈதுகாலையிலெநுகுநிறைந்தருளீசன்
வேதரூபவிகங்ககுலாதிபன்மேலே
ஆதரமபெறவம்பரவீதியிற்றேன்றிச
சோதியாழியிடங்கரறும்படிதொட்டு. (கக)

தந்திமுததிபெறும்படிதண்ணளிசெய்தான்
அந்தவேலையினநதரதுந்துமியாப்ப
வநதுநான்முகனைம்முகனேமுதல்வானோ
சிநதினாமலாமாமழைதோத்திரஞ்செயதார். (க௨)

இத்திறக்கதைபாகவதத்திருநாலாய
வைததகந்தமிரண்டொடுநாலளவுஞ்சேர்
அத்தியாயமுறைததிடுமவ்வளவேயோ
உததிகூடாபிரமாண்டமுமியாவையுமோதும். (கங)

பலவுபாசனைப்பரிசசேதம.

ஆதலாலுலகுகவொருகாரணனுவான்
தாதுசோமலருந்தியில்வேதனைத்தந்த
தீதிலாநெடுமாயவனென்பதுதேனே
ஓதினேனதுமேலுமுணாந்திடுகென்றுள. (க)

ஈதுநிறபநாரணனைவேதஙகளிச்சகத்துக்
காதிகாரணனென்னவுமுததியையளிக்குப
நாதனென்னவும்பறபலவிடத்திலுநாட்டி
நீதியாகவேநிசசயித்துரைக்கையினலும். (௨)

பெயர்த்துமிங்கிதிறபேரடையாளமதாக
இயறகையாகியவகாரவாச்சியனெனலாலும
உயரச்சியாமகேச்சுரனையேயோதுமாதியிலே
இயக்கநீாககடற்பள்ளிகொள்பவனெனலாலும். (ங)

கோதைபாகனுக்கெறிகடற்றுயில்வதுகூறு
தாதலாலுமிங்குரைத்திடுமகேச்சுரனுவான்
சீதநாண்மலர்த்திருவளர்மாாபனென்பதற்குத
தாதுசேர்குழற்றையலேசந்தயமிலையே. (௪)

கயலைநேர்விழிக்கன்னியேகருடவாகனனே
உயர்மகேசசுரனென்பதிங்குள்ளவாறுரைத்தேன்
இயலுமந்தமூன்றுமநுவாகத்தினிடத்தில்
பயிலுமவ்விருபாக்கனுமிலக்குமிபதியே. (௫)

பன்னுமற்றதெப்படியெனிலவ்விருபாக்கன்
என்னநின்றசொல்விவிதலோசனனையுமித்தால்
மன்னுகின்றபுள்வாகனன்றன்னையுமதிப்பால்
துன்னுரூபமிந்திரியமில்லானையுஞ்சொல்லும். (௬)

ஆதலாலரியாயிரநயனனென்பதனை
ஓதுசீர்புனைபுருடசூக்தத்தினிலுரைக்கும்
கோதையேயிவன்பறவைவாகனனெனுங்கொள்கை
மேதினிக்குளியாவர்க்குநாம்பேசவேண்டாவே. (௭)

பந்தமாகியபகுதியாற்பற்றிலாப்பரமன்
இந்தியங்களுமுருவமுமிலாதவனென்றும்
கொந்துலாவுதாரோதியாகமவிளங்கொடியே
சந்தமாகியவேதவேதாந்தமுச்சரிக்கும். (௮)

சீராகியபாரதத்தாலுந்திகழ்மந்திரசாத்திரத்தாலும். (கூ)

இத்தாரணியோர்க்கிருகண்ணுமியல்பாகியசூரியசித்தாந்
தத்தாலுஞ்சம்மதமாகத்தனையோரறியும்படிச்சொன்னேன்
மெத்தாதவன்றன்மண்டலத்தில்விளங்குந்தேவன்சிவனென்ன
முத்தார்நகையாய்நீசொன்னமொழிதான்சத்தலச்சலமென்றாள். (ய)

ச-வது, சர்வரட்சகவத்துநிருணயப்படல முற்றும்.

ஆ திருவிருத்தம். சுசு.

அரிதாசர்திருவடிகளேசரணம்.

ரு-வது, சகலவேள்விப்பதிநிருணயப்படலம்.

க-வது, வேதவிபரீதார்த்தவேள்விப்பரிச்சேதம்.

இதுநன்சுருதியயில்சொல்லவியலாகமமானெடுத்துரைப்பாள்
முதிருங்காயத்திரிதன்னின்முக்கட்சிவமூர்த்தியைமொழியும்
அதுவுஞ்சத்தச்சலமாகியவனும்பரனேயல்லாக்கால்
விதியின்கிரமம்பெறுஞ்சகலவேள்விப்பதியாரோவென்றாள். (க)

மானேர்விழியாகமமயிலிவ்வசனங்கூறமறைமாதும் [போல்
தானேபொருடோற்பினுஞ்சூதைத்தவிராப்பேதைத்தன்மையைப்
தேனேயெல்லாமொழிந்திதனைச்செயமென்றெண்ணிசெப்புகின்றாய்
ஆனாலுன்றன்மனந்தெளிய வதுவுஞ்சொல்லியறிதியென்றாள். (உ)

மிதமம்மொழிக்காகமமானுமின்னேயொரடிகுறைந்தாலும்
அகலுந்துரவுகடப்பார்களரும்பாதாளத்தமிழுவரால்
தொகைபெற்றிடுமதபஞ்சகததோர் துறைகருக்தரநீதோற்றாலும்
சகலபொருளுந்தோற்றாய்நீதானென்றேதத்தலைப்பட்டாள். (ங)

அவியின்பொருளாம்பசுகளுக்குமடைவாகியசோமத்துகதும்
கெவியுங்களுக்குங்குறிப்பாவான்கிருத்திவாசனேயென்றும்
நவையொன்றில்லாப்பசுபந்தநடத்துந்தோறுநயனநுதல்
சிவனைப்போற்றியனுமததாற் செய்யவேண்டுஞ்செகத்கென்றும் (ச)

விசையாகியவெவ்விடைக்கொடியான்வேள் விவளர்த்ததனில்வந்த
பசுவானதெலாமெனதென்றுபகர்ந்தானென்றும்பயனை
எசுருவேதத்தினிற்சொல்லுமிந்தவேதத்தினிலெழில்சோ
சசிபோன்முகத்தாரணமானேதனக்கொப்பில்லாச்சமகத்தில் (ரு)

வைப்பாகியவிப்புவனத்துவத்துவெல்லாமெனதென்றே
அப்பானிறையஞ்செஞ்சடையானபிமானித்தபடியாலும்
ஒப்பான்மானேர்தடங்கண்ணாயோங்குமெசுவேதந்தன்னில்
தப்பாமொழிசோமுதற்காண்டந்தன்னிலெட்டாம்பருச்சத்தில். (சு)

வருக்கமானபசுக்களைமந்திரத்தால்வழங்குமவ்விடத்தில்
இருக்குந்தேவனுருத்திரனேயிரண்டாவான்மற்றிலையென்னாப்
பரத்துவத்தைச்சொலலாலும்பங்கிற்பாவையொடுங்கூட
அருத்திகூரநுகாந்தருளென்றுகுப்பசுவீந்திடலாலும். (எ)

அனையவாகுவெனுஞ்சொல்பாரகழுமதனைப்பகர்ந்திடலால்
கனமதானபன்றியும்பார்கல்லவலதாகையினாலும்

வினையும்வராகவவதாரநெடுமாற்குண்டாகையினலப்
பனகசயனன்சங்கரற்குப்பசுவாய்வேண்டுகையினலும். (அ)

ஆகுவெனும்பேர்முடிகத்துக்கமைந்தேயிருக்கவதுவன்றித்
தோகையனையாய்மாலென்றேசுற்றித் தொடர்ந்துபொருள்கொள்ளும்
ஊகமேதுக்கெனவுணாக்கினெங்குபுருடசூத்திரத்தில்
யாகத்தாலேயாகத்தையெசித்தார்தேவரொனுமிடத்தில். (௯)

பேசும்புருடன்றனைப்பசுவாய்ப்பிணித்தாரொன்றபடியாலும்
மாசொன்றில்லாப்புருடச்சொன்மாலைச்சொல்லும்வழக்காலும்
தேசம்புகழ்மால்பசுவாகைதிண்ணமானததுவாலே
ஏசிலாகுதனையுமவனென்னத்தகுமாகையினலும். (௰)

பரமபுருடனுமாயன்பசுவானமையாற்பசுபதியாம்
அரனேவேள்வியின்சொருபமாகவேண்டுகையினலும்
துரமாஞ்சிவனாராதனையைச்சொல்லும்புருடசூத்திரமந்
திரமாமறையும்பசுபதிமந்திரமாய்வேண்டுகையினலும். (௧௧)

ஏமப்பரிதிதழல்வளிபாரிந்துநெடியமாலெல்லாம்
சோமப்பெயராலாகின்றதென்றேயிருக்கிற்சொல்லுகையால்
தாமக்குழ்லாயச்சோமசத்தமுமைபங்கனையல்லால்
ஓமச்சோமமறைதன்னையுணாத்ததல்லாமையினலும். (௧௨)

தரணிபோற்றுமெசுவேதந்தன்னில்வேள்வித்தலையையுருத்
திரன்முன்பறுத்துநிலத்திட்டான் சிலையாலென்றுசெப்புகையால்
விரவுமந்தச்செழுஞ்சிரந்தான்மிக்கவேள்விச்சதத்துக்
கருகமானமால்சிரமேயாகவேண்டுகையினலும். (௧௩)

முருக்கினிதழாயெசுவேதமுதற்காண்டத்தின்மூன்றுகும்
பருச்சந்தன்னிலந்தமதாய்ப்பகருமநுவாகந்தன்னில்
கருக்கொண்டுலவுமழைமேகக்கணங்கடவழுங்கயிலாயத்
திருக்குஞ்சிவனேவேள்விதனக்கிறைவனென்றவியல்பாலும். (௧௪)

திருவின்மார்பன்றனைப்பார்த்தன்செய்தபூசைசிவன்றனக்கே
அருகமானதெனப்புவிமேலஞ்சாம்வேதமோதுகையால்
விரவுதேவர்சகலருக்கும்வேட்குமவிபின்கூறெல்லாம்
பிரசவேணியனுக்கேயற்பிதமாமெனாகையினலும். (௧௫)

சாமவேதந்தனிற்பிரபதப்பேர்மாமந்திரத்தினிடை
ஏமமேருவில்லியையந்தணனென்றியம்பியிடலாலும்

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

தாமமேவுங்கருங்குழற்பைந்தொடியேயிந்தச்சொற்கேற்கப்
பூமிபோற்றும்பிரமாண்டபுராணங்கந்தபுராணத்தும் (கசு)

மாலையரசர்மரபென்றுமலரோன்வணிகர்குலமென்றும்
சீலமுடையபுரந்தரனைத்திரமாகியசூத்திரனென்றும்
சாலுமிமையோர்தங்களைச்சங்கரசாதியென்றுஞ்சாற்றி
ஆலமிடற்றுப்பெருமானையந்தணனென்னலாலும். (கஎ)

உயருங்குலமாமறையோனுக்குவணக்கொடியோனும்பர்பிரான்
அயனென்றுரைக்குந்தாழ்குலத்தோராராதிக்கவருகமதாய்ச
செயலின்முறைமையதனுனுஞ்சிவன்றன்குலத்தின்பெருமையினால்
கயிலைக்கிரிவாழுமையாள்பங்கனுபாசியனுகையினானும். (கஅ)

பன்னுமவர்கடமக்குள்ளபாவந்தீர்க்குமெசுவேதம்
தன்னிலுஞ்சீராலுயர்ந்தசதருத்திரியமந்திரத்தும்
கன்னியொருபங்கினில்வாழக்கயிலைக்கிரிமேல்வாழ்வானை
உன்னிலொருவருயர்ந்தவரிவ்வுலகத்துண்டோவென்றுரைதது. (கக)

உரைத்தவிந்தமொழிக்கெல்லாமுலகத்திட்டாந்தமுமாகப்
பரித்தகுலப்படைப்பூதபதிக்கேமுதற்சம்பாவனையும்
திருத்தமானமுதல்விழவுந்திரமாய்நடக்கும்படியாலும்
பெருத்தவேள்விக்குரியபரப்பிரமஞ்சிவன்றனேயென்றாள். (உ0)

உ-வது, வைதிகவேள்விப்பரிச்சேதம்.

மன்றலணிதாராகமமாமடந்தையிவைதாம்வகுத்துரைப்ப
வென்றிவிழிவேலாரணமாமடந்தைமிகவுநகைத்தனளாய்
நன்றுமொழிந்தாய்நின்போலநல்லோரில்லையானிதனுக்
கொன்றுமொழியாதுத்தரிக்குமுறைகேளெனவோதுவதானாள். (க)

மானேசிவனைவேள்வியெனமறைகள்சொல்லாதிருக்கவுநீ
தானேயொன்றைமிகவிபரீதார்த்தமாக்கப்புகல்கின்றாய்
பூநாரிரண்டுமில்லாமற்புனைநன்மாலைதொடுக்குகைக்குத்
தானேவல்லாய்வெகுமிசக்கையென்றுசொல்லத்தலைப்பட்டாள். (உ)

திதமின்றியமோகனநூலைச்செயமென்றுரைத்தபின்னனையாய்
பதுமாசனஞ்சங்கரன்முதலோர் பரமபுருடோத்தமன்றன்னை
விதமன்னியவேள்விகளாலேமிகவேயாராதனைசெய்து
முதுதம்பதங்களபெற்றமைக்குமுழுதுத்தரகாண்மொழியக்கேள். (ங)

தொக்கபசுக்கள்கல்வியங்கள்சோமம்பு ரொடாசங்களெல்லாம
மிக்கதேவர்சகலருக்கும்வேறுவேறுகுதிவேட்பத்
தக்கவேதம்விதிக்கையினுஞ்சாற்றும்பசுச்சோமாதிகட்குத்
திக்கம்பரந்தானொருவனுமேதேனையுத்தேசிகனுமோ. (௪)

அடுத்தபசுபந்தஞ்செய்யுமவிடத்தரனையனுமதிகொண்
டெடுத்தவேள்விமுடிக்கின்றாரிவனேபரனென்றெண்ணுதியேல்
தொடுத்தபுவிமேற்பசுபதியாய்ச்சுரராலந்தச்சூலிவரம்
படைத்தபடியாலனுமதந்தான்பண்ணிக்கொள்வாரத்தனையே. (௫)

தாவுவிடையான்றனைவேதந்தழைக்கவேள்விவத்துவுக்குக்
காவலாளியென்னவுரைக்கையினுற்றனதுகாவற்குள்
மேவுகின்றபசுக்கடமைவினியோகஞ்செய்திடுமளவும்
பூவைநல்லாயெனதென்றுபுகல்கைக்குரிமைபோதாதோ. (௬)

உலகிற்பொருள்களெல்லாமென்னுடைமையெனவேயுருத்திரனீ
டலகில்சமகத்துரைத்தானென்றறியாதுரைத்தாயதன்பொருள்
கேள்,மலையின்மடந்தைதன்பாகன்வன்னியினை.முன்போற்றியபின்,
இலகுசகலபதந்தருவானென்றுநெடுமாலையும்போற்றி (௭)

அந்தத்திருமாலருள்வழியேயாராதிக்கவிசயமுடன்
எந்தப்பொருளுமெனக்குண்டாயிடுகயாகத்தாலென்றான்
முந்தப்புருடசூத்திரத்தின்முகுந்தனுடைமையுலகெனலால்
கொந்துச்சடையானெனதென்றுகுறித்தானென்னக்கூடாதே. (௮)

எழில்சேர்நக்கனொருத்தனுமேயிரண்டாவான்மற்றிலையென்ன
அழகாகியநீடெசுவேதத்தாதிகாண்டத்திருநாலாம
மொழிசீர்பருச்சத்துரைததெனமுன்பின்பொருளைப்பாராமே
விழிமூன்றுறுடையான்பரனென்றுன்விபரீனம்வெளியிட்டாய. (௯)

வம்புசெறியுமுலையாயம்மகத்தாகியமந்திரப்பொருள்கேள்
இம்பருலகின்முன்னுளோரியாகம்வேட்குமிடந்தன்னில்
உம்பரிருந்தோரனைவருக்குமோரோர்கபாலமுபகரித்திட்
டம்பொனெழில்சேர்சாலையிடத்தங்கோர்கபாலமிருத்தலுமே. (௰)

அந்தச்சமயத்தவிப்பாகமார்பெற்றிலரென்றாராய்ந்திட்
டிந்துச்சடையானொருவனுமேயிரண்டாவான்வேறிலையென்று
சந்தித்தவனுக்காகுபசுச்சமற்பித்தாரத்தனைப்புந்தி
மந்தித்தவர்கள்கானலையுமாநீரென்றுமருளாரோ. (௧௧)

அரனுக்கங்குச்சமற்பித்தவாகுப்பசுவையரியெனநீ
விரவுமனமாச்சரியத்தால்விபரீதார்த்தங்கொள்ளுதியேல்
மருவுமங்கிமாபுருடன்வாய்த்தவாகுவடிவாகிச்
சுரைமறையப்போனபடித்துலங்குமெசுச்சிற்சொல்லுகையால். (௧௨)

அங்கிப்புருடனுருத்திரனேயன்றேவாறுலந்தவுமை
பங்கனுலகிற்றனக்கேதான்பசுவானதுமாய்முடியாதோ
அங்கண்மயிலேயிதுநிற்கவாகுவெனும்பேர்வராகத்துக்
கிங்குநிகழுநீகண்டுகேளுடியம்பிற்றில்லாமையினாலும். (௧௩)

பின்னையொரிடத்தினிற்சுருதிபெருச்சாளிப்பேராகுவென்றும
மன்னும்பன்றிதனக்குப்பேர்வராகமென்றும்வகைபிரிதநுச்
சொன்னதன்மையதனாலுந்துலங்குமாதிவராகந்தான்
அன்னநிலந்தையெடுத்ததலாலகழ்ந்ததில்லாமையினாலும. (௧௪)

ஓகக்கடலிற்றுயில்வானையோமப்பசுவென்றுரைத்திடுநல்
வேதந்துககுமுலகுக்கும்விருத்தமானபடியாலும்
தீதற்றிடமவ்வாகுபதந்திகழ்முடிகமாகையினாலும்
சூதக்கிளிநேர்மொழியாயிச்சொல்லாலொன்றும்வெல்லாதே. (௧௫)

திகழும்புருடசூத்திரத்திறறேவர்புருடப்பசுப்பிணித்து
மகமொன்றிழைத்தாரெனுமிடத்தின்மறறப்புருடன்மாலெனநீ
புகல்கின்றனையேற்சிவன்றனையும்புருடசந்தஞ்சொலலாலம்
மகிமைச்சிவனேபசுவென்றும்மறுக்கவுனக்குவழக்குண்டோ. (௧௬)

௩-வது, புருடப்பசுவிவேகப்பரிச்சேதம.

அன்னநடையாயிவைநிற்கவந்தப்புருடப்பசுவாரொன்
றுன்னிலயனேநானதனையுனக்குத்தெளியவுரைக்கக்கேள்
மன்னுமிசைசேர்மறைகள்பரவாசுதேவன்றனைப்போற்றிப்
பின்னையவன்றன்றிருமேனிப்பிறிவாநாலாம்பெருமானை. (௧)

ஆதியானகாரணனையனுருத்தப்பேருடையானை
ஓதும்பரிதிமண்டலத்துக்குயரும்பதத்திலுறைவானைச்
சோதிமயமாமவன்றனையுந்துதித்திட்டந்தச்சுடர்மூர்த்தி
தீதிலாதசெகற்சிட்டிசெய்தபடியுஞ்செப்புவதாய். (௨)

பெரிதாமந்தவனுருத்தப்பெருமானுலகப்பிரபஞ்ச
விரிவாகியசிட்டியிலிச்சைமேவுமுந்திவிராட்பகுதி

உருவானதனைப்படைத்தருளவோங்குமந்தப்பகுதிக்குத்
திரமாகியதோர்புருடனையுஞ்சித்தமுகந்துசிட்டித்தான். (௩)

அந்தப்புருடன்மந்தமதியாகியிருப்பவதனைப்பார்த்
திந்தப்படியேனிருக்கின்றாயென்றுவினவவெனக்கெந்தாய்
புந்தித்தெளிவின்மையினென்றுபோற்றிப்புகலப்பொறியளிசோ
கந்தத்துளவத்தொடையானுங்களிகூர்ந்தவன்மேற்கருணையினால். (௪)

ஆனான்மைந்தவெனையங்கியாகக்கருதியரும்பசுநீ
தானாய்வேள்விபொருந்தியரிசமூகமாகத்தழைமலரில்
தேனையந்தநெய்யாகததிகழுஞ்சாறேபவியாகத்
தூநாமஞ்சேர்கிரீட்டுமமேதொகையாகியயித்துமமாக. (௫)

விஞ்சுபார்தீவெளிநீர்கான்வேவுபுத்தியகங்காரம்
எஞ்சலில்லாவிவைதாமோரேழும்பரிதியேயாகப்
பஞ்சபூதமாத்திரையும்பகருங்கருமேந்தியமஞ்சும்
செஞ்சொன்ஞானேந்திரியமஞ்சுஞ்செறியும்புலனுந்திறமஞ்சும். (௬)

அந்தக்கரணந்தானென்றுமாகக்கூட்டிமூவேழும்
சந்தசமிதைதானாகச்சாற்றுங்கிரமந்தப்பாமல்
இந்தப்படியேமகவேள்வியிழைப்பாயிழைத்தாலெழின்ஞானம்
புந்தித்தெளிவுமுண்டாகும்புவனசிட்டிபுரியென்ன. (௭)

மகிழ்வுற்றவனுமங்கிருந்தமாலைத்தழலால்மனங்கொண்டு [செய்
தகுமப்பெருவேள்வியைத்தொடங்கித்தன்னைப்பசுவாய்ச்சமற்பணஞ்
தகிலசசிட்டிசெய்வதனுக்கமைந்தானென்றவடைவெல்லாம
முகிழ்த்தனத்தாயவெளியாகமுற்கலோபநிடஞ்சொலுமால். (௮)

௪-வது, பரந்தாமனேபசுபதியென்ற பரிச்சேதம்.

உருத்திரனையேபசுபதியென்றுரைத்தாயந்தவுண்மையுங்கேள்
அருத்திகூருமெசுவேதத்தாருங்காண்டத்திலிரண்டாம்
பருச்சமதனிற்சிவன்றனையம்பரத்தோர்போற்றிப்பயங்கரமுப்
புரத்தையெமக்காச்செயித்தருளிப்புகழாபரணம்பூணென்றார். (௧)

திரந்தங்கிமையோரீதுரைப்பத்திங்கட்கொழுந்தார்ச்சடையானும
பரிந்தங்கவரைப்பார்த்தெமக்குப்பசுவுக்கெல்லாம்பதியாக
வரந்தந்திடுதிராமாயின்மருவார்மருவிவாழ்ந்திடுமுப் [ன்.
புரந்தின்புவிமேற்பொடியாகப்பொன்றப்பொருவேன் போயென்று

நன்றென்றிமையோர்வரங்கொடுத்தார்நந்திவாகனனுமேகிப்
பொன்றிண்கிரியேசிலையாகப்பொருந்தாபுரத்தைப்பொடிசெய்தான்
அன்றுமுதலாய்ப்பசுபதியுமானானங்கேயாரணத்தில்
என்றுநதிருமால்பசுபதியென்றியம்புமியல்சேரெசுவேதம். (௩)

எண்ணுமெசுவேதத்தினிலீரிரண்டாங்காண்டத்தினின்மூன்றாய்
நண்ணும்பருச்சதத்தஞ்சதாய்நவிலுமநுவாகந்தன்னில்
வண்ணந்திகழுருத்திரப்பசுக்கள்வனதநின்பசுக்களானதெலாம்
திண்ணஞ்சசியிந்திரன்வருணாதியனைத்தெய்வமெனலாலும். (௪)

அன்னபுகழ்சேரெசுவேதத்தாதிகாண்டத்தினிலஞ்சாய
மன்னுமபருச்சத்தினின்முதலாய்வைத்தவநுவாகந்தன்னில்
துன்னுகின்றபசுக்களுக்குத்துவட்டாத்தெய்வமெனலாலும
பன்னுசிவனாமுக்கியமாயப்பகருமபசுவின்பதியென்றே. (௫)

வேள்வியதனால்வேள்விதனைவேட்டாவிண்ணோனொனுமிடத்தில
ஊழுவிலாதசிவனையத்தக்கவேள்விதானென்றாய
சூழவிவேகமிலாவிழுதைதொல்லைப்புவியிலொருவருடை
வாழைவைத்தனதென்றிறுமாந்தால்வந்துபலித்தாப்போலாமோ. (௬)

௫-வது, வேள்விப்புருடன்விவரணப்பரிச்சேதம்.

மின்னேசிவனைவேள்வியெனவேதநந்தன்னில்விளம்பிடா
தநேமியனேமகவேள்வியாகிநின்றவடைவுங்கேள்
பொன்னாகமலத்திசைமுகத்தான்புவனசிட்டிசெயமனத்தின்
உன்னாவிரவிறபகறன்னிலுகந்துசிலனைச்சிட்டித்தான். (க)

ஒவத்திறபிறந்தபேரெல்லாந்தேவராரிரவினிலுற
பவித்திட்டவாகள்சுரரொன்னப்பட்டார்முந்துபகர்தேவா
சுவற்கபதத்தைவிசசித்துச்சொல்லுமிருநான்கெனும்யோகத
தவத்தைசசெய்தார்தவப்பயன்கடாமவ்வுலகாய்த்தழைத்துளவால் (உ)

பற்றிப்பின்னுந்தவஞ்செய்தார்பயில்பூவுலகிற்பகரிருக்கும்
சொற்றம்புவலோகத்தெசுசுஞ்சுவற்கவுலகிற்சாமமுமாய்
முறறுமவிளங்கிற்றவர்தவத்தைமுயன்றார்பின்னுமுயலளவில்
மற்றொப்பில்லாவிருக்கெசுசாமங்களென்னுமறைமூன்றில். (௩)

ஓகைபெறவேயடைவினிற்காருகபத்தியமுமொளிகிளரும்
வேகமுளதக்கணாக்கினியுமிகுவாகவனீயச்சுடரும்

ஆகமுன்றும்பிறந்தவவரவற்றுந்தனியாதிருந்தவத்தில்
ஏகமனதாமாயோகத்திருந்தாரவர்களிருப்பளவில். (௪)

அந்தவங்கிகளிற்கண்களவையாயிரமுமாயிரமாம்
முந்துதாளுமாயிரமாமுகமாயிரமோர்முழுமூர்த்தி
வந்துமூளைத்தான்முளைத்தவனைவாணோவாழ்த்திவந்தனைசெய்
தெந்தைநீயாரெனவவனுமெச்சப்புருடனியானென்றான். (௫)

மின்னினிடையாயிதுசாமவேதத்திருபத்தாகுதியின்
மன்னிநின்றபிராமணத்தில்வளரத்தியாயம்மொருமூன்றில்
சொன்னதந்தப்புருடனேயேதுலங்கும்வேள்விவிண்டுவென
அன்னநடையாகமமாதேயந்தசாமவேதத்தில். (௬)

வீறுகியவப்பிராமணத்தின்மிகுமத்தியாயம்பதின்மூன்றில்
ஆறுகியகாண்டந்தன்னிலேயந்தீரப்பகர்ந்துளதால்
ஈறேதுமிலாத்திருமாலேயிலங்கும்வேள்வியென்றின்னம்
கூறுநின்றபிரமாணக்கொள்கையுனைப்பேன்குறிக்கொள்ளாய். (௭)

முந்துமிருக்குப்பிராமணத்தின்முதற்பஞ்சிகையின்மூன்றுகி
வந்துநிகழத்தியாயத்தின்மருவுநாலாங்காண்டத்தில்
விந்தைவளருமணிமார்பன்விண்டுதானேவேள்வியெனப்
பந்தியளகப்பசுங்கொடியேபார்மேல்விளங்கப்பகர்ந்திடுமே. (௮)

எசுவேதத்துமுதற்காண்டத்தேழாம்பருச்சத்தீரிரண்டாம்
வசைதீரநுவாகந்தன்னின்மாலேவேள்வியெனவுரைக்கும்
இசைகூரெசுவேதத்திரண்டாயெண்ணுங்காண்டத் திரண்டொடுமூன்
றசையாப்பருச்சத்தநுவாகத்தைஞ்சென்பதுமப்படிசொலுமால். (௯)

மொழியுமந்தமறைபின்னுமூன்றுங்காண்டமுதற்பருச்சத்
தெழில்சேர்பத்தாமநுவாகமியாகந்திருமாலென்றுரைக்கும்
அழகாமந்தக்காண்டத்திலஞ்சாம்பருச்சத்தாதியதாய்ப்
பிழைதீரநுவாகமுமாலேபெருவேள்வியெனப்பேசிடுமால். (௰)

இதலாலஞ்சாங்காண்டத்திலிரண்டாம்பருச்சத்திருநாலா
வதுதாஞகிவிளங்குமநுவாகந்தனிலுமாயவனே
இதமாம்வேள்வியென்றுரைக்கும்வேதமின்னம்வேள்வியையச்
சுதனேயென்றுபகர்ந்தமையைச்சொல்லச்சொல்லத்தொலையாதே. ()

இந்தமறையின்பொருட்கெல்லாமேற்பவிமையோரொழின்மாலைப்
புந்திமகிழ்வான்மிகுவேள்விப்புருடனென்றுபுகழ்ந்தமையைச்

சந்துதிகழுமணிமுலையாய்சாற்றும்விண்டுபுராணத்து
முந்துமஞ்சததினிலாறுமூன்றுமாமத்தியாயத்தில். (க௨)

வனசமகளைப்புரந்தரன்றன்மானேயுலகமாதாவே
புனிதவேள்விச்சகலமுமாய்ப்பொலிந்தநெடுமாறிருமார்பில்
தினமுமவாழநீமுன்னாட்செய்ததன்றோதவமென்ற
தினையநூலிலிவ்வஞ்சாமத்தியாயமியம்பிடுமால். (க௩)

எஞ்சாவேள்விவடிவாயவியனாரணனைப்பரதமுனி
விஞ்சாகுதிசேருஞ்சகலவேள்வியாலும்வேட்டுத்தன்
நெஞ்சானந்தம்விளைந்துயர்ந்தானிலமேலென்னப்பாகவதத
தஞ்சாங்கந்தத்தினிலேழாமத்தியாயமறைந்திடுமால். (க௪)

௬-வது, மகபதிதேர்ச்சிப்பரிச்சேதம்.

யாகப்பதிமாலென்பதனுக்கின்னம்பிரமாணம்பலகேள்
மாகப்புனலாங்கங்கைதனைவரநாரதமாமுனியணுகி
ஓகைபெறவேகூப்பீடுக்கொருகூப்பீடங்குயர்ந்தகன்ற
தேகக்கமடங்கிடந்ததனைத்தெரியக்கண்டுதிகைப்புற்றான். (க)

திகைத்தமுனிவன்கமடத்தைச்சேர்ந்துநீடுசெகத்தினிலுன்
மகத்துவன்றோமகத்துவென்னவரிக்கச்சபமுமவரமுனியே
புகழ்ச்சியேதுகென்றன்னைப்போலப்பதினாயிரமுயிரை
வகித்தவிந்தமாநதியின்மகிமையன்றோமகிமையென. (உ)

கங்காவானநதிமுனிவன்கண்டுபோற்றிக்கைகுவித்து
நங்காயுன்றன்மகிமைசொலநாவாயிரம்போதாதென்னப்
பொங்காநதியுமுனியேயென்போலப்பதினாயிரமாறு
தங்காகவியின்மகிமைக்குச்சரியாமகிமையிலையென்றாள். (௩)

மருவுங்கடலைமுனியணுகிவரசாகரமேயுனதன்றோ
பெருமையெனவப்பெருங்கடலும்பேசுமுனிவர்பெருமானே
இருமைபுனையுங்கடலென்போலேழுண்டதெலாமெளிதென்றும்
தரையின்மகிமைகொண்டாடத்தக்கமகிமைதானென்ன. (௪)

நிலமங்கையைநாரதனணுகிநேமிப்புவியேயுனதன்றோ
இலகுமகிமையெனவந்தவெழின்மாநிலமங்கையுஞானம்
பொலியுமுனியேநீபுகழப்பொருளோநானென்பொறைதாங்கும்
மலையின்பெருமைக்குவமானம்வகுக்கைக்கெளிதோமற்றென்றாள். (௫)

பொருப்புக்குலத்தைமுனியணுகிபபொன்னின்சிகரப்பூதரங்காள்
விருப்பம்புகழினும்மைப்போன்மேன்மைபெற்றாரெவரென்ன
உருப்பெற்றுயர்மாமலைக்குலமுமொண்மாமுனியோனான்முகனால்
வரப்பெற்றெமக்கிப்புகழென்னைமற்றங்கவன்காண்மகத்தென்ன. (௬)

வரமாமுனியுஞ்சொல்லிடமிம்மட்டேயன்றோவெனமகிழ்ந்து
பிரமாவவனையடிபணிந்துன்பெருமையன்றோபெருமையென
அருமாதவயாளிப்புகழ்ச்சிக்கருகனல்லேன்ஞானத்தின்
உரமேயெனச்சத்துவமதனாலோங்குமறையேமகத்தென்ன. (௭)

வீணைமுனியுமறைகளின்பால்மேவிப்பணிந்துவேதங்காள்
மானுவவனிதனிலுங்கண்மகிமையன்றோமகிமையெனப்
பூணுஞ்சுருதிகளுமெம்மைப்பணைவேள்விகளின்பொருட்டாகக்
காணுமவிதித்தாணைகையினாற்கணவேள்விகளேமகத்தென்ன. (௮)

சொன்னவேள்விகண்ணனெனத்துணிந்துதுவராபதிநண்ணி
மன்னுமுனியுநெடுமாலைவணங்கிவசுதேவன்மைந்தா
உன்னதன்றோமகிமையெனவுயர்தக்கணையோடொக்குமென்றான்
என்னதையந்தெளிந்ததெனவியன்மாமுனியேகுவதானான். (௯)

அவையிலிருந்தமண்டலிகரமைச்சர்மறையோரனைவோரும்
மவுனமுனிவந்தென்கேட்டான்மாலென் சொன்னான்மான்மொழிகேட்
டுவகையுடனிங்கென்றெளிந்தானோடாநின்றானென்னென்று
றுவலதறியாமுகமுகங்களைநோக்கிவியப்புற்றார். (௰)

வியப்புற்றவர்மான்மலரடியின்விழுந்துகண்ணாவிண்ணப்பம்
அயிர்த்தமுனிவந்தென்கேட்டானதற்கென்சொன்னையருளென்னச்
செயச்சக்கரக்கைத்திருமாலுந்திகழ்வெண்முறுவல்சிறிதரும்பத்
துயக்கற்றிடுமம்முனிதானேசொல்லக்கேண்மின்றொடர்ந்தென்ன. ()

அழைத்தார்முனியைநாரதனையம்போருகமொன்றுந்தியிலே
தழைத்தானுக்குமுனக்குமுளசல்லாபத்தின்சமிஞையினை
மொழித்தாம்வரவிங்குளையென்றார்முனியுமவர்கண்முகம்பார்த்தொன்
றொழித்தானிலையெல்லாஞ்சொன்னானேயென்றவருமுளந்தெளிந்தார்.

இன்னதன்மைப்பெருங்கதைதானிருமையொன் பான்புராணத்து
மின்னுமபொருளைவெளிப்படுத்தவியாதமுனிவன்விரித்துரைத்த
பன்னுஞ்செஞ்சொற்பாரதமாய்ப்பயிலுமஞ்சாம்வேதத்து
மன்னுமரிவங்கிசஞ்சொலுமிம்மட்டேயன்றுமற்றுங்கேள். (௧௩)

முகிழ்வாணகையாய்விருத்திரனுமுனைவேலவுணன்றனைக்கொன்ற
மகவான்றன்னைப்பிரமகத்திவந்துசூழ்ந்துதொடர்தலுமே
திகழ்வாளரவிற்றுயில்வானைச்சென்றுபணிந்ததேவர்பிரான்
மிகவாகியதன்குறையெல்லாம்விரித்தேவிண்ணப்பஞ்செய்தான். (கச)

குறைசொல்லியவானவர்கோவைக்கோவிந்தனுநீள்கருணையினால்
விறறங்கியவேற்புரந்தரனேவேள்விச்சொருபமாமென்னைத்
துறைமன்னியதந்திரநீடச்சுவமேகத்தாலாராதித்
துநின்மேனிப்பிரமகத்தியொழித்துக்கொள்வாயாகென்றான். (கரு)

உரைத்தபடியேவாசவனுமுயலச்சுவமேதயாகத்தால்
அருத்திகூரவேள்விவடிவாமாலாராதனைசெய்தான்
பெருத்தபிரமகத்தியுநீங்கப்பெற்றானிப்பிரமாணம்
விரித்துமொழியுமுத்தரவான்மீகராமாயணத்துளதால். (கசு)

எ-வது, வேள்விமறுத்தவேநன்சரிதப்பரிச்சேதம.

வேரிக்குழலாயிதுநிற்கவேநனென்றோர்நரபதியைப்
பாரைப்புரக்கும்படிமுனிவோர்பட்டாபிடேகமபண்ணியபின்
சீருற்றுயர்ந்தநரபாலன்செங்கோலாணைதிசைசெல்ல
வாரகிரணத்தனிக்குடைக்கீழரசுபுரக்குமந்நாளில். (க)

நீளும்வேள்விதவிர்ந்திடுகநிட்டையொழிகநியமமெல்லாம
நாளுந்துறக்கவுலகுக்குநரபாலகனேதெய்வமென
மூளுஞ்சினமும்மதகரிமேன்முழங்குமுரசமெற்றித்தான்
ஆளும்புவியோரனைவருமங்கறியத்தட்டியறைவித்தான். (உ)

முரசத்துழனிகேட்டளவேமுனிவரெல்லாமுழுதுலகாள்
அரசைப்பரிவாலாசிமொழிந்தையாவுலகத்தநாசாரம்
விரசச்சகலபலன்களையுமவிளைவித்திடுநீள்வேள்வியெலாம்
துரிசற்றிடநின்றிருவுளத்திற்றுணிந்ததுணிவென்சொல்லென்றார். (ந)

ஞானமுனிவர்தமைநோக்கிநலஞ்சேர்வேநநரபாலன்
ஏனைவேள்விப்பதிநானேயென்னிற்பெரியாரியாவர்கடற்
றானையுலகுக்கரசன்றோசகலமானதேவதையும்
ஆனபடியாலெனைச்சொல்லுமனைத்தாமநுட்டானமுமென்றான். (ச)

வரமாதவரம்மொழிகேளாமன்னுவேள்விவடிவான
பரமானந்தநாரணனேபடிமேலவனாராதனையைத்
திரமாய்நடத்திலுலகுக்குமுனக்குமெமக்குந்திகழ்முத்தி
தருமாதலினால்வேள்விகளைத்தவிர்ப்பாயலநீதானென்றார். (ரு)

மறுத்தான்வேதநரபாலன்வரமாமுனிவரதுகண்டு
வெறுத்தார்சபித்தாரவனும்போய்விண்ணுடைந்தானிக்காதை
நெறித்தாழ்வில்லாப்பராசரனார்நிகழ்த்தும்புராணமுதலஞ்சத்
தறத்தானுனபதின்மூன்றாமத்தியாயத்தறைந்திடுமால். (௬)

அ-வது, வேள்விநாயகன்பிரசன்னபரிச்சேதம்.

அகிலலோககாரணனாயகண்டபரிபூரணனாகிப்
புகலும்வேதப்பொருளாகிப்பொலியும்பச்சைப்புயல்வண்ணன்
சகலமானவேள்விகளுந்தனதுமயமேயாயிருந்துந்
திகழுமவ்வேள்விகடம்மைச்செய்யப்பணியென்செகத்தென்னில். (௧)

எனக்குக்கருமபலன்கடமிலிச்சையில்லையென்றாலும்
அனைத்துக்கருமவிதங்களுநானனுட்டிக்கின்றதகிலத்தில்
செனத்துககாசாரத்துறைகடிருத்தவென்றுமால்பாாத்தன்
மனத்துககிசைத்தவாய்மைபகவற்கீதையினில்வாய்ததுளதால். (௨)

ஆதிப்புருடனேவவ்வரியவேள்விப்பதியென்று
போதமுடனேபுகழ்ந்ததனைப்பொங்குமணஞ்சோபுரிகுழலாய
ஓதும்விண்டுபுராணத்திலோங்குமிரண்டாம்பஞ்சகததில்
தீதிலீராறுடனொன்றாய்த்திகழத்தியாயஞ்செப்பிடுமால். (௩)

வேழ்விப்பாகமாவானும்வேள்விப்பதியுநானென்று
தாழ்வற்றுயர்பாரதகீதைதன்னினெடுமால்சாற்றினனால்
வாழ்வுற்றிடுபாரதந்தன்னின்மாலேவேள்விப்புருடனெனச்
சூழவுற்றாதியந்தமெலாஞ்சொன்னதெண்ணத்தொலையாதே. (௪)

மிக்கசகலவேள்விகளும்வேள்விப்பதியும்வேட்பானும்
தக்கவேள்வித்திரவியங்கடாமும்வேள்விதரிப்பானும்
தொக்கவிருந்துக்களும்வேள்வித்துறையும்வேள்விதுய்ப்பானும்
புக்கவதனைப்புகழ்ந்துலகிற்போற்றும்வேள்விப்பொருடானும். (௫)

பன்னும்வேள்விகளின்வடிவும்பலமும்பலத்தைத்தருவானும்
என்னும்வேள்விமயமெல்லாமிலங்குந்திருமாலேயென்றும்
மின்னுஞ்சுடர்வேல்வீட்டுமனால்விரித்ததஞ்சாம்வேதத்தின்
மன்னும்விண்டுசகத்திரநாமத்துவிளங்கிவாய்த்துளதால். (௬)

புகன்றவேதப்பொருளாலும்புராணமொடுசாத்திரத்தாலும்
சகங்களங்கீகரித்திடவேசாற்றுமிதிகாசத்தாலும்
அகண்டனாகியனுபவனாயகிலாந்திரியாமியுமான
முகுந்தன்றானேவேள்வியெனுமுறைமைமொழிந்தேன்மொய்குழலே

முந்தச்சாமவேதத்துமொழிந்தவேள்விநாரணனை
இந்தப்புருடசூத்திரத்துமெசித்தாரதேவவொன்றுளதால்
அந்தத்திறமெப்படியெனிலாயிரமாயிரமாமவயவங்கள்
தொந்தித்திலங்குமுனைத்தவதுதுர்ப்புத்தியாக்குந்தோன்றுதோ. (அ)

அந்தமில்லானவயவமாயிரமாயிரமென்றளவிட்ட
தெந்தவியல்பென்றிடிலங்காயிரமென்றதுபலிலக்கணத்தால்
அந்தநெடுமாலுறுப்பொவ்வொன்றனந்தமனந்தமாயிரமென்
றிந்துநுதலாயபகர்ந்ததுமறறிதனுக்கிசைவிப்பேதென்னில. (௯)

எங்குமெங்குந்திருநயனமெங்குமெங்குந்திருவதனம
எங்குமெங்குந்திருவடிமற்றெங்குமெங்குந்திகழ்புயமென்
றங்கைசங்கந்திகிரிகளாலழகுபெறுதேவனையணங்கே
பொங்குசெஞ்சொலெசுவேதமபுகன்றுரணத்திறபோற்றியதால். (௰)

இவ்வாறருமாமறைதன்னிலிசைத்தபொருளுக்கேறகும்வண்கை
கைவாழ்திகிரித்திருநெடுமால்காட்டுமவிசுவரூபந்தை
ஐவாயரவாபரணத்தானனந்தமாகக்கண்டபடி
மைவார்குழலாய்முன்சொன்னவராகபுராணத்திலுமுளதால். (௧௧)

பின்னுமந்தசீதளவெண்பிறைசேர்வேணிப்பிரானுக்கு
மின்னுமலிறகையிராமபிரான்விசுவரூபங்காட்டியதன்
அன்னதொருவிக்கிரகத்தையனந்தமாகக்கண்டபடி
பன்னுகின்றவிரணியகர்ப்பச்சங்கிதையுமபகர்ந்திட்டேன். (௧௨)

கைகளனந்தமுகமனந்தங்கால்களனந்தமவாயனந்தம்
மெய்களனந்தமுடியனந்தமவிழிகளனந்தமவிதம்விதமாய்ப்
பைகொளரவிற்றுயில்வானைப்பார்த்தன்பார்த்துப்பணிந்தபடி
மைகொளவிழியாயகீடுபகவற்கீதையினுமவகுத்துரைத்தேன். (௧௩)

௯ - வது, புருஷசூக்தவிவரணப்பரிச்சேதம்.

நல்லாயமறறிங்கிவைதிறகநாராயணனாராதனையைச
சொல்லாநின்றவயாபுருடசூத்தஞ்சிவமந்திரமென்றுய
செல்லாவழக்காலொருவருடைசசெல்வந்தன்னைத்தித்திரிப்பு
வல்லாரொருவன்றனதென்றும்மண்மேல்வலுவேவழக்காமோ. (௧)

பழுதில்புருடசூத்திரந்தான்பயிலும்விண்டுபரமென்னும்
வழியைத்தெளியப்பகரக்கேண்மானேபுருடசொற்பொருடான்
முழுதுநிறைதல்செகத்துக்குமுன்னேயிருத்தலெப்பொருளும்
பொழிதல்சகலரிதயத்துமபூவின்மணமபோறபொலிதந்திதல். (௨)

இன்னகுணங்கணெடுமாலுக்கிசைத்தேன்முன்னுமிதுவிற்கப்
பன்னுபுருடசூத்திரத்துப்பயிலுஞ்சுவாலோபநிடத்தும்
பின்னைவாச்சநேயகமாம்பிராமணத்தும்பேருலகைத்
துன்னும்புருடனேசிட்டிசெய்தானென்றுசொல்லுகையால். (௩)

கிளரிச்சுருதிகளுக்குவியாக்கியானஞ்செய்யப்படாஞானத
துளிராவிட்டமதிக்குத்தேவச்சுவாமியென்போர்தம்மாலும
வெளியிட்டுலகின்மறைபிரித்தவியாதராலுமப்புருடன்
புளகப்புயநாரணனென்றேபொருணிச்சயித்துப்புகன்றுளதால். (௪)

அரும்புந்தனத்தாகமமானேயமருஞ்சாமவேதத்துப்
பெரும்புண்ணியமாஞ்சாமவிதிப்பிராமணத்தும்பேறுகப்
பரம்புநாலாங்காண்டத்துப்பத்தித்திறத்தாற்பலபேரும்
விரும்புஞ்சிலமந்திரங்கடமைவெவ்வேறாகப்பிரித்தெடுத்து. (௫)

இம்மந்திரங்கடேவர்பரமிம்மந்திரங்கள்கந்தபரம்
இம்மந்திரங்களகணேசபரமிம்மந்திரங்கள்சிவபரமென்
றம்மந்திரங்களவரவருக்கமைத்துப்புருடசூத்தமெனும்
மெய்ம்மந்திரத்தைநிச்சயித்துவிண்டுபரமென்றுரைத்துளரால். (௬)

எண்ணுஞ்சாந்தோக்கியோபநிடத்தெழில்சேர்புருடசூத்திரத்தை
நண்ணுமவிண்டுபரமென்றேநவிலும்வைகாநசநூலும
கண்ணன்றன்னைப்பநிடதத்துக்கருமநடத்துமிடத்தெல்லாம
திண்ணமபெறவிம்மந்திரத்தின்செபமேவினியோகஞ்சொலுமால். (௭)

இதலாறபுருடசூததிரத்துக்கிருடிசந்தந்தேவதைகள
மதுசூதனனேயல்லாதுமற்றோர்தெய்வம்வகுத்துளதோ
அதுதானிற்கவிதுவுலகத்தரியின்றிருவாராதனைக்கே
விதியானதுபோற்சிவபூசாவிதியில்வழங்கும்விதமுண்டோ. (௮)

இருடிசந்தந்தேவதைகளிலங்குபுருடசூத்திரத்துக்
குரிமைநாராயணனேயென்றுரைத்ததெங்கவிடத்தென்னில்
பெருகுபுகழ்சேர்சதபதமாம்பிராமணத்தும்பேருலகில்
சரியொன்றில்லாப்பதுமத்துத்தரகாண்டத்துஞ்சாற்றியதால். (௯)

மற்றும்பிரமாணம்பகரமானேகேள்துன்மார்க்கத்தைப்
பற்றுங்குரோபதனுக்குப்பரமபுருடசூத்திரத்தை
முற்றுநாராயணனினைவான்முயன்றுசெவிக்கப்பாதகங்கள்
இற்றெஞ்சுமெனும்விருத்தமனுவேகாதசவத்தியாயத்தில். (௰)

தனததாசையினாற்சத்தாமந்தணனைவதித்தோன்றனக்கரியை
நினைததோர்புருடசூத்திரத்தைநியாசபூர்வமேயாகத்
தனித்தேயிருந்துசெபித்திடலைத்தகுபாதகநாசமாமென்று
வினைததூய்மையதாகியவம்மாமிருதிபாரில்விரித்துளதால் (௧௧)

பாரொண்ணியசீரதருவத்திற்பகருஞ்சாந்திகருமங்கள்
ஓரொன்பதினேடொன்பதுளவுரைத்தவிந்தக்கருமத்தில்
சீரொன்றியமாலைக்குறித்துச்செய்யுஞ்சாந்திசிறப்பெய்த
நேரும்புருடசூத்திரததைநெடிதுச்சரிக்கநிகழ்ததிடுமால். (௧௨)

எண்ணும்புருடசூததிரத்திலீரொட்டாணவிருக்கினையும
கண்ணன்றிருவாராதனையைக்கருதிச்சிததங்களிகூரப்
பண்ணும்பரிவாருபசாரம்பதினாறுக்கும்விநியோகம்
நண்ணுமபடியேநாலுவாகவிலுமிருந்நாட்டியதால். (௧௩)

ஏராரவேள்வியுபத்தானமியம்புங்கற்பசூத்திரத்தில்
சோராவாய்மையுளபுருடசூக்தந்தானுமதற்குத்த
சீராமநுவாகமுமாகச்செப்புமநுவாகம்மிரண்டும்
நாராயணமென்றேவிளங்குநாமநாட்டிநவின்றுளதால். (௧௪)

மருநேர்குழலாயிங்குரைத்தமாறறத்தொடுசம்மதமாகக்
கருதும்புருடசூத்திரத்திற்கண்காண்முகமாயிரமுடையான்
ஒருமாபுருடன்றனைச்சொல்லியுலகுக்கவனேகாரணமென்
றரிதாமுந்திக்கவனருளேயன்றிவழிவேறிலையென்றும். (௧௫)

அந்தப்புருடனாரோவென்றைப்பாடொன்றணுகாமல்
இந்தப்புருடசூத்திரத்துக்கிசையுத்தரநாராயணத்தில்
முந்தச்சொன்னபுருடனையேமொழிவுற்றந்தப்புருடனுக்கா
நந்தப்புவியுமிலக்குமியுநற்பத்தினிகளெனநாட்டி. (௧௬)

முன்னோதியவம்மொழியேபோன்முத்திக்கிவன்றனருளல்லால்
பின்னோர்மார்க்கமிலையென்றுபிரசித்திபெறப்பேசியதால்
இந்நீடநுவாகம்மிரண்டுமியனாரணமென்பதுதோன்ற
நன்னாரணமாமுபனிடத்தினாராயணாநுவாகத்தும். (௧௭)

முந்தசசொன்னமொழிப்படியேமுகங்கால்கண்ணாயிரமுளவா
னந்தப்புருடனவனேநாராயணனென்றோதியதால்
இந்தப்புருடசூத்திரந்தானெழின்மால்பரமென்பதறகின்னம்
கொந்தக்குழலாய்பிரமாணங்குறிப்பாமாறுகூறக்கேள். (௧௮)

௰-வது, சதாநந்தன் சதாசிவனுக்குப்புருஷசூக்த முபதேசித்தப் பரிச்சேதம்.

தூயதிருப்பாற்கடனடுவிற்றுலங்குதந்தமயமாகி
ஏயசிகரவைசயந்தமென்னுமொருமால்வரையிடத்தில்
சேயநியமத்தொடுயோகத்தியானனாகிச்செங்கமல
மேயசதுரானனமூர்த்திவிளங்கவிருந்தமேனாளில். (க)

மாறங்கவனெறறியிற்பிறந்தமைந்தன்புவனமதித்தசிவன்
உற்றம்பரவீதியினின்றுமுயர்மாமலையில்வந்திழிந்து
சற்றுஞ்சலியாமாயோகந்தன்னிலிருந்ததந்தையிரு
பொற்றிண்கமலக்கழலிறைறன்பூவாரமகுடஞ்சேர்த்தலுமே. (உ)

தாளிறபணிந்தபுத்திரனைத்தடக்கைமலராற்பரிசித்துத்
தூளதாயேயெழுந்திரெனச்சுவாகதங்கள்பலசொல்லி
நாளெத்தனையோவுனைக்கண்டுநாளென்பதுவுநவின்றான்றன்
நீளத்தியானந்தவங்களெல்லாநிறைவேயன்றேவெனநிகழ்த்தி. (௩)

இருந்தவளவிற்சங்கரனுமெந்தாயுன்றனின்னருளால்
பெருந்தொறவத்தினியமத்திற்பிழையொன்றில்லையெனப்பேசி
விரிந்தவைராசதசபையைவிட்டிங்கிப்போதெழுந்தருளி
இருந்ததவத்தினேகாந்தமாரைக்குறித்திங்கெனவயனும. (௪)

மைந்தவைராசதநின்றும்வந்துநெடுநாளுண்டிந்தச்
சந்தார்சோலைத்தடவரைக்குச்சரியாம்புனிததலமில்லை
உந்தாதரவாலேகாந்தயோகந்தன்னிலிருப்பதுவும்
நந்தாமகிமைசோபுருடனலஞ்சோதியானங்காணென்ன. (௫)

அந்தமொழிகேட்டிளசிவனுமையாபுருடரனைவோரும்
உந்துசிட்டிகாலத்திலுன்னலன்றேவுளராரா
சந்ததமுநீதியானிக்கத்தக்கபுருடராரொன்னச
சிந்தைமகிழ்ந்துசங்கரற்குச்செந்தாமரையோனுரைசெய்வான். (௬)

புதல்வாவிங்குநீயுரைத்தபுருடரெல்லாமன்றந்த
விதமாம்புருடரனைவர்க்கும்வேறுள்ளவைக்கும்பிறப்பிடமாம்
மதமாவுரித்தவுன்றனக்குமற்றென்றனக்கும்வையகத்தில்
இதமாஞ்சகலசரீரியர்க்குமெண்ணுமுயிருக்குயிராகி. (௭)

சகலகுணனாய்நிர்க்குணனாய்ச்சகலத்துக்குஞ்சான்றாகிப்
பகவனாகிப்பரஞ்சுடராய்ப்பரமாத்துமனாய்ப்பராபரனாய்
திகழுகின்றமாபுருடன்செங்கண்ணெடுமால்காணென்றான்
புகலுஞ்சிவனுமுபதேசப்பொருளாயதனைக்கைக்கொண்டான். (அ)

கயலைப்பொருதுகுழைதாவுங்கருங்கட்சைவாகமமானே
பயிலுந்துங்கப்புவனதந்துப்பகருமிந்தப்படியெல்லாம்
சயமிக்குயர்பாரதகதையிற்றழைக்குமோட்சதருமத்தில்
இயலத்திரய நூற்றெழுபத்தேழுமெட்டுமிசைத்திடுமால். (௯)

கந்தக்களபதுணைமுலையாகமமானேயிங்கிவ்வாறு
சந்தச்சுருதியொடுநூல்கள்சாற்றிநின்றதன்மையினல்
இந்தப்புருடசூத்திரந்தானெழில்சோவிண்டுபரமெனவை
குந்தத்துக்குந்திருவாழிக்குறிக்கனுட்டவேண்டிடுமோ. (௰)

௧௧-வது, சோமச்சொல்விவரணப்பரிச்சேதம்.

மிக்கபுருடசூத்திரந்தான்விண்டுபரமேயென்பதறக்குத்
தொக்கபிரமாணம்பலவுஞ்சொல்லிமுடித்தேனதுபோக
இக்குமொழியாயசோமத்தாலெல்லாமுண்டாகின்றதென்று
துக்கவேதஞ்சொன்னதுமாசகிதன்மகிமைதானென்றுய. (௧)

தாமமணியுநறுங்குழற்கோதாயவ்விடத்திற்சாற்றியது
சோமலதையக்காணன்றிதோகைபாகனென்றனையேல்
ஏமவுரலின்முசலத்தாலிடித்துப்பிழியவினிதருந்தச
சேமமறைகள்சொலலாலசசிவனையினையசெயலாமோ. (௨)

வண்டாருகுழலாயசோமமெனவளருங்கொடியாற்றேவரெலாம்
உண்டானரோவென்றனையேலுறபத்தியையங்குரைத்ததிலைத்
தண்டாவந்தசசோமத்தாற்றணரிந்தாரிமையோர்தாமென்று
கொண்டாடியதினதிசயத்தைக்குறித்துப்பகர்ந்ததத்தனையே. (௩)

தேனேயதனுக்கின்னமொருத்தரங்கேடிகழக்கினிதேவன்
தானுந்திகளத்தனையுந்தருசூரியனைச்சாவிக்க
வானிளசுடராங்கவன்சசினையயடைவித்திடவச்சசிசகல
வானோர்களையுந்தணிக்குமெனவைகாநசசூத்திரஞ்சொலலால். (௪)

உமையாள்பங்கற்கப்பொருணியுரைத்தசோமஞ்சோமச்சொற்
கமைவாகியசந்திரன்றன்னையறைந்ததெனவுமடுத்திடுமால்
இமையோரமுதநோமொழியாயிங்குச்சொன்னபரமார்த்தம்
சமைவாகியவேள்விக்கந்தநாமஞ்சோமலதைதானே. (௫)

இன்னமுமையாள்பதிதனையங்கிசையாதமைக்கோருத்தரங்கேள்
அன்னநடையாயுலகினிலந்தணராயுளரோரனைவோரும்
மன்னுவேதாத்தியயனத்தைமதிப்பாற்செய்யுமிடந்தோறும்
பன்னுமந்தச்சோமச்சொற்பதவேட்டிதமாய்ப்பயிலாதே (௬)

௰௨-வது, உம்பர்கோனுருத்திரவன்னித்தலையைத் துணித்தப்
பரிச்சேதம்.

மஞ்சாருகுழலாயிதுநிற்கவளமாமெசுமாமறைதன்னில்
அஞ்சாங்காண்டமுதற்பருச்சத்தடலாகியதோர்சிலைபதனால்
எஞ்சாமகத்தின்றலையிற்றதென்றுசொற்கொண்டியாகமெலாம்
புன்சாதனமாலவன்சிரமேபோனதென்றுபொருள்கொண்டாய் (௧)

மொழியுமெசுவேதாரணத்துமுதலாகியசீர்ப்பருச்சத்தில்
செழுநீளபிரவற்கியகண்மஞ்செய்தவளவிலுருக்கிரனங
கிழவாகியதன்சிரம்பெறுமென்றிசைத்தலாலுமிறைவன்றன்
அழகாகியதன்சிரத்தைத்தானறுத்ததாயுமுடியாதோ. (௨)

மானேயிதற்குப்பரமார்த்தம்வளரக்கினியாமகபுருடன்
தானேறரியதிண்சிலைநாணைத்தகுமிந்திரன்மேதகுசெல்லாய
மேனாளறுக்கவில்வீசும்விசையாலந்தவிறலங்கிக்
கானதசிரந்துணிந்ததென்றுமம்மந்திரமேயறைந்துளதால். (௩)

இனிதாமிந்தப்பொருள்வெளியிட்டித்தமாமந்திரந்தானே
புனைவேள்வியிலங்கித்தலையேபொருவெஞ்சிலையாற்போனதென
முனைவேல்விழியாய்சொல்லியதுமுன்பின்சற்றும்பாராத
மனமாச்சரியரொன்றையொன்றுவகுத்துச்சொல்லமாட்டாரோ. (௪)

௰௩-வது,சிவன்கங்காதரனானபரிச்சேதம்.

சுரிவார்குழலாயிதுநிற்கச்சுடராழியநக்கருச்சுனன்செய்
திரமாம்பூசைசிவனிடத்திற்சேர்ந்ததென்றாய்செயங்கொள்ள
விரிவாநிலத்துவிழுந்ததுமல்லாகப்பாவித்தாலாமே
தருமூலத்திற்சொரிந்தபுனல்சாகையெங்குந்தழையாதோ. (௧)
தருவின்றனந்திருமாலுஞ்சாகைத்தானஞ்சிவனுமெனும்
கிரமமிருககுவேதத்திற்கிருத்திவாசன்கேசவனை
விரவுமபுந்திவேள்வியினல்வேட்டானென்னுமவ்விடத்தில்
சுரிமென்குழலாகமமானேதோன்றமுன்னுஞ்சொன்னேனே. (௨)
படியேழளந்தபரந்தாமன்பதத்திற்கங்காநதியைத்தன் [ன்
முடிமேற்றரித்ததன்மையைப்போன் முனைவேல் விசயன்முகுந்தன்ற
அடிமேற்சாத்துமலர்சிரத்திலணிந்தானக்கனதுகொண்டே
பிடிபோனடையாயவரவாதம்பெருமைசிறுமைதெரியாதோ. (௩)

ஏனையிமையோர்தமைநோக்கியிழைக்கும்பூசையெத்தனையும்
ஆனையிடருக்குதவியமாயனையேயடையுமத்திறங்கேள்
தேனினினியமொழிமடவாய்தேவரெல்லாந்திருமாலின்
மேனியெனவேவிளங்குமெசுவேதாரணத்தில்விளம்பிமோல். (௪)

மருவார்குழலாய்மற்றிந்தவாய்த்தமறைபின்பொருட்கேற்ப
அருவாயுருவாயெங்கெங்குமனைத்துக்காலத்தினுநிகழும்
பொருளானதெலாஞ்சக்கரக்கைப்புனிதன்சரீரபூதமெனத்
தனையோர்புகழும்பராசரர்வாசகமாம்புராணஞ்சாற்றியதால் (ரு)

புனிதமாமக்கினியைத்தென்புலத்தோர்தம்மைப்பூசுரனை
இனிதுபூசைசெய்கின்றரியாவரவர்களெல்லோரும்
சனனகோடிக்கெல்லாமந்தரியாமித்தத்துவமாலே
மனதுமகிழவித்தவனென்னமனுவின்மிருதிவகுத்திடுமால். (சு)

உவமையில்லாவுயர்விண்டுவொருவனந்தவொருவனுமே
புவனவியர்பகனுகிப்புகலுஞ்சகலபூதமுமாய்
அவியகவியநுகாகின்றனென்னுமனுவிலவ்வசனம்
எவருஞ்சிராத்தம்பண்ணுமிடத்தின்றுமநுட்டித்திடுகின்றார். (எ)

பார்த்தன்றன்னையவன்பொற்றேர்ப்பாகனனபரம்பரன்பார்த்
தேத்துஞ்சகலதேவர்களுமெனக்கேசரீரமவரிடத்தில்
வாய்த்தபதநிவிளைப்பவனுமியானேயந்தவடிவுதொறும்
பூத்தமலரின்மணம்போற்புக்கிருந்துபூசைகொள்வோனும். (அ)

அங்கங்கிருந்துபலமளிக்குமவனுமியானேயானலும்
தங்குமற்றைப்பலன்பெறுவர்சாமானியபுத்தியிற்றுதிப்பர்
எங்குமியானென்றருச்சிப்பாரேற்றமானபலன்பெறுவர்
பொங்குமெனதுசொருபத்தையறிந்தோர்முத்திபொருந்துவரால். (கூ)

யச-வது, இராஜததாமதபுராணஜாதிகள்கற்பிதமென்றப்
பரிச்சேதம்.

வேலேய்விழியாயிதுகேற்கவிரிஞ்சன்வணிககுலமென்றும்
மாலேயரசர்மரபென்றும்வளரிந்திரன்சூத்திரனென்றும்
கோலாகலவானதிசூடுங்குளிர்செஞ்சடிலக்கோமானே
மேலாங்குலத்தந்தணனென்றுமெய்ப்போலொன்றுவிதித்திட்டாய். ()

மைப்பொங்கியகந்தரத்தானேவளமானபிராமணனென்றும்
செப்பும்பிரபதப்பெயர்மந்திரமேயவனைத்திசைமுகற்கு
மெய்ப்பண்புளபுத்திரனென்றுவிளம்புமந்தவிரிஞ்சன்றன்
தப்பின்றியவைசியனுனற்றநயன்றனந்தணனுமே (உ)

அதுதானிற்கத்தேவர்க்குளாங்கீசுரனந்தணனென்றும்
முதிராவதிதிபுத்திரர்கண்முனைவேலரசர்குலமென்றும்
ம்திமேதையராமருத்துவர்கள்வணிகரென்றுமருத்துவர்க்குப்
பதியாமச்சுவினிதேவர்பண்பாகியசூத்திரரொன்றும். (ங)

சாதிநிலைமையிவ்வாறுசாற்றியிடும்பாரதநூலின்
மாதவனையுமபிரமனையுமாபுபிரித்துவகுத்திலதால்
தீதின்மருத்துக்கனையதுவைசியமொன்றிடலாலவருக்குள்
ஓதவுரியனுங்கண்மூன்றுடையானுயரந்தணனுமோ. (௪)

ஏந்துமழுவாளியைமறையோனென்றுபகர்ந்தபிரமாண்டம
காந்தமென்னுமபுராணமிராசததாமதமாங்கற்பினதால்
பூந்தண்குழலாய்பிரபதத்திற்புராரிதன்னைப்பிராமணனென்
றுயர்ந்ததன்மைபிரமத்தையறிவானென்றதத்தனையே. (௫)

௰௫-வது, பரமவைதீகதேவசாதுர்வருணவிவரணப்பரிச்சேதம.

பிரமந்தன்னைச்சிவனறிந்ததபெற்றிமுன்னும்பகாந்திட்டேன்
திருவின்பதியேயந்தணனத்திறமும்பகாவேன்றெளியகேள
விரியும்பொருள்சேரதருவமாமவேதசிரத்திறந்தேவகிபுத
திரனைமதுசூதனைசெப்புஞ்சிறப்பாயபிராமணனென்றே. (௧)

இனையதானமறைப்பொருளுக்கேற்பவஞ்சாமியல்வேதம்
தனிலசுவமேதமமென்னுநதழைத்தவேள்விசமயத்தில்
வனையுமமபொற்கழல்வாசுதேவனறன்னைவணங்கிமகா
சனமெல்லாருமபிராமணியதெய்வமென்றதிறஞ்சொலும்மால். (௨)

சாற்றுமகபாரதக்கதையிற்சத்தமுனிசமவாதத்து
மாறறநதனிலுநாரணனைவளமானபிராமணனெனுமால்
தேற்றமபெரியவிண்டுசகத்திரநாமத்துந்திருமாலை
ஆற்றலுடையபிராமணனென்றநேகவிதமாய்ப்புகழ்ந்திடுமால். (௩)

தருபாருலகோபுகழ்பாராசரியசிற்பமுதலான
மிகுசிற்பநன்னூல்கள்விமானத்தியல்புசொலுமிடத்தில்
திகழ்மாதவனந்தணன்முககட்சிவனுமூர்த்திசீரவணிகன்
முகநாலுடையானரசனெனமொழிந்ததனைமுன்மொழிந்தேனே. (௪)

௧௬-வது, சிவனைவேள்விப்புறம்பாகச்செய்தபரிச்சேதம.

கொடிசேர்மருங்காவிருகொங்கைக்குன்றஞ்சுமந்துகுலாவியிடும
கடிசேரோதிக்கயல்விழிச்செங்கனிவாய்ச்சைவாகமமானே
இடமாகியசீரோசுவேதத்தியல்பாயநிகழும்தற்காண்டத
தடைவாமூன்றும்பருச்சத்திலந்தத்தநுவாகந்தன்னில். (௧)

பல்லோர்புகழும்வேள்விக்குப்பதியென்றுமையாள்பதிதன்னைச்
சொல்லாநின்றவென்றனையத்தொன்மந்திரத்தின் றுணிபொருளகேள
உல்லாசசசொல்லெசுவேதத்துபயகாண்டத்தூடாடை
இல்லாதவனையபிசாரயாகபபதியென்றிருக்கையினால். (௨)

மிருத்திரமாமபிசாரவேள்விப்பதியென்றிவ்விடத்தும்
தகுமுககணனைச்சொன்னதலாற் சகலவேள்விப்பதியென்று
பகர்வுற்றதிலையதுதானெப்படி யென்றிடிலப்பசுபதிக்குத்
தொகைபெற்றிடுவானவர்களைப்போற்சோதிட்டோமாதியிலெல்லாம்.

பண்ணுமவிப்பாகப்பேறும்பகராமையினாலும்மேனாள்
எண்ணுமகத்தையழித்தானென்றிமையோரெல்லாமிகழ்ந்திவனைத
திண்ணம்வேள்விப்புறம்பாகச்செய்துச்சிட்டபாகத்தை
உண்ணென்றமையாருங்காண்டத்துரியவேதஞ்சொலலாலும். (௪)

மறமழித்தக்காண்டத்துவருத்திரமந்திரம்படித்தால்
பிற்றையொருமந்திரமதற்குப்பிராயச்சித்தஞ்சொலலாலும்
தெற்றமிகுசீர்ச்சாதுருமாஸியகன்மங்கள்செயுமிடத்து
நெற்றிவிழியான்பாராமனிராற்காப்புச்சொலலாலும். (௫)

பெருத்தசுபகன்மச்சடங்கிற்பேசுமரக்காமந்திரத்தைத்
திருத்திவாசன்மந்திரத்தைக்கிளாதென்புலத்தோர்மந்திரத்தை
உரைத்தபோதுநிலமகழ்தலொன்றுபிளத்தல்புதைத்தலுடல்
பரத்தைத்தீண்டலுயிர்த்தலிவைபண்ணவேண்டுங்காலத்தும். (௬)

பரிசுத்தியாகப்புனலைப்பரிசித்திடுதல்கடனென்று
வரிசைப்புகழாபத்தம்பம்வைகானசம்போதாயனஞ்சீர்
கருதற்கருங்காத்தியாயனங்காசினி யெண்ணியவாச்சிலாயனஞ்சொல்
தருமெய்த்திரசாங்கியாயனமாஞ்சடசூத்திரமுஞ்சொலலாலும். (௭)

௰எ-வது, சிவசாமானியதுதிபரிச்சேதம்,

இருக்குவேதத்தினிலஞ்சாயெண்ணுகாண்டத்தினிலஞ்சாம்
பருச்சமதனிலாறுகப்பயிலுமநுவாகந்தன்னில்
விரிக்கும்பீதாம்பரந்தரித்தவிண்டுவென்னும்பெருந்தருவுக
குறைக்குஞ்சாகைத்தானமதாயோதுஞ்சிவனென்றுளமூர்த்தி (௧)

திதிலாவேள்விகள்செய்துதிருமாலருள் பெற்றுயர்ந்தமையும்
ஏதமில்லாப்பாரதத்திலிராசதன்மத்தினிற்சகல
மேதவேள்விவேட்டமையும்விளம்புமந்தச்சிவன்வேள்வி
நாதனென்றான்மறைகற்றநல்லோர்க்கெல்லாங்கையன்றோ. (௨)

நாராயணனேவேள்விக்குநாதனிதற்குத்திட்டாந்தம்
தாரார்சடையான்வேள்வியினாற்றாராதித்தமைசொன்னேன்
சீரார்புருடசூத்திரத்திற்றிகழ்நான்முகன்யாகஞ்செய்தங்
கேரார்சிட்டிதொழில்கற்றவியல்புஞ்சொன்னேனி[illegible]கேற்க. (௩)

திசைமாமுகனோடுருத்திரனிந்திரனேமுதலாந்தேவர்கணி
டிசைகூர்முனிவரசுரரிராக்கதரொன்றுணாக்குமெல்லோரும்

அசையாமனத்தராய்வேட்குமவியகவியமத்தனையும்
வசைதிர்மாலையடையுமெனவளர்நாரதியம்வகுத்திடுமால் (௪)

என்றுற்படைக்கப்படும்விரிஞ்சனென்னைக்குறித்தேயாகங்கள்
பன்றுதரவிறுற்செய்துபகரும்பிரமபட்டத்தில்
மன்னுநின்றுசெகற்குருவாய்வாழ்கின்றுனென்றரிவசனம்
தன்னுற்பிறந்தவாய்மைபராசரமாமிருதிதழைத்துளதால். (௫)

நற்றுமணியோனுருத்திரன்பொன்னுடாண்டிடுமிந்திரனுசை
பற்றுமுனிவரனைவோரும்பாரோழளந்தபராபரனை
உற்றுதரித்தாராதனைசெய்துளாக்குந்தந்தமுயர்பதங்கள்
பெற்றுரொன்றுநாரசிங்கப்பெயராம்புராணம்பேசிடுமால் (௬)

தீர்த்தம்படிதன்முதலாகச்செய்யுங்கருமமனைத்தினையும்
பூத்தங்கியகாபனையினைத்துப்புரிவார்பாசப்பொறைதீர்ந்திட்
டேத்தும்பரமபதத்திருப்பரிறவார்பிறவாரொன்பதனை
வாய்த்ததக்கன்வகுத்துளாத்தவளமாமிருதிபகர்ந்திடுமால். (௭)

கன்னவிரதங்கனிந்தமொழிக்கயல்போல்விழியாயிதுநிற்கத்
தன்னைநிகர்சீர்வளரொசுவிற்சதருத்திரியந்தனிலரனை
உன்னிலொருவருயர்ந்தவரிவ்வுலகத்துண்டோவென்றுளாத்த
தென்னமொழிந்தாயன்றேநீயதனையுளாப்பேனிசையக்கேள். (௮)

வீசுபுனலோனுரைழலோன்முதலாயுள்ளவிண்ணவளா
வாசிபெறவேயேத்திடுமவ்வகைபோல்மதிவேணியின்முடித்த
ஈசன்றனையுமம்மறைதானேத்தியிட்டதித்தனையே
கூசமறவேநீயுணாந்துகொள்ளாய்முன்னுங்கூறினேன். (௯)

௰௮ - வது, திருவிழாப்பரிச்சேதம்.

மதுவார்குழலாயிதுநிற்கவளமாமூலகிற்பதிதோறும்
முதலாகியசம்பாவனையுமுந்தும்விழவுமுக்கணற்கே
இதராதிகளுக்கில்லையரனியார்க்கும்பெரியனென்றனையிவ்
விதிதான்சிவனைப்பரனென்றவிதமன்றின்னம்விளம்பக்கேள். (௧)

மிக்கவகண்டதெரிசனமாமிருதிதன்னிற்பதிதோறும்
முக்கணனுக்கேவெகுமானமுந்தச்செய்யாதொழிந்தக்கால்
தொக்கவந்தக்கிராமத்திற்றுக்கமநேகமேவுதலால்
தக்கசம்பாவனைபுரிதசாங்கிப்பொருட்டத்தனைதானே. (௨)

அந்தவகண்டதெரிசனமுமழகார்வைகாநசநூலும்
நந்துகிகிரிதரித்தாற்குநண்ணுந்திருநாணடததுங்கால்

மந்தநகையாகமமானவளருக்கிரதேவதைசாந்தி
முந்தவுரைக்குமுக்கிரர்க்குண்முதலாமவன்முக்கணனன்றே. (௩)

உரைக்கவிதற்கோருத்தரங்கேளுலகதிட்டாந்தமதாகத்
திருந்தமாகுஞ்சிவனுக்குச்சிறக்கும்விழவுசெயுமுன்னே
அருந்திகூர்பத்திரகாளித்தன்பாற்சாந்திபுரிகின்றார்
தனைக்குளந்தமாகாளிதானும்பரதத்துவமாமோ. (௪)

மருவார்குழலாயிதுநிற்கமாலேயெல்லாவானோர்க்கும்
பெரியோனென்னுந்தன்மைக்கும்பேசும்பரதத்துவமினைவால்
தரையோரவனுக்கேமுந்தச்சம்பாவனைசெய்தன்மைக்கும்
உரைசோபிரமாணம்பலவுமுண்மைப்படியேயுரைக்கக்கேள். (௫)

௰௯-வது, ஆத்துமநாயகத்துவப்பரிச்சேதம்.

தழைக்குமனுட்டுப்பிற்பெரியசந்தமில்லைத்தாரணிமேல்
இழைக்குஞ்சீரச்சுவமேதத்தேற்றமாகுமியாகமில்லைப்
பழிப்பொன்றில்லாத்தேனுவதைப்பற்றப்பெரிதாம்பசுவுமில்லை
மழைக்கொண்டலைநேர்மாயனிலுமகத்தாகியதேவருமில்லை. (௧)

என்னச்சாமவேதத்திலியல்பாநமகப்பிராமணத்தில்
மன்னுமிருபத்தாறுகிவளரத்தியாயம்பகர்ந்திடுமால்
அன்னநடையாயிதுநிற்கவைதரேயபிராமணத்தும்
தன்னைநிகரொன்றில்லாமற்றழைக்கின்றமகோபநிடத்தும். (௨)

மொழியுமிருக்கிற்பிராமணத்தின்முதற்பஞ்சிகையிலாதியினும்
அழகுபுனையுமவ்வேதத்தஞ்சாங்காண்டத்தினிலஞ்சாம்
பழுதில்பருசசத்தாதியினிற்பயிலுமநுவாகத்ததினும்
விழையுந்தெய்வகானத்தால்விளங்குஞ்சாமவேதத்தும். (௩)

தங்குஞ்சுடரக்கினிதேவன்றாழ்ந்தோன்சகலதேவர்களும்
மங்குலனையகருங்குழற்செவ்வரிவேல்விழியாய்மத்திமர்கள்
எங்கும்பரிபூரணனுணவெழில்சேர்திருமாலேயுயர்ந்தோன்
பொங்குமந்தமாயனையார்போல்வாரொன்றுபுகன்றிடுமால். (௪)

மயிலேயனையாயிவைநிற்கமண்ணுக்கங்கிபதிசோமன்
பயிறாரகைக்குப்பதியிரவிபகலுக்காதிபதிமகவான்
உயாவானவர்க்குப்பதிவருணனேதநீர்க்குப்பதிவாயு
இயல்வானுக்குப்பதிதனதனியக்கர்குலத்துக்கினியபதி. (௫)

கந்தன்சேனைக்குப்பதிவெங்காலன்பிரேதபதிநக்கன்
உந்தும்பூதபதிபிரமாவுலகங்களுக்குப்பதியெவர்க்கும

முந்தங்குனைத்தவனைத்துயிாக்குமுகுந்தன்றனேபதியென்னச
சந்தம்பயிலுக்கிரச்சிரமாஞ்சடங்கோமதகிற்சாற்றியதால். (௬)

உருவந்தேசுவியாபகஞ்சீரோங்குபுகழ்வீரியம்படைத்துப்
பிரமன்முதலாகப்பக்ரும்பெரியோர்க்கெல்லாம்பெரியோனுய்
விரவுகருணைத்தடங்கண்மால்விளங்காகின்றனெனவேதம்
மருவும்பொருளைப்பின்சொலும்வாமனமாம்புராணம்வகுததுனாக்கும்

வேதப்பனுவற்பெருங்கடையின்மேனைதயுடையோருட்புகுந்து
தீதற்றுயருந்தேவகிபுத்திரபத்கினத்தைத்தெரிந்தெடுப்பா.
போதத்தகைகயில்லார்வேறுபுன்றேவர்களாங்கன்மணியைச
சோதித்தெடுப்பாரெனப்பரத்துவாசமிருதிசொல்லியதால். (அ)

அரியின்பரமமகிமையிலோரணுவைக்கோடிகூறிட்டுத
திரியவதிலொன்றினையனந்தஞ்செய்தங்கதிலொன்றையுங்கோடி
உருவவகிர்செய்யினுமதனிலொன்றுக்கொவ்வார்தண்கமலப்
பிரமன்சிவனுதியரொன்னப்பிறித்தேநாரதியம்பேசும். (௯)

சகலபுவனங்களையுமொருதட்டுத்தனிலுமதிற்சமமாய்த்
திகழுமொருதட்டினில்வாசுதேவன்றனையுஞ்சீாதூக்கித்
தகுதிமிகுதியாராயுந்தரத்திற்றமோதரன்றனே
மகிமையுடையானென்பதற்குமற்றோருரையமில்லையென்றும். (௰)

பூதங்களுக்குமுருத்திரற்கும்பொழியுங்கிரணத்தினகரற்கும்
வேதங்களுக்கும்வசுக்களுக்குமவிண்ணோர்களுக்கும்விரிதிரைநீர்
ஓதங்களுக்குங்காலத்திறெழுக்கங்களுக்குமுலகத்தின்
பேதங்களுக்குமனைததிற்கும்பீதாம்பரனேபதியென்றும். (௧௧)

வேதங்களுமங்கியுந்தெய்வமிகுவந்தணர்க்குவியன்சாதிப்
பேதஙகளுக்கவ்வந்தணரேபேசுந்தெய்வம்பெய்வளையாக
கோதுங்கணவனேதெய்வமுயரானின்றரியார்யார்க்கும்
நீதங்கனுகாவிண்ணோர்க்குந்தெய்வந்திருமாலேயென்றும். (௧௨)

சிறந்தசெங்கைச்சுடராழித்திருமாறன்னிற்பெரியோர்கள்
இறந்தகாலநிகழ்காலமெதிர்காலத்திலில்லையென்றும்
நிறைந்தவஞ்சாம்வேதத்தினிகழ்த்துமதனுனிண்மறைகள்.
அறிந்துபுகழுந்திருமாலுக்கதிகரானபேரில்லையே. (௧௩)

உ௰-வது, பூதற்சம்பாவனைமுகுந்தனுக்கென்றபரிச்சேதம்.

அதனாற்பரதத்துவமெண்பதறிந்துவேள்வியகத்தெல்லாம்
முதலாஞ்சம்பாவனைசெய்வார்முகுந்தன்றனக்கம்முறையுங்கேள்

பதமாகியசீரொசுவேதம்பயிலுஞ்சாகைதனிற்பனிவெண்
மதிபோனுதலாய்முதற்சம்பாவனைமாலுக்கேவகுத்துளதால். (க)

இந்தச்சுருதிச்செழும்பொருளுக்கேற்பவஞ்சாம்வேதத்தில்
சந்தம்புனையுஞ்சபாபருவந்தன்னிற்றருமநரபாலன்
டூந்துமிராசசூயத்தைமுடித்துமுதுமாமுனிக்கணமும்
மந்திரிகளும்பூபாலவகையுந்திரண்டமாசபையில். (உ)

மதிப்பாலுயரக்கிரசம்பாவனையார்க்கெடுப்பதெனக்கங்கா
நதிப்புதல்வனும்வீட்டுமன்மெய்ந்நலஞ்சேர்தருமநாண்மலர்மேல்
உதிப்பானுந்திண்கயிலாயத்துறையும்புகழ்சேருமாபதியும்
துதிப்பானுலகின்பொறைதீரச்சூழ்பாற்கடலிற்றுயினீங்கி. (௩)

வந்திப்புவியில்வசுதேவன்மதலையாகியவதரித்தான்
இந்தக்கண்ணனிருக்கின்றனிவனிற்பெரியாரினியுண்டோ
முந்தச்சம்பாவனைசெய்யாயென்னமுரசக்கொடியோனும்
அந்தப்படியேசெய்தகதையகிலந்தனிலாரறியாதார். (௪)

செழுந்திண்படைக்கச்சகதேவக்கோவுமந்தக்குழாங்காணச்
செழுந்தண்டுளவத்தொடைமாலேதேவாக்கெல்லாந்தேவனென
மொழிந்தச்சம்பாவனையீந்தான்முழுமாமலர்மாரியைவானோர்
பொழிந்திட்டனரித்திட்டாந்தம்புவனத்துக்குப்போதாதோ. (௫)

௫-வது, சகலவேள்விப்பதிநிருணயப்படலமுற்றும்.

ஆ திருவிருத்தம்-ஙகூ௪.

அரிதாசர்திருவடிகளேசரணம்.

கூ - வது, சித்தாந்தப்படலம்.

க-வது, நாராயணனையே அனந்தவேதங்களும்பரத்துவங்காட்டுகின்ற

பூரிச்சேதம்.

ஈதுநிகழ்ச்சியாதலினாலிங்குஞ்சிவனைப்பரனென்று
வேததொகுதிப்பொருள்கொண்டுவிளம்பவுனக்குவெல்லாது
பேதமுளசைவாகமமப்பிரமாணங்களென்பதுவும்
கோதைநல்லாய்முன்பகர்ந்தேன்கூறிக்கொண்டனையோவென்றலுமே.

காதுபொருந்துந்துணைவிழியாகமமானதற்குக்கட்டுரைப்பாள்
ஏதுவகையாலரிதனைநீயெண்ணும்பரனென்றிசைக்கின்றாய்
வேதமனந்தமகிலாண்டவிதங்களனந்தமெனப்புவிமேல்
ஓதுமதனையறியார்போலொருசார்வரகவுதரித்தாய். (உ)

இங்குக்கண்டவேதங்களிரண்டுமிரண்டுநாரணனைத்
துங்கப்பரதத்துவமென்றுசொன்னாற்சொல்லிற்றாமோ
மங்குற்குழலாய்காணுதமறையானதெலாமற்றானை
அங்குச்சொலுமோதெரியாதேயதனாற்பரத்தையார்கண்டார். (௩)

என்றாகமமானியம்புதலுமியலாரணவல்லியுமிசைப்பாள்
குன்றாமுலையாய்கண்கண்டகுளிர்மாமறைகூறியதன்றி
ஒன்றாற்காணுமறைவேறேயுளாக்குமோவென்றுன்னுகின்றாய்
கன்றாவின்பாலுந்திருமால்கடலிற்பாலின்சுவையன்றோ. (௪)

பாதிப்பிறைசேர்நுதன்மானேவையாடரவிற்றுயின்மேவும்
ஆதிப்பரமபுருடனையேயனந்தவேதங்களும்போற்றிச்
சோதிப்பரதத்துவனென்றுசொன்னமொழிக்கும்பிரமாணம்
வேதப்பொருளாற்பலநூலால்விரித்துத்தெளியவிளம்பக்கேள். (௫)

இயலுமெசுவேதாரணத்திலெண்ணும்பருச்சமொருமூன்றில்
பயிலுஞ்செஞ்சொலநுவாகம்பதினொன்றாயவதனிடையே
உயரும்புவனங்கியந்தாவாயோங்குநாராயணன்றனையே
நயமுந்தனந்தமாமறையுநவின்றுபரனென்றதுநாட்டும். (௬)

இந்தமறையின்பொருட்கிசையவெழில்சேர்திருமான்மணியுந்தி
வந்தபிரமன்வேதத்தைமதுகைடவர்கொண்டகலச்
சிந்தைகலங்கிமாயனைத்தோத்திரஞ்செய்தேத்துமிடந்தன்னில்
அந்தமில்லாமறைகளுனையன்றேபோற்றுமென்றறைந்தான். (௭)

தலைமேலுயர்பாரதகதையிற்றழைக்குமோட்சதருமத்தில்
நலமாகியநூற்றெழுபத்துநாலாகியவத்தியாயத்தில்
நிலையாயிடவேசொலுமிதுதானிற்கநேமிநெடுமாயன்
சிலையால்வலியதனஞ்சயற்குத்தியங்குசித்தந்தெளிவாக. (௮)

எல்லாவேதங்களினாலுமியானேயறியப்படுவானென்
றுல்லாசத்தாற்பகர்ந்தபடியுரைக்குந்தரமோவொலிவண்டார்
அல்லார்குழலாய்மூவைஞ்சாயமாருஞ்சீரத்தியாயத்தில்
பல்லோர்புகழும்படியுலகிற்பகவற்கீதைபகர்ந்திடுமால். (௯)

இனிதாகியராமாயணத்துமிம்மாநிலமேன்மறையஞ்சாய்ப்
புனைசீர்மகபாரதந்தனிலும்புகலும்படியேபொன்மாலைக்
கனமாமறையுமாதியிடைகடையெங்கெங்குந்துதிக்குமெனச்
சனமேசயருக்கிசைந்திடவைசம்பாயனருஞ்சாற்றினரால். (௰)

அருமாமறையிலக்கரங்களவையெத்தனையுண்டத்தனையும்
திருமாலுமமேயென்னுந்திறத்துக்குலகதிட்டாந்தம்
தரைமேற்சகலவந்தணருந்தாமத்தியயனந்தினந்தோறும்
உரையாநின்றறிதுவேதமோதாதவர்களுணராரோ. (௧௧)

மற்றுமந்தமறைகளுமாயனையேபரனென்றுரைக்குமெனச்
சொற்றபலநூலையுமிங்குச்சொல்லிற்பரப்பாந்துசீற்றக்
கூற்றுந்தவிரண்டங்கள்பலகோடியுளதென்றனையவ்வா
றுற்றவண்டங்களுக்கிறைவனுயர்மாலென்றுமுண்மையுங்கேள். (௪௨)

உ-வது, அண்டவுற்பத்திப்பரிச்சேதம்.

செகங்களுலத்தொருகூற்றிற்சிறக்குமென்றும்பரமபதம்
மிகுந்தமூன்றுகூற்றினிற்றழைக்குமென்றுமிந்தவிபூதிகட்குப்
புகழ்ந்தமதுசூதனனுள்ளும்புறம்புமாய்நின்றருளுமென்றும்
சுகந்தவளகத்தாய்புருடசூத்தஞ்சொல்லுமிதற்கிசைய. (௧)

ஆலிற்றுயிலுந்திருநாபியரவிந்தத்தான்மாயையதாம்
மூலப்பகுதியினிலெண்ணமுடியாதண்டகோடியெலாம்
சீலத்தவன்றன்சங்கற்பத்திறததானீரிலெழுங்குமிழிச
சாலத்தைப்போலொருகாலந்தனிலேதோற்றந்தருமென்றும். (௨)

தோற்றமானவித்தொன்றிற்றுங்கத்தருவுண்டாயதிலே
ஏற்றவிததுப்பலதோன்றியெல்லாவித்துந்தருவாகச்
சாற்றும்புவியிற்றழைக்கின்றதன்மையெனவுஞ்சலத்தினிடைக்
காற்றின்விசையாலுறுதிவலைக்கணங்கள்விளையும்பரிசெனவும். (௩)

முகுந்தனுயர்சங்கற்பத்தான்மூலப்பகுதியிடைநின்றும்
திகழ்நதவந்தவகிலாண்டஞ்சிறந்துற்பன்னமாமென்றும்
உகந்துவண்டகோடிக்குமுறையுஞ்சீவகோடிக்கும்
தகுந்தண்டுளவத்திருமாலேதானேயாதாரகனென்றும். (௪)

கருத்திலையந்தெளிவாகக்கனமாமயித்திரேயர்க்கு
விரிததபுகழ்சேர்பராசரனர்விளம்பும்விண்டுபுராணத்துள்
அருத்திகூரப்புவியோராதரிக்குமிரண்டாமஞ்சகததில்
திருத்தமாகவேழாமத்தியாயந்தன்னிற்செப்பியதால். (௫)

பத்திநகையாயிதுநிற்கப்பாகவதத்துத்தசமாங்கந்
தத்திலீரேழதுவாகித்தழைக்குஞ்சீரத்தியாயத்தில்
வைத்தமலராசனவேதாவற்சாபகாரஞ்செயுநாளில்
மூத்தர்புகழும்படிநின்றமுளரிக்கண்ணன்பதம்பணிந்து. (௬)

என்றபருதியிளவெயில்வந்தெறிக்குஞ்சாலமார்க்கத்தில்
தோன்றும்பரமாணுத்தொகைபோற்சுடர்மாலையுன்வடிவத்தில்
ஊன்றுமுரோமவொழுங்குதொறுமுண்டாகாநின்றுளிர்கின்ற
ஆன்றமகிமையகிலாண்டமமர்ந்தவதிலோரண்டத்தில். (௭)

உறையுந்தமியேனுயெண்சாணுடம்பையெடுத்தவொருநானோ
மறையுமுடிவுகாணவுன்மகிமைதுதிப்பேன்மதித்தென்றான்

நறுமென்குழலாயண்டங்கணாராயணன்பால்வைகுமது
துறைமன்னியவிச்சுவரூபஞ்சொன்னவிடத்துஞ்சொன்னேனே. (அ)

அத்தன்மையிலுலகிலாண்டமனந்தமுளதென்பதுமெய்யே
யொத்துமிந்தவண்டங்கள்மிகுருத்திராண்டம்பிரமாண்டம்
மொய்த்தகெருடாண்டங்களெனமொழியுந்திரத்துநாமத்தால்
வைத்துவழங்கும்வழங்கிலுமென்மற்றங்கவர்கள்பதியாகார. (௯)

அலகற்றுயரும்பதிதோறுமதிகாரியர்வேறுறலும்
உலகுக்கெல்லாமதிபதியாயொருகோலோச்சுநிருபனைப்போல்
பலவர்க்கமதாய்வகுத்தெண்ணப்பட்டவண்டங்களுக்கெல்லாம்
தலைமைத்தேவன்சங்காழிதரிக்குந்தாமோதரன்றனே. (௰)

திரமாமிந்தமொழிதனக்குத்திட்டாந்தமுநீதெளியக்கேள்
பிரமாண்டமெனவிவ்வண்டம்பேராயிருக்கப்பீதகவம்
பரநாரணனேபதியானபடிகண்டதுபோற்பலகோடி
தரமாமண்டங்களுக்குமவன்றனேபரனென்றுளந்தெளியாய். (௧௧)

௩-வது, சம்மதப்பரிச்சேதம்.

மருத்தண்குழாயிதுநிற்கமாலேபரனென்பதுமவன்றன்
பரத்துவத்துக்குவைதிகநூல்பகரச்சங்கைபெறுவெனவும்
உரைத்ததிருமால்சங்கரனுக்குயிருக்குயிராயுள்ளிருந்தும்
புரத்தையெரித்தும்விடநுகர்ந்தும்பொருந்துலீலைபுரிந்ததுவும். (௧)

வாழுநெடுமாலவதாரவரவிக்கிரகமானதெலாம்
சூழுங்கருமவசத்தன்றிச்சுபாவலீலையாய்த்தோன்றித்
தாழ்வற்றுயரப்பிராகதமாய்ச்சச்சிதானந்தமுமாகிக்
கேழுற்றறித்தந்தானன்றிக்கிளர்ந்தேயிருக்குமென்பதுவும். (௨)

மற்றத்திருமாலவதாரமருவுமிடத்துமதிச்சடையோன்
வெற்றித்தயரதாதியரைவிரும்பிப்பணிந்ததிறமாமுன்
பெற்றவறபாலனமாகப்பெருத்தவசுரர்மோகனத்தைப்
பற்றப்புவியின்மானிடர்போற்பாவித்திட்டானென்பதுவும். (௩)

கோபத்துருவமானசிவன்கோகனகத்தான்முதலானோர்
சாபத்துவக்கிற்கன்மத்திற்சம்பந்தித்தோனென்பதுவும்
நாபித்தலத்திற்புவிமலர்ந்தநாராயணனேயங்கவர்கள்
ஆபத்துக்குத்துணையாகியருள்செய்தனனென்பதுதானும். (௪)

செருந்தார்சடிலச்சிவன்முதலாந்தேவர்தம்மைத்தியானித்துப்
பரிந்தாதரித்தார்க்கவர்நல்கும்பதமத்திரங்களென்பதுவும்
பெருந்தாரணிமேற்சிவபரமாய்ப்பேசுபரதத்துவவிகற்பம்
விரிந்தேபரமார்த்தமதான்வேதவிருத்தமென்பதுவும். (௫)

அரிகாமுத்தியெல்லா நமக்கெயாவதையாகமாகி
விரிவாகியமோகனநூலமேலைத்தச்சிவனே முதல் முனிவோர்
கருதாதரவாலோதுவதுகலிகாலத்துவிரைநதரிணையத்
திருவாராதனைபுவியோர்செய்யாதொழியவென்பதுவும். (௬)

மாயனாராதனைதானேமறையோர்ககத்தமென்பதுவும்
மேயவவன்பானிவேதியமாயவிளங்குந்திருத்தப்பிரசாதம்
தூயதிருமேனிலாஞ்சனையூர்த்துவபுண்டரமாதரிப்பதுவே
செயமுத்தியுடைவாகத்திகழ்சாதனமென்பதுதானும். (௭)

நாராயணனேசகலபலநல்குந்தேவனென்பதுவும்
சீராயவனைவருமபதமேதிரமானபதமென்பதுவும்
ஏராயவரங்கவனலகேயிலங்குமபரமபதமென்றும்
பேராயமேலாகொண்டாடப்பிரசித்திபெறவேவழங்குவதும். (௮)

பன்னும்வேதத்துடன்மாறுபடாதநூலேசாத்திகநூல்
மன்னுமிராசதநூலேயியல்பிரசய நூலென்பதுவும்
தன்னைநிகரில்லாமாலேசகலசத்தங்களினும்
மன்னிநின்றவாசகியனுய்வாழ்கின்றனென்பதுதானும். (௯)

சிவனென்முக்கணிறையரன்பாற்செய்யாநின்றவந்தனைகளும்
அவனைவரயாத்திரனென்னுமனைவுமவன்றங்கலந்தனைகளா
சுவைகூரனந்தவேதந்தாற்சொன்னசிவனையுமீறு
றெவராலுங்கண்டளவிடற்கியலாதென்னுமபதுதானும். (௰)

நாராயணனைப்படைமுதலாநாலசாங்கத்திறங்களினும்
சீராகியபொற்கமலத்தான்சிவனுதியாகடியானுமெரா
காரதனைபண்ணுவதற்குமமைந்தபரமாத்துமரூபத்தி
னராநாராயணனொருவனேயெனநிச்சயித்தபடிதானும். (௧௧)

சித்தகமலத்தயனுக்குஞ்சிவனுமூர்த்திக்குஞ்செகத்துக்கும்
சாரந்துவமுமுத்தியுமளித்தவனென்பதுவுமமாலே
ஒத்துபத்திநாசங்களுடையானலனென்பதுமவனே
சாதித்திடுமாபிரளயத்திற்றனியேயிருக்குமென்பதுவும். (௧௨)

சீலநெடுமால்தேவியராந்திருமாமகணிலத்திருயாதிச
சாலுமபடிசங்கராதியாகடவைச்சிட்டித்தாளென்பதுவும்
மேலுமவடன்கருணையிலோரிலேசம்பெற்றொருவரவரா
நாலுமுகன்முக்கணனிமையோர்காதனுக்குமென்பதுவும். (௧௩)

பகருங்காயத்திரிபொருளாயப்பரிதிவட்டந்தனிலுறைந்து
சகலசீவகோடிக்கருதரியாமியுமாய்த்தழைக்குமவன்
மகிமைநெடுமாலென்பதுவுமவளர்க்குமவேளவியனைத்துக்கும்
நிகரில்லாதவதிபதியநெடுமாலேயென்பதுவும். (௧௪)

நண்ணுமனந்தமறையாலுநாட்டும்பரதத்துவமான
கண்ணனென்றன்னைக்குறித்துமலாக்கமலாசனத்தான்சிவன்முதலோர
திண்ணமபுனையுமவேள்விகளின்றிறத்தாலாராதனைசெய்தே
எண்ணற்கரியநங்கள்பதமிளித்துபெறுவரொன்பதுவும். (க௫)

நாகத்தணையிற்றுயின்மருவுநாராயணனுங்குருவுக்குச
சாகைத்தானுஞ்சநகரனுஞ்சதுராளனுமென்பதுவும
வாகைத்திருமாலேபரமன்மலரோன்முதலோர்மந்திமாதிமுத்
தேகசெயமைதிசழுங்கிதேவனமமெனம்பதுவும (க௬)

நன்றிபுனையும்பசுந்துளவநாராயணனாராதனையே
அன்றிமுத்திக்கொருமார்க்கமயல்வேறில்லையென்பதனை
ஒன்றுடனொரிதிருமூலகத்துளளோருளநதெளியத
துன்றுசெந்சொற்றெளிபுருடசூத்தாதிகளிற்சொல்வதுவும். (க௭)

தண்டமிலவாவேதமனந்தமுநின்றேத்தத்தகுஞ்சகல
அண்டங்களுங்குமபிரமாதியனைத்தேவருக்குஞ்சருவருக்கும
முண்டகமலர்க்கிருபாதின்போகமுழுதுமுணகின்ற
கொண்டல்வண்ணன்காரணமாயிருப்பானவனையெனுங்குறியும. ()

அகத்தாயப்புறத்தாயனைத்தினுமாயணுவுக்கணுவாய்மகத்துக்கு
மகத்தாயபராமாயப்பற்றறபரமாயவளர்வுங்குறைவிலதாயச
சகத்தாயசகத்தாதாரமுமாய்ச்சகலகுணமாய்நிர்க்குணமாயப்
பகுத்தாரணங்களசொலும்பொருளின்பரப்புக்கெட்டப்படாதாகி. ()

உருவாயருவாயுயிர்க்குயிராயுணர்வுகுணாவாயொளிக்கொளியாய
துரியந்துரியாதீதமுமாயத்தோன்றும்பொருளாய்த்தோன்றுதாய
மருவாநின்றுநின்மலனுபவாககாணமனத்தாற்சொலநினைக்க
அரிதானவனுயனுபவனுயகண்டபரிபூரணனுகி. (௨௰)

காலங்கடந்துகுணங்களையுங்கடந்துநிருவிகற்பனுமாய்
ஏழுஞ்சருவஞ்ஞியனுகிலீலைக்கெல்லாமிசைசயனுய
மூலமிடையீறிலியாகிமுத்தியளிக்குமுதலாகிச
சாலும்பரத்தத்துவப்பொருளாய்சசதனுககிரகந்தானுகி. (௨க)

பேசும்பகுதிப்பற்றறப்பிராகதனுமாய்ப்பிரபுவுமாய்
விசும்புவனமனைத்தினுக்குமிதுகாரணகாரணனுகி
ஆசொன்றின்றியப்பாலைக்கப்பாலாயநின்றவனுகி
நாசதொடுதோற்றமுமில்லாஞானானந்தமயமாகி. (௨௨)

மருவாநின்றபரவத்துவாசுதேவனென்பதுவும
தமையேற்பன்னூல்கற்றுணர்ந்தோர்சகலாகமுஞ்சம்மதமாக
நியாயபறைநாலகாலுமுபநிடங்களுமுப்பத்திரண்டாலும
விரிவால்விளக்குமிருதிகளாம்விதங்களீரொன்பதினாலும். (௨௩)

பரவும்புராணத்திறங்களொருபதினெட்டாலும்பன்னுமுப
பிருதியருமூன்றுஞ்சீர்மேவுமுபபார்புராணத்தில்
நிறாவுநாளுங்குடனிரண்டாயங்கழுந்தொகையினெறியாலும
விரிபாரதராமாயணமாயவிளைபஞ்சவேதத்தாலும். (உச)

விரசங்கீதையின்றுறையாலும்வைகானசநறபஞ்சவிராத்
திரநூலாலுமுலகுக்குத்திட்டாங்குசசோதிடத்தாலும்
விரியும்பொருளாலாராயுமவேதமாம்வாகடத்தாலும்
தெரியும்யானந்தரும்வேதஞ்சிறக்கும்பரதநூலாலும். (உரு)

திண்ணம்புனையுந்நிசைக்கிரியைசங்காரத்தாற்சிறப்பெய்த
நண்ணும்புவியிறந்திறமாகநாட்டும்பிரமாணமதாகி
வண்ணநிகழுஞ்சிறப்பமெனும்வருக்கமிருசாத்திரத்தாலும்
எண்ணுஞ்சைவாகமமானேயியல்பாகவெடுத்திசைவித்தேன். (உசா)

மைந்தாகுழலாயாகையினுன்மறைபோற்றியநாராயணனுக
கெந்தேவர்களுந்தேகமதாயிருக்குமவராகையினாலும
ஓதகாமிககாரில்லாவவ்வொருவன்சகலசத்ததின்
வித்தாதாரவாச்சியனுய்விளங்குமேன்மையதனுலும். (உஎ)

கோதிலாவங்காரணனேகூறுஞ்சருவாந்தரியாமி
ஆதலாலுமவன்றன்னையாராதிக்குமபேராதி
ஓதியெந்தவிந்ததருவாயொளியாயுருவாயத்தியானித்து
மேதையுடனேயெந்தெந்தவிதத்தாற்பூசைசெய்தாலும. (உஅ)

அந்தவந்தமாந்தாகளுக்கந்தவந்தமூர்த்திகளில்
சந்தமுந்தந்திரியாமிதானாயிருந்துதக்குந்தரத்தால்
எந்தவெந்தப்பலன்களையுமீவானாராயணனேயென்
றுந்தும்பகவற்கீதைதனிலோதுமுண்மைபடியாலே. (உகூ)

ஏதமில்லாவுலகத்திலெங்குந்தானாயிருந்தருளிக
கோதில்லாதபூசையெல்லாங்கொளவானாராயணனென்றே
காதல்கூரவொன்றாகக்காணுமதுவேயறிதென்றான
ஓகைகூராகமமானுமொக்குமென்றேயுளந்தெளிந்தாள் (௩௰)

பானேர்மொழியார்தங்களிலிப்படிச்சம்மதமாய்ப்பகாதலுமே
ஞானதிகராயங்கிருந்தநன்மாமகத்தோரனைவோரும்
பூனோகுழலீரிவ்விடத்துப்புகன்றமொழியுமுத்தரமும்
மேனீரிசைந்தவுடன்பாடுமிகநன்றென்றுவியப்புற்றார். (௩க)

இன்னபடியாறசங்கரன்மாலென்னுமிருவோர்மகிமையெல்லாம்
பன்னியறிவாற்பூருவமாம்பக்கஞ்சித்தாந்தந்தோன்ற
மின்னினிடையாகமவல்லிவேதவல்லியெனுமாதா
சொன்னநாகசொன்னதமிழ்சருதியானசாத்திரத்தை. (௩௨)

மீனவுருவாய்ச்சோமுகனைவென்றுவேதங்களைப்பிரமன்
ஆனசுதனுக்களித்துலகுக்காரியாச்சாவதாரனுமாய
வானநதிநேராரணியின்வடதிரத்துவேதபுரித
தானநின்றகருமணியநந்தாமப்பெருமான்சந்நிதியில். (௩௩)

மன்னுன்மறைபோலெமக்குவகைமுழங்குமரனெனினிவுலகில்
தன்னேரில்லாவிந்நூல்போற்றுகைமபெறுநூன்மற்றில்லை
யென்னுவவையோருளமிறும்பூதெய்தத்திருக்கோயிலினின்று
மின்னுதிகரிப்படைப்பரமன்விளம்பியிட்டபடியாலும். (௩௪)

பரவுசுருதிசாத்திரசம்பன்னரானவனைவோரும்
பெருமையாளவறுசமயப்பெருமபிறருஞ்சம்மதிக்க
உரிமையானபொருள்விரித்தாங்குகந்தேயரங்கேற்றிடும்நாள்
பரமன்கரியபிரானுகந்தாபரணமளித்தபடியாலும். (௩௫)

வெள்ளைத்துகிலையிடையுடுத்துவெள்ளைக்கலன்கள் மிளிர்ந்தொளிரத்
தள்ளறகரியபெருவகைதலைகொண்டோடிச்சவைகாண
உள்ளத்தெளிவாமிந்நூறன்னெண்மாபணைத்துக்கலைமகடன்
வள்ளறகரத்தான்முறுவலித்துமகிழ்ந்தேயீந்தபடியாலும். (௩௬)

கிளரும்புகழ்சேரவ்வேதகிரியெம்பெருமான்வேதாந்தத்
தெளிவின்பயனைத்தமிழாகச்செய்தவிந்தத்திருமுறையை
ஒளிருஞ்சபையோர்கண்காணவுலகோராய்ந்ததமபத்திமன்
அளவுமெதிரேசென்றாரவங்கீகரித்தபடியாலும். (௩௭)

பரமபுஞ்சைவர்முதலாயபரவாதியாகளுளந்தெளிய
நிரம்புங்கேள்வியவைக்களத்தோராநீங்ககருமாமணிவண்ணன்
வரம்பில்சீரக்கோயிலின்முன்னர்வயங்குபெருந்தீவளாத்ததனில்
திரம்பொங்கிந்நூல்பகலளவிட்டெடுக்கத்தீயாப்படியாலும். (௩௮)

மிகுமிந்நூல்போற்றெய்வீகம்விளைந்தநூல்கள்வேறில்லைத்
தொகைமன்னியவிப்பெருநூலிறசொன்னபரமார்த்தந்தன்னில்
இகலொன்றின்றிநிறைவேறவெவருட்பட்டாரவாதமே
நீகரின்றியபூதலமீதுநீடுஞ்சருவஞ்ஞியராவார். (௩௯)

அரிதைப்பதிவாழரிதாதனருமாமறையைத்தமிழ்செய்து
விரிவற்றுணர்த்தவிருசமயவிளக்கநூலின்பரமார்த்தம்
பரிவுற்றுணர்வாரதுகேட்பாரபடிப்பார்பாராட்டுதல்செய்வா
இருமைப்பயனென்றுரைக்கின்றவிகமும்பரமும்பெறுவாரே. (௪௰)

சித்தாந்தப்படலம் முற்றும் ஆக திருவிருத்தம் ௬௩.

காண்டம் ௪௫ படலம் ௨௬௫ பரிசசேதம் ௱௩௰௫ கூடிய

திருவிருத்தம் ௨௲௰௯ இருசமயவிளக்கம் முற்றிற்று.

அரிதாசர்திருவடிகளேசரணம்.